ISSN 2424-6654



தமிழ்த் தூது

# தாயக ஒலி

THAYAKA OLI

இரு திங்கள் ஏடு

42









ஆடி - ஆவணி 2019

விலை ரூபா 100/=





# AA Accounting & Business Solutions Associates

## 265 Haydons Road / London SW19 8TY

**Accountants and Management Consultants**

***for Efficient and Quality Professional Accounting Services***

***WE SPECIALIST IN***

- Year End Accounts Preparation
- Self Assessment Tax Returns
- Vat and TAX Investigations
- Management Consultancy
- Business Plans and Cash Flow Forecasts
- Book Keeping
- Solicitors Accounts
- Payroll Preparation
- Business Startup Advice
- Management Accounts

***Also through our contacts we are able to raise Finance for New Business***

**Contact : UTHAYANAN or SASI**
**Mob: 0774 7794 358 / 07786 966 207 Tel: 020 8545 0205**
**www.aa-accounts.co.uk**




317, 317A, Galle Road,
Wellawatte, Colombo 06.
T: +94 11 250 4470, 250 0098
F: +94 11 2508934
E: info@littleasia.lk | www.littleasia.lk
skype: asia.emporium

Follow us on

73, 75A, Main Street,
\Colombo 11.
T: +94 11 2391592, 2391593
F: +94 11 2391745
E: info@littleasia.lk | www.littleasia.lk
Skype: little.asia.silk

சட்டத்தரணிகளும்
குடிவரவு ஆலோசகர்களும்



# Rasiah & Co
## Solicitors

- Conveyancing
- Residential & Commercial
- Matrimonial
- Immigration
- Landlord & Tenants

**Tel : 020 8543 4040** **Fax : 020 8543 2400**

180A, Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX : 300004 Wimbledon South
rasiahsolicitors@btconnect.com

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# தாயக ஒலி

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2050 | ஆடி - ஆவணி - 2019 | வில் - 07 | ஒலி - 42

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்.

## தாயக ஒலி

### பிரதம ஆசிரியர்

த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)

தொலைபேசி : 0094(0)718676482

### துணை ஆசிரியர்கள்

தாயகன் (இலண்டன்), சி.பவன் (இலங்கை)

### மதியுரைக் குழு

பேராசிரியர் சபா ஜெயராசா
பேராசிரியர் வ.மகேஸ்வரன்
வவுனியூர் இரா. உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

### சஞ்சிகைக் குழு

மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
மாதுமை
சி.அருந்தவன்

### வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :

| | | |
|---|---|---|
| கனடா | : | முருகேசு கிருபாகரன் |
| | | அ.பற்குணன் |
| இலண்டன் | : | சி.அருந்தவநாதன் |
| அமெரிக்கா | : | வே.பிரேமதயாளன் |
| அவுஸ்திரேலியா | : | தி.திருநந்தகுமார் |
| பிரான்ஸ் | : | ச. சச்சிதானந்தம் |

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை.
தொ.பேசி. : 0094(0)112364124
Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்.

- ஆசிரியர்

## உள்ளே ஒலிப்பவை

பேனா முனையிலிருந்து.... 02

**கட்டுரை**
- ஆரோக்கிய வாழ்வுக்கு பாலின் முக்கியத்துவம் 04
- இனவெறிக்கு எதிராக இறுதி வரைப் போராடிய மார்டின் 11
- தமிழ்மொழிக்காக வழங்கப்படும் சாகித்திய ரத்னா விருது 14
- இலக்கியக் கோட்பாடு 26
- தாய்மையின் தளர்வால் தடுமாறும் உலகம் 36
- தமிழ் சினிமாவின் வரலாறு - 2 38
- நாடகமே உலகம் 42
- கவியரசர் கண்ணதாசனின் திரையிசைப்.... 45

**சிறுகதை**
- திருமணங்களும் மறுமணங்களும் 22
- இதுவும் புதுவரவுதான் 28

**தேடிப் பெற்ற கவிதைகள்**
- பனையின் கூற்று, முடிவிலா ஆனந்தம் 10
- விருந்தோம்பல், அழைப்பு, மீண்டும் நாங்களே 13
- போற்றி உரைத்தல், தமிழால் முடியுமா? 37

**நினைவஞ்சலி உரை**
- அமரர் க.மு.தர்மராஜா அவர்களின் நினைவுப் பகிர்வு 06

**மறைந்தும் மறையாதோர்**
- நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் 09

**நடைச்சித்திரம்**
- இது ஒரு இலுப்பை மரத்தின் கதை 34

**ஆன்மீக தரிசனம்**
- சத்திய தரிசனமாகும் ஒரு சாட்சி புருஷன் 32

**நகைச்சுவைக் கதை**
- ஜோடி வாய்க்கவில்லை 52

**இலக்கியம்**
- தமிழரின் தனிப்பெருஞ்செல்வம் சிலப்பதிகாரம் 39

**உங்கள் விருந்து** 31,48

**ஏனையவை**
- இரா உதயணன் இலக்கிய விருது 03
- திருமிகு. ந.வித்தியாதரனுக்கு வாழ்த்து 10
- மனித இதயத்தின் உச்சம் 33
- வாழ்த்துப்பா 35
- தொலைபேசி பாவனையால் உடலில் மாற்றம் 44
- தாயக ஒலியின் அஞ்சலிகள் 50
- என்றும் பொருந்தும் நாற்காலிப் போராட்டம் 52

பேனா முனையிலிருந்து....

# இலங்கையின் பெருமை



"உலகிலுள்ள நாடுகள் வரிசையில், கடன் பட்டு அதனைத் திருப்பி வழங்க முடியாத நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தில் இருக்கும் பெருமையைப் பெற்றுள்ளது. மேலும் போதைப்பொருள் பாவனையுடன், போதைப் பொருட்களை விநியோகிக்கும் கேந்திர நிலையமாகவும் இலங்கை முதன்மை பெற்று நிற்கிறது" என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸ்சநாயக்கா பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார். உண்மைகளை மறைக்க முடியாது.

2005 ஆம் ஆண்டுக்குப் பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அபிவிருத்தி என்ற போர்வையில் பெற்றுக்கொண்ட பெருந்தொகையான கடன்களும் அதற்குரிய வட்டியும் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் செலுத்தப்படாத நிலையில், 2015 இல் ஆட்சியைப் பொறுப்பேற்ற அரசாங்கம் முன்பிருந்த அரசாங்கம் பெற்ற கடனையும் அதற்கான வட்டியையும் செலுத்த வேண்டும். அரசாங்கம் பெற்ற கடனால் இலங்கையின் ஒவ்வொரு பிரசையும் ரூபா ஐந்து இலட்சத்து மூவாயிரம் வரை கடனாளியாக இருக்கின்றான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடனைச்செலுத்தவும், அபிவிருத்தியைத் தொடரவும் தொடர்ந்தும் ஆட்சியிலுள்ள அரசாங்கம் கடன் பெறுவதிலேயே கங்கணங்கட்டி நிற்கின்றது கடனையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வ தற்காக பிறநாடுகளுடன் ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. கடன் மற்றும் உதவிகள் வழங்கும் போர்வையில் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை மீது மேலாதிக்கம் செலுத்தும் போக்கும் அவதானத்துக்குரியது என்று பல அரசியல் தலைவர்கள் கூறிவருகின்றார்கள். மேலும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, கொமன்வெல்த் நாடுகள் அமைப்பு என்பன காலத்துக்குக் காலம் சில அழுத்தங்களைக் கொடுத்து வருவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இலங்கைக்குக் கடனை வழங்கும் போது சில நிபந்தனைகளையும் முன்வைக்கின்றன. கடன் பணம் என்ன தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்படுவதன் உள் நோக்கம் "முதலாளித்துவம் நிலைபெறச் செய்யவேண்டும் என்பதில் காட்டும் அக்கறையேயாகும். உலக வங்கி இலங்கையின் கல்விக் கொள்கையை நிர்ணயிக்கும் நிலையில் செயற்படுவது என்பதும் பலருக்குத் தெரியாமலே இருக்கின்றது. இலவசக் கல்விக்கு ஆப்பு வைக்கும் நிலையை உருவாக்க, கல்வியை வியாபாரப் பண்டமாக்கியுள்ளார்கள். உலக மயமாக்கலின் விளைவாக பல்தேசியக் கம்பனிகள் இலங்கையில் தடம் பதித்து ஆசை வார்த்தை கூறி மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை நோக்கும் போது ஏழைப் பிள்ளைகளின் கல்வி, வேலை வாய்ப்பு எட்டாக்கனியாகப் போக, ஏழைகள் ஏழைகளாகவே தொடர்ந்திருக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். சர்வதேசப் பாடசாலைகளின் பெருக்கம் அரச பாடசாலைகள் உட்பட தனியார் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்விப் போதனை என்பவற்றால் தாய்மொழிக் கல்விப் போதனைகள் படிப்படியாகக் குறைந்து கொண்டே போகின்றன. கிராமப்புறப் பாடசாலைகளிலும், தோட்டப்புறப் பாடசாலைகளிலும் கல்விக் கற்கும் ஏழைய மாணவர்களே தமது தாய்மொழியில் கல்வியைத் தொடர்கிறார்கள். அவர்களுக்கான பல்கலைக்கழகப் பிரவேசம், தொழில் பெறுதல், எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதைக் கொள்கை வகுப்பாளர்கள் சிந்திப்பார்களா? பணம் படைத்தவர்கள் மேலும் பணக்காரராவதும், ஏழைகள் தொடர்ந்தும் ஏழைகளாக இருப்பதும் நம்நாட்டில் நிரந்தர வரலாறாகவே பதியப்பட்டுள்ளது. என்னே பெருமை!

அண்மையில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் பய பீதியைப் போக்கி இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்ய அரசியல்வாதிகளும், மதத்தலைவர்களும், சிவில் அமைப்பினரும் அயராது பாடுபட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். எமது நாட்டைப் பாதுகாக்க எல்லோரும் ஒன்று பட்டு உழைப்போம் என உறுதி பூணுவோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்....!

- ஆசிரியர்

அறிவிப்பு

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும்
இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும்
இணைந்து வழங்கும்

# இரா. உதயணன் இலக்கிய விருது – 2019

## பரிசு ரூபா 100,000/= (ஒரு லட்சம்)

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இலங்கை மற்றும் அயலக படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் இரா. உதயணன் இலக்கிய விருது வழங்கிக் கௌரவிக்கவிருக்கின்றது.

இவ்வாண்டு நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், தமிழ் வளர்ச்சி இலக்கியம், அயலகப் படைப்பாளிகளின் நூல்கள் என விருதுக்காகப் பத்து (10) நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரா. உதயணன் இலக்கிய விருதுடன் தலா ரூபா 10,000/= வீதம் ரூபா 100,000/= பணப் பரிசும் வழங்கப்படவிருக்கின்றன.

**இவ்வாண்டுக்கான விருதுத் தேர்வுக்காகப் படைப்பாளிகள் நூல்களை அனுப்பி வைக்கலாம்.**

* அனைத்துப் படைப்புகளும் முதல் பதிப்பாக இருத்தல் வேண்டும்.
* அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் தவிர்ந்த ஏனைய துறைசார் நூல்கள் அனைத்தும் இலங்கையில் வாழும் எழுத்தாளர்களினால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
* நூல்கள் இலங்கையில் பதிப்பித்திருக்க வேண்டும்.
* ISBN இலக்கம் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

**அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள்**

* உலகின் எந்தப் பகுதியில் வாழும் எழுத்தாளர்களினாலும் எழுதப்பட்டிருக்கலாம்.
* உலகின் எந்தப் பாகத்திலும் பதிப்பித்திருக்கலாம்.
* சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைசார் நூல்களை மட்டும் அனுப்ப வேண்டும்.

**தேர்வுக்கான நூல்கள்**

* **அனைத்து நூல்களும் 2018 தை முதலாம் திகதி தொடக்கம் 2018 மார்கழி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிப்பித்திருக்க வேண்டும்.**
* **தேர்விற்காக மூன்று பிரதிகள் (நூல்கள்) அனுப்பப்பட வேண்டும்.**
* **நூல்கள் யாவும் 2019.08.31 ஆந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**
* **நூல்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

இரா.உதயணன் இலக்கிய விருது - 2019
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்,
இல. 9,2/1, நெல்சன் இடம்,
கொழும்பு-06, இலங்கை.

No.9,2/1 Nelson place,
Colombo 06, Sri Lanka

# ஆரோக்கியமான வாழ்வுக்கு பாலின் முக்கியத்துவம்

பால் ஓர் ஆரோக்கியமான சீரான உணவு. நாம் உண்ணும் உணவுவகைகளில் பால் இன்றியமையாத தொன்றாகும். பால் மிகவும் சுவையுடன் இருப்பதோடு மட்டுமன்றி சத்துக்கள் அதிகம் நிறைந்த உணவுப் பொருளாகவும் விளங்குகின்றது. இத்தகைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் **ஜுன் முதலாம் திகதியை உலக பால் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.**

பாலில் கல்சியம், விட்டமின்கள், தாது உப்புக்கள், புரதம், லக்டோஸ், கொழுப்பு என்பன அடங்கியுள்ளன. உடல் ஆரோக்கியம் தரும் அமுதமாகப் பால் இருக்கின்றது. பொதுவாக மக்கள் ஆடு, பசு, எருமை, குதிரை, கழுதை, ஒட்டகம் எனப் பல விலங்குகளின் பாலை நீண்ட காலமாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். மேலும் சோயா, தேங்காய், கோதுமை, பப்பாளி, பாதாம்பருப்பு என்பவற்றிலிருந்து பெறப்படும் பால்வகைகளையும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

பசுவின் பாலைவிட எருமைப் பாலில் கொழுப்புச் சத்து அதிகம். அது போன்றே செம்மறி ஆட்டின் பாலில், வெள்ளாட்டின் பாலை விட கொழுப்புச் சத்து அதிகம் உள்ளது. மகாத்மாகாந்தி பசும்பாலைத் தவிர்த்து விட்டு ஆட்டுப் பாலையே பருகினார் என்பது வரலாறு. விலங்குகளில், குதிரைப் பாலில்தான் கொழுப்புச்சத்து மிகவும் குறைவு என்று அறியப்பட்டுள்ளது.

வளரும் குழந்தைகளுக்கு கல்சியம், புரதம் மிகவும் அவசியமான சத்துக்களாக இருப்பதால் பால் குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. எலும்புகள் நன்கு வலுவோடு இருப்பதற்கு கல்சியம் நிறைந்த பாலைத் தினமும் பருக வேண்டும். பால் உடலுக்குத் தேவையான புரதம் மற்றும் அத்தியாவசிய சத்துக்கள் நிறைந்த உணவுப் பொருளாகக் காணப்படுகின்றது. பாலிலிருந்து பெறப்படும் தயிரில், பாலில் என்ன சத்துக்கள் உள்ளதோ அதே சத்துக்கள் அதிலும் உண்டு.

உலகளவில், பால் உற்பத்தியில் அமெரிக்கா முதலிடத்திலும் இந்தியா இரண்டாமிடத்திலும் இருக்கின்றது. இந்தியாவில் ஒரு லட்சத்து முப்பதாயிரம் கூட்டுறவுப் பால் சங்கங்கள் செயற்படுகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 1.5 கோடி லீட்டர் பால் விற்பனை செய்யப்படுவதாக அறியக்கிடக்கின்றது. தனியார் துறையினரும் அரசாங்கமும் மக்களுக்கான பால் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றார்கள். அரசாங்கத்தின் ஒத்துழைப்பினால் உருவாக்கப்பட்ட "தேசிய பால் வளர்ச்சி அமைப்பு" மூலம் கிராமப்புற விவசாயிகளிடமிருந்து பால் பெறப்பட்டு, நிலைப்படுத்தப்பட்டு, பின் கொழுப்புச்சத்து செரியூட்டப்பட்டு பரவலாக விற்பனை



செய்யும் முறை உருவாகியது. ஆவின்பால் விற்பனை அங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆவின் பாலின் மாச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து ஆகியவற்றுடன் கல்சியம், பொற்றாசியம், சோடியம், மக்னீசியம் பொஸ்பேட், குளோரைட், விற்றமின் ஏ ஆகிய சத்துக்களும் உள்ளன. இது பதப்படுத்தப்பட்ட, பாலாடை நீக்கப்பட்ட பாலாகும்.



இலங்கையைப் பொறுத்தளவில் தேவைக்கேற்றளவு பால் கிடைப்ப தில்லை. அதனால் அநேகமானவர்கள் பொதி செய்யப்பட்ட பால்மாவையே உப யோகிக்கின்றார்கள். பல்தேசியக் கம்பனிகள் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் பால்மா வகைகளை விற்பனை செய்து வருகிறார்கள். அவுஸ்தி ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து பால்மா வகைகளை இறக்குமதி செய்து மக்களின் பாவனைக்காக தனியார் நிறுவனங்கள் அவற்றை விற்பனை செய்து வருகின்றன.

கால்நடை வளர்ப்பாளர்கள், கால்நடை களுக்குத் தேவையான உணவு இன்மை மற்றும் பராமரிப்பதிலுள்ள பிரச்சினைகள், நோய் போன்ற காரணங்களால் அச்செயற்பாடுகளில் அக்கறை குறைந்தவர்களாக இருக்கின்றார்கள். வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தளவில் வறட்சி காரணமாக நீரின்மை, புல்தரைகள் இன்மை அதனால் உணவுத்தட்டுப்பாடு, நோய் என்பனவற்றால் கால்நடைகள் மடிகின்றன. இந்நிலையில் கால்நடைவளர்ப்பார்கள் பால் பெறுவதில் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றார்கள். பொருளாதார ரீதியில் பின்னடைவையே எதிர்கொண்டுள்ளார்கள். இதுதான் இன்றைய இலங்கையின் நிலை, திட்ட மிட்ட செயற்பாடுகள் மூலம் இலங்கையில் பால் உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்ய வேண்டுமென்பதே பாவனையாளர்களின் வேண் டுதலாகும்.

**தாய்ப்பால்**

பிறந்த குழந்தைகளுக்கு முதல் உணவாகத் தாய்ப்பால்தான் கொடுக்கப்படுகின்றது முதல் சில தினங்கள் சுரக்கும் சீமப்பால் சத்துகளுடன் குழந்தைகளின் நோயெதிர்ப்பாற்றலுக்கும் அரு மருந்தாகிறது. குழந்தைகளுக்கு, தாய்ப்பாலைத் தொடர்ந்து ஒரு வருடம் வரை கொடுக்கவேண் டும். பிள்ளைகளுக்குத் தாய்ப் பாலே சிறந்தது. முதல் மூன்று மாதங் களுக்கு பசுவின் பாலைக் கொடுப்பதைத் தவிர்க்க வேண் டும். சிலர் இதை உணராமல் கொடுத்தால் குழந்தைகளுக்கு பல்வேறு தொற்றுக்கள் வர வாய்ப்பு ஏற்படுவதுடன் நீரிழிவு நோயும் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. தமிழ கத்தில் இரத்த வங்கிகள் இருப்பதுபோல தாய்ப் பால் வங்கிகளும் உள்ளன. தஞ்சாவூர், திருச்சி, தேனி, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் தாய்ப்பால் வங்கிகள் உள்ளன. தாய்ப்பால் சுரப்பு இல்லாதவர்கள் அல்லது கொடுக்க முடியாதவர்கள் அங்கு சென்று பெற்றுக் கொள்ளலாம்.

குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத் தில் கொண்டு, வருடம் தோறும் ஆகஸ்ட் மாதத்தில் தாய்ப்பால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு, தாய்ப்பால் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். சில தாய்மார்கள் தமது அழகு குறைந்துவிடும் என்று எண்ணி, தமது குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதைத் தவிர்த்து புட்டிப்பாலையே கொடுக்கின்றார்கள். இதனால் பல குழந்தைகள் ஆரோக்கியம் குன்றியவர்களாக இருக்கின்றார்கள் தாய்ப் பால் கொடுக்காத பெண்களுக்கே கூடுத லாக மார்பகப் புற்றுநோய் வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தாய்ப்பாலில் பசுவின் பாலை விட இரும்புச்சத்து அதிகமாக இருக்கிறது. எனவே தாய்மார்களே உங்கள் குழந்தைகளுக்கு உங்களால் முடிந்தளவுக்கு தாய்ப்பாலைக் கொடுங்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளும், தாய்ப்பால் வழங்கும் தாய் மார்களும் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்.

**-தேடலோன்-**



# அமரர் க.மு. தர்மராஜா அவர்களின் நினைவுப்பகிர்வு

நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்

அமரர் தர்மராஜாவுடன் அன்று பக்கம் பக்கமாக அமர்ந்திருந்த இதே மண்டபத்தில் அன்னாரின் நினைவுப் பகிர்வுக்காக அவர் இல்லாமல் தனித்து நின்று இன்று பேசுவது மனதிற்கு பாரமாக இருக்கின்றது. பிரபல்யமான சட்டத்தரணிகளிடமிருந்து வேலை செய்து தானும் யதார்த்த சட்டவல்லுனராக மாறியவர் அமரர் தர்மராஜா அவர்கள். என் பேச்சுக்கள், என் நீதிமன்ற தீர்ப்புக்கள் போன்றவற்றில் என்னிலும் பார்க்கப் பாண்டித்தியம் பெற்றிருந்தவர் அவர். எங்கே, எப்போது, என்ன பேசினேன், எந்தச் சட்டக்கருத்தை எவ்வாறு, எங்கு, எந்தத் தீர்ப்பின் மூலம் வெளியிட்டேன் என்றெல்லாம் தெரிந்து வைத்திருந்தார் அவர். நான் மறந்தவற்றை எல்லாம் அவர் நினைவில் வைத்திருந்தார்.

ஔவையாரிடம் முருகன் கேட்கிறான் "ஔவையே! உலகத்தில் பெரியது எது?" என்று அவரின் பதில் நீண்டதாக இருந்தாலும் சுருக்கமான பதில் பிற்காலத்தில் வெளியிட்டார்கள். அதை மட்டும் கூறுகின்றேன்.

**"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!**
**பெரிது பெரிது புவனம் பெரிது**
**புவனமோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்"**

(அரவு என்று கூறியது ஆதிசேஷனை. அதாவது இந்த விலாசமான உலகம் பெரிதாக இருப்பினும் அதைத் தாங்குகின்றவர் ஆதிசேஷன் என்ற பாம்பு என்று ஐதீகம். உலகத்தைத் தலைமேல் தாங்குவதால் ஆதிசேஷன் உலகத்திலும் பெரியது என்கிறார் ஔவையார்)

**"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்**
**பெரிது பெரிது புவனம் பெரிது**
**புவனமோ அரவினுக்கொரு தலைப்பாரம்**
**அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்**
**உமையோ இறைவர் தம் பாகத் தொடுக்கம்**
**இறைவரோ தொண்டர்தம் உள்ளத் தொடுக்கம்**
**தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"**

என்று முடிக்கின்றார் ஔவையார்.

ஆகவே உலகம் பெரிது; அதனிலும் பெரிது ஆதிசேஷன் என்ற பாம்பு. அதே பாம்பு அம்மனின் கையிலே சிறுவிரல் மோதிரமாக இருக்கின்றது. ஆகவே அம்மனே பெரியவள். ஆனால் அம்பாள் ஐயனின் உடலில் பாதி அர்த்தநாரீஸ்வரர் என்ற முறையில் சிவனின் பாதி சக்தி. ஆகவே சிவனே பெரியவர் என்று முடித்திருக்க வேண்டும் ஔவையார். அவர் அப்படிச் செய்யவில்லை. இறைவனோ அவர் தொண்டர்களின் மனதில் உறைந்திருக்கின்றார். ஆகவே சிவன் தனது தொண்டர்களின் மனதில் அடங்கி விடுகின்றார் என்கிறார். இராவணன் தன் தசைநார்களை வைத்து வீணையை மீட்டிய போது இறைவன் இராவணனுக்கு மனம் உவந்து அவன் கேட்கும் வரங்கள் எல்லாவற்றையும் அள்ளிக் கொடுக்கின்றான். தொண்டர்களின் அன்பு, திடம், வைராக்கியம் யாவும் இறைவனை அடிபணிய வைக்கின்றன. தொண்டர்கள்தான் பெரியவர்கள் அவர்களிலும் பார்க்க எதுவுமே பெரிதில்லை என்று ஔவையார் கூறும் போது நாங்கள் தொண்டர்களின் பலத்தை முற்றாக அறிகின்றோம்.

இவ்வாறான ஒரு தொண்டரே அமரர் தர்மராஜா என்று கூற வருகின்றேன். அவர் மருதநாரின் தொண்டர், ஜீ.ஜீயின் தொண்டர், எஸ்.ஆர். கனகநாயகத்தின் தொண்டர், N.T சிவஞானத்தின் தொண்டர், நண்பர் குமார் பொன்னம்பலத்தின் தொண்டர். தொண்டர் என்ற விதத்தில் அவர் மருதநாரை, ஜீ.ஜீயை, S.R, N.T சிவஞானத்தை, குமாரை விஞ்சிய ஒருவராக வாழ்ந்தார்! ஏன் கனகீஸ்வரனையும் விஞ்சியவராக வாழ்ந்தார்! அவர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஆழமாக நுழைந்து அவர்கள் செய்த ஒவ்வொரு காரியமும் சரியே என்று அடித்துக் கூறக் கூடிய ஒருவராக வாழ்ந்தார். கடைசிக் காலங்களில் இவ்வாறான மகானுபாவர்களுடன் என்னையும் சேர்த்துக்

கொண்டது தான் விந்தையிலும் விந்தை. நான் செய்தவற்றை, சிந்தித்தவற்றை சரியே என்று அடித்துக் கூறும் திறன் படைத்திருந்தவர் தர்மராஜா. நான் கூட என் நிலை பற்றிய சரி பிழையில் சிந்தனை செலுத்திய போது "இல்லை, நீங்கள் எடுத்த முடிவே சரி!" என்று ஆணித்தரமாக கூறியவர் நண்பர் தர்மராஜா அவர்கள்.

நல்ல வேளை எனக்கும் கஜேந்திரகுமாருக்கும் இடையில் முரண்பாடு வந்திருக்கும் இந்த நேரத்தில் அவர் இல்லாதது தம்பி கஜனுக்கு ஆறுதல் தான். கட்டாயம் நான் கூறுவதை ஏற்குமாறு கஜனை வற்புறுத்தி இருப்பார் திரு. தர்மராஜா அவர்கள்! கார ணம் இன்றைய நிலை அப்படி என்பதை நண் பர் தர்மராஜா நன்றாக அறிந்திருந்தவர். வடகிழக்கை துண்டாட, படையினரை நிரந்தரமாக வடகிழக்கில் வைத்திருக்க, தமிழ் பேசும் மக்களை பயங்கரவாதிகள் என்று சித்தரிக்க தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்கள் யாவுமே நடவடிக்கை எடுத்து வந்துள்ளதை அவர் அறிந்திருந்தார். கடந்த 30 வருடகால யுத்தத்தில் இழந்தவற்றை விடவும் வடகிழக்கில் எமது இருப்புக்கான அடிப்படைகளை வேகமாக நாங்கள் இன்று இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எமது அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷை களுக்கான அடித்தளங்கள் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்பட்டு வருவதை நன்கறிந்திருந்தார். காணிகள் பற்றிய சட்ட அறிவை கொண்டிருந்த அவர் நிலம் போனால் எமது அடிப்படை நிலையே போய்விடும் என்பதைப் பல தடவைகள் கூறியும் வந்துள்ளார். நிலைமை கட்டுமீறிச் சென்றுகொண்டிருக்கின்றது என்பதை தமது அந்திமகாலத்தில் கூறி அங்கலாய்த்துக் கொண்டி ருந்தவர் நண்பர் தர்மராஜா அவர்கள். பலமுள்ள கொள்கைப் பற்றுள்ள தமிழ்த் தலைவர்கள் சேர வேண்டியதன் அவசியத்தை அறிந்திருந்த காரணத்தால் எனக்கு சார்பாக தம்பி கஜனிடம் சிபார்சு செய்திருப்பார் என்று கூறுகின்றேன். கொள்கைப் பற்றுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் சேர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை நண்பர் தர்மராஜா அறிந்திருந்ததால் கஜனிடமும், கஜனின் தாயாரிடமும், அவர் கட்சி அங்கத்தவர்களிடமும் பேசி நிலைமையை புரிய வைக்கக் கூடிய ஒருவராகவே அவர் இருந்தார். கீரியும் பாம்புமாக இருந்த தமிழ்த் தலைவர்கள் முன்னர் தமிழ் மக்கள் நலம் கருதி ஒன்று சேர்ந்ததை அவர் மறந்திருக்கவில்லை. அவரின் மறைவு என்னைப் பலம் இழக்கச் செய்து விட்டது என்று கூறலாம்.

திரு.தர்மராஜா அவர்கள் மனதில் "விஸ்வாசம்" என்பது 100க்கு 100 இருப்பவனே உண்மையான மனிதன் என்ற ஒரு கருத்து ஆழமாக வேரூன்றியிருந்தது. "தமிழர்களின் மிகப் பெரிய குற்றம் என்ன தெரியுமா?" என்று கேட்பார். அது "நன்றி மறந்ததே!" என்பார். எமக்கு உதவியவர்களின் நன்றி மறந்து நாம் வாழ்ந்து வருவதாலேயே நாங்கள் இன்று இந்த கேவலமான நிலையை அடைந்துள்ளோம்" என்பார்.

**"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு"**

என்ற குறளை எடுத்துக் காட்டாகக் கூறி "செய்நன்றி கொன்ற தமிழ் மக்களுக்கு உய்வேயில்லை" என்பார். அவர்களுக்கு உய் வில்லை என்பதால்த்தான் SJV "தமிழர்களைத் தெய்வந்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினார் என்று எடுத்துக் காட்டுவார்.

எமக்கென வாழ்ந்த பல தலைவர்களை, அரசியல்வாதிகளைத் தமிழ் மக்கள் நிராக ரித்தமை, மறந்தமை, உதாசீனம் செய்தமை மிகக் கொடிய பாவம் என்று கூறுவார். அவர் வாழ்க்கையில் நன்றி, விஸ்வாசம் என்பன மிக முக்கியமானவையாக இருந்தன. யாராவது அவருக்கு உதவினால் அதற்கு மேலாக அவர் பிரதி உபகாரம் செய்வார்.

அவரின் மற்றொரு குணாதிசயத்துக்கு வருகின்றேன். "எல்லாம் சக்தி மயம்" என்பதே அது. ஆரம்ப காலங்களில் நாஸ்திகப் போக்குடையவராகவே தொடங்கிய அவர் பின்னைய காலங்களில் உலகில் நடப்பவை யாவும் ஒரு சக்தியின் செயற்பாடுகளே என்ற முடிவுக்கு வந்தார். அதனை முற்றிலும் நம்பினார். எங்கும் எலலோருக்கும் தனது கருத்தை சொல்லிக் காட்டவுந் தவறவில்லை. நான் சமய அறிவால் அறிந்து கொண்டதை அவர் அனுபவத்தால் அறிந்து கொண்டார். "எப்பவோ முடிந்த காரியம்" என்று யோகர்சுவாமி கூறியதைத் தர்க்க ரீதியாக நான் ஏற்றுக் கொண்டிருந்தேன். அவரோ

வாழ்க்கையைப் பார்த்து, மக்களின் வாழ்வுகளைப் பார்த்து. நடப்பவற்றைக் கூர்ந்து அவதானித்து அந்த முடிவுக்கு வந்திருந்தார். எல்லாம் ஒரு சக்தியின் செயற்பாடே என்பதில் அவர் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். சில நேரங்களில் எனது இந்து சமயம் பற்றிய பேச்சுக்களையே மேற்கோளாக எடுத்துக் காட்டி எல்லாம் சக்தியின் வெளிப்பாடுகளே என்று எனக்குக் கூறுவார்!



நான் சாவகச்சேரிக்கு மாவட்ட நீதிபதியாக சென்ற காலத்திலேயே தர்மராஜா என்றொருவர் இருந்ததை அறிந்திருந்தேன். பிரக்கிராசியின் லிகிதர் என்ற முறையில் ஒரு வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் தயார்படுத்தக் கூடியவர் அவர் என்று சொல்லப்பட்டது. ஆனால் அவரை நான் அப்போது சந்திக்க வாய்ப்பிருந்ததில்லை. ஆனால் அவரோ என்னை நிழல் போல தொடர்ந்து எனது ஒவ்வொரு அசைவையும் உள்வாங்கி இருந்தார். சட்டத்தரணிகள் என்னைப் பற்றிக் கூறியதை எல்லாம் அவர் தெரிந்து வைத்திருந்தார். தம்பசெட்டியைச் சேர்ந்த அட்வகேட் சோமசுந்தரம் என்பவர் எனது மிக நெருங்கிய நண்பர் சட்டத்தாலும், சரித்திரத்தாலும், அரசியலாலும், சமூகவியலாலும், தர்க்கத்தாலும், சமயக்கருத்துக்களாலும், கிரிக்கட் போன்ற விளையாட்டுக்களாலும் நாமிருவரும் அறிவு ரீதியாகவும் ஆர்வ ரீதியாகவும் பிணைந்திருந்தோம். என்னை நீதித் துறைக்குள் கொண்டு வந்ததில் அவருக்குப் பெரும் பங்கு இருந்தது. நான் நீதித்துறைக்குள் உள்நுழைய முடியாதென்றேன். என் தொழிலில் நல்ல வருமானம் வருகின்றது என்றேன். சோமா கேட்கவில்லை. ஒரு நாள் நீதித்துறைக்குள் செல்ல அனுப்ப வேண்டிய விண்ணப்ப படிவம் ஒன்றை என்னிடம் நீட்டி அதற்குக் கையெழுத்திடு என்றார். நான் முடியாது என்றேன். "நீ கையெழுத்து வைக்காவிட்டால் நான் உன் கையெழுத்தை வைத்து அனுப்புவேன்" என்றார். "நீ உன் நண்பனைக் காட்டிக் கொடுக்க மாட்டாய்" என்றும் கூறினார். நான் கையெழுத்திட்டேன். கடைசியில் நீதிபதியாகி சாவகச்சேரி வந்து சேர்ந்தேன். என் முன் திரு. சோமசுந்தரம் அவர்கள் ஒரு விவாகரத்து வழக்கில் ஆஜரானார். அவர் எவ்வளவு சமர்ப்பணங்கள் செய்தும் நான் அவரின் கட்சிக்காரருக்கு எதிராகவே தீர்ப்பளித்தேன். உடனே மற்றைய சட்டத்தரணிகளுக்குக் கூறினாராம் அவர் "சேசே! நான் தவறு செய்து விட்டேன். Frankenstein ஒன்றை உண்டாக்கி விட்டேன்!" என்று கூறினாராம்.

இதை எப்படியோ அறிந்து கொண்டு தர்மராஜா இந்தக் கதையை எனக்குக் கூறுவார். நீங்கள் பக்கச் சார்பில்லாமல் நடந்து கொண்டதால்த்தான் அவ்வாறு சோமா அவர்கள் கூறினார்கள் என்று தனது வியாக்கியானத்தையுந் தந்தார்.

கஜேந்திரகுமார் மீது அவருக்கு அலாதியான பாசமும் மரியாதையும் இருந்தது. "இந்தப்பிள்ளை நல்லதொரு சட்டவல்லுனர் வாழ்க்கையைத் தியாகம் செய்துவிட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளது. அவருக்கு என்னதான் இல்லை? ஏன் தான் கட்சி அரசியலுக்குள் சென்று சீரழிகின்றாரோ தெரியவில்லை" என்று கூறுவார். கஜேந்திரகுமார் தனது தந்தை போல் பாட்டனார் போல சட்டத்துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால் கஜனின் அரசியல் பிடிவாதம் அவருக்கு ஆத்திரத்தை ஊட்டவில்லை. பாசத்தையே கூட்டியது. தொடர்ந்து கஜேந்திரகுமார் அரசியலில் நன்றாகச் செய்ய வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். நாங்களும் கஜேந்திரகுமார் அரசியலில் நல்ல இடத்தைப் பெற வேண்டும் என்றே விரும்புகின்றோம். நாங்கள் சேர்ந்தால் எம்மால் சாதிக்க முடியாதது ஒன்றில்லை என்பது எமது கருத்து.

திரு. தர்மராஜா அவர்களின் வாழ்க்கையை உற்று நோக்குவோமானால் அவர் ஒரு யதார்த்தவாதி என்பது தெரியவரும். தீவிர உணர்ச்சி மிக்கவர். எல்லோரும் நன்றி மறக்காது வாழ வேண்டும் என்று நினைத்தவர். அவரின் மறைவு அவரோடு தொடர்பில் இருந்த சகலருக்கும் ஒரு பேரிழப்பே!

தேசவழமைக் கருத்துகள் பற்றி என்னிடம் கேள்விகள் கேட்டு தொடங்கிய அவரின் நட்பு எனது நீதிமன்ற ஓய்வின் பின்னர் வெகுவாக வளர்ந்து அவரின் அந்திம காலம் வரையில் நீடித்திருந்தது. அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன். "நாம் போமளவும் இட்டு உண்டு இருப்போமாக!" நன்றி !

# நாடகப் பேராசிரியர் பம்மல். சம்பந்தனார்



நாடக உலகின் மகான் என்று போற்றப்படுகிறவர் சங்கரதாஸ் சுவாமிகள். அவர் காலத்தில் அவருடன் சமகாலத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பல நாடக ஆசிரியர்களின் வரிசையில் அவர்களுக்கு அடுத்து போற்றப்பட வேண்டிய ஓர் மகத்தான நாடகப் பேராசிரியர் ராவ்பகதூர் பம்மல் சம்பந்த முதலியார். 21.02.1873 அன்று பம்மல் விஜயரங்க முதலியாருக்கும், அவருடைய இரண்டாவது மனைவி மாணிக்கவேலு அம்மையாருக்கும் நான்காவது பிள்ளையாக பிறந்தார். 1891-ல்'சுகுணவிலாசசபை'என்னும் பெயரில் ஓர் நாடகக் குழுவைப் பல்வேறு சமூகத்தைச் சார்ந்த கல்வியாளர்களை இணைத்துக் கொண்டு உருவாக்கினார். மேலும் அந்நாளில் நாடக நடிகர் என்றால் இழிவாகக் கருதுவார்கள். அதனைப் போக்கி, அந்த நாளிலேயே நாடக நடிகருக்கு ஓர் உயர்ந்த தகுதியை உருவாக்கியவர். அதனால்தான் அவர் நாடகப்பேராசிரியர் என்று போற்றப்படுகிறார். 1896-ல் சட்டப்படிப்பு முடித்து வக்கீலாகத் தேர்ச்சி பெற்றார். நீதிபதியாகவும் பணியாற்றினார். அவர் எழுதிய நாடகங்கள் மொத்தம் 95 ஆகும். அவர் எழுதிய நாடகங்களுள், மனோகரன் (வரலாற்று கற்பனை), யயாதி (புராணம்), ரத்னாவளி (வடமொழி தழுவல்), சபாபதி (வரிசை), அரிச்சந்திரன் (புராணம் இதிகாசம்) ஊர்வசியின் சாபம் (புராணம்), சந்திரஹரி (நகைச்சுவை), தாசிப் பெண் (அவலம் யதார்த்த நிலை), சாகுந்தலை (தழுவல் வடமொழி மூலம்), வேதாள உலகம் (வரலாறு கற்பனை) ஆகிய நாடகங்கள் நன்கு புகழ் வாய்ந்தவையாகும். அவருடைய 'மனோகரா' நாடகம் மிகுந்த புகழ் வாய்ந்தது. இந்நாடகத்தில் என் தந்தையாரும், தமிழ் நாடக மேதையுமான அவ்வை டி.கே. சண்முகம் தம் ஆறாவது வயதிலும் (பால மனோகரனாக) நடித்திருக்கிறார். பின்னர் வாலிப வயதைத் தாண்டியும் நடித்திருக்கிறார். 'இந்நாடகத்தில் வரும் மனோகரன் சங்கிலி அறுத்து ஆவேசத்துடன் வசனம் பேசும் காட்சி மிகவும் புகழ் பெற்ற ஒன்றாகும். சுமார் 85 நாடகக் குழுக்கள் இந்நாடகத்தில் நடித்திருக்கின்றனர். 860 முறை இந்நாடகம் நடிக்கப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இந்நாடகம் 'மனோகரா' என்ற பெயரிலேயே திரைப்படமாகவும் வந்து, அதில் இடம்பெற்ற கலைஞர் கருணாநிதியின் வீரவசனங்களை, நடிகர்திலகம் சிவாஜி கணேசன் தம் சிம்மக் குரலால் எழுச்சியுடன் பேசி, ஓர் வரலாறு படைத்தார் என்பதைத் தமிழுலகம் நன்கறியும்.

1951-ல் மத்திய அரசு இவருக்கு 'பத்மபூஷண்' விருது வழங்கியது. பம்மல் சம்பந்தனார் 1965-ம் ஆண்டு தமது 92-வது வயதில் காலமானார்.

**டி.கே.எஸ். கலைவாணன்**

வாழ்த்து



அகவை அறுபது கண்ட மணிவிழா நாயகன்

சிரேஷ்ட ஊடகவியலாளர்

## *திருமிகு. ந. வித்தியாதரன் அவர்களை*

'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கிறது. 'தாயக ஒலி' யின் வளர்ச்சியில் அவரின் பங்களிப்பு மகத்தானது.

---

தேடிப்பெற்ற கவிப்படைப்புக்கள்

### பனையின் கூற்று

யாழ்ப்பாணப் பகுதியில் கிராமத் தலைவனாக விளங்கியவன் 'வன்னிமை' என்றழைக்கப்பட்டான். அவனுக்கு ஓலை உதவுவதைப் பனையின் கூற்றாக அமைந்துள்ள ஈழத்து நாட்டார் பாடலென்று.....

"தூரத்து வன்னிமைக்கு
தூதோலை நானாவேன்
வாசல் வன்னிமைக்கு
வழக்கோலை நானாவேன்"

–ஆ. சிவசுப்பிரமணியன்

### 'முடிவிலா ஆனந்தம்'

"ஆனந்தமே
தாவர வர்க்கத்தின் மீதிலெல்லாம்
ஒளிப்பச்சையை விரிக்கின்றது
தாவரங்கள் உயிர்வாழ வைக்கிறது;
எல்லையற்ற அளவிலாப்
பிரபஞ்சப் பெருவெளியில்
எண்ணற்ற கதிரவங்கள் கொண்டு நிரப்புகிறது.
உலகப் பொருள்கள் எல்லாம்
இயற்கை அன்னையிடம்
ஆனந்தப்பால் குடிக்கின்றன
விலங்கும், பறவையும், மனிதனும்
அவளது மார்பின் அணைப்பில்
ஆனந்தப் பரவசம் அடைகின்றன.
புழுதியில் வீழ்ந்து கிடக்கும்
மானிட சாதிக்கு
நேசத்தின் மதுவைக் கொடுக்கிறது அது
பூச்சி புழுக்களுக்குக் காமத்தையும்
தேவ தூதர்களுக்குப் புனித மகிழ்வையும்...."

–தஸ்தயேவ்ஸ்கி

## அன்புக்கினிய சந்தாதாரர்களுக்கு அன்பு வேண்டுகோள்!

'தாயக ஒலி' யின் வளர்ச்சிக்காக ஆதரவு நல்கிக் கொண்டிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் எமது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளை, எமது வங்கிக் கணக்கில் சந்தாப் பணத்தைச் செலுத்தியவர்கள் தயவுசெய்து அதன் பிரதியை எமக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம். அதன்மூலம், உங்களுக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

இதுவரை புதிய சந்தாவைச் செலுத்தாதவர்கள் தயவு செய்து எமது வங்கிக் கணக்கில் சந்தாப் பணத்தை வைப்பிலிட்டு அதன் பிரதியை எமக்கு அனுப்பி உங்களுக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

'தாயக ஒலி'யின் தொடர் வளர்ச்சிக்கு உங்கள் ஒவ்வொருவரினதும் மேலான ஆதரவினை நன்றியுடன் வேண்டுகின்றோம்.

-ஆசிரியர் குழு

### அட்டைப்பட விளக்கம்:

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கும் திருமிகு.எஸ்.கொடகே, திருமிகு.எஸ்.முத்தையா, புரவலர் ஹாசீம் உமர், வவுனியூர் இரா உதயணன் ஆகிய பெருந்தகைகளும், இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற தமிழ்த் தென்றல் தம்பு சிவாவின் பவளவிழா மலர் வெளியீடும் கௌரவிப்பும் மிகச் சிறப்பாக நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களையும் அட்டையில் தரிசிக்கலாம்.

# இனவெறிக்கு எதிராக இறுதி வரை போராடிய மார்ட்டின் லூதர்கிங்

ஆர்.எம். ரூபன்

**15.01.2019 அன்று அவரது 90ஆவது பிறந்த தினநினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

எந்த இனம் அடிமைத்தளையிலிருந்து விடுபட வேண்டும் என்று போராடினாரோ அந்த இனம் இன்று தலைநிமிர்ந்து வீறுநடை போடுவதைப் பார்ப்பதற்கு இல்லாமல் போய்விட்டவர் தான் மார்டின் லூதர்கிங்.


அமெரிக்காவில் 60களில் கறுப்பர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறிக் கெதிராக பல அர்ப்பணிப்புகளுடனான போராட்டங்களை முன்னெடுத்து இறுதி மூச்சுவரை அந்த உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து மடிந்தவர்தான் மார்டின் லூதர் கிங் எனும் இரும்பு மனிதர்.

அவர் செய்த அர்ப்பணிப்புகளோ என்னவோ அதே கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்காவின் ஜனாதிபதி யாவ தற்கான வாய்ப்பு உருவாகியது.

மார்டின் லூதர் கிங்கின் கனவுகள் இன்று எவ்வாறு மலர்ந்துள்ளது. இன்று அதே கறுப்பர்கள் பாடகர்கள், நடிகர்கள், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் எனப் பல்துறைகளிலும் கொடிகட்டிப் பறக் கின்றனர்.

மார்டின் லூதர் கிங் அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜியா மாநிலத்தில் அட்லாண்டா நகரில் 1929ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஆல்பெட்டா கிங் மைக்கேல் லூதர் கிங் ஆகியோரின் மகனாகப் பிறந்தார்.

அட்லாண்டாமோர் ஹவுஸ் கல்லூரியில் 1948ஆம் ஆண்டு கலைமாணிப்பட்டம் பெற்று பொஸ்டன் பல்கலைக்கழகத்தில் 1955ஆம்



ஆண்டு இறையியலில் கலாநிதிப் பட்டம் பெற்றார். இதேவருடம் அலபாமாவிலுள்ள மாண்ட் கோமரி டெக்ஸ்டர் அவென்யூ பாப்பிஸ்ட் தேவாலயத்தில் பாதிரியாராகப் பொறுபேற்றார்.

பேருந்துகளில் இன ஒதுக்கு முறையை எதிர்த்து மாண்ட் கோமரியில் மேற்கொள்ளப் பட்ட 382 நாட்கள் நீடித்த பேருந்துப் புறக் கணிப்புப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார். 1957ஆம் ஆண்டில் புதிதாக தொடங்கப்பட்ட தெற்கு கிறிஸ்தவத் தலை வர்கள் கூட்டமைப்பின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

1963ஆம் ஆண்டு அலபாமாவிலுள்ள பர்மிங்காமில் நிறவெறிக்கு எதிராக நடை பெற்ற போராட்டத்திற்குத் தலைமை

தாங்கிய போது, கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். இதே ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் இரண்டரை இலட்சத் திற்கும் அதிகமானோர் பங்கேற்ற வாஷி ங்டன் நகரத்தில் நடைபெற்ற மாபெரும் பேரணிக்குத் தலைமை தாங்கிய கிங், "நான் ஒரு கனவு காண்கிறேன்" என்ற தலைப்பில் உரையாற்றினார் அந்த உரையில், "நூற் றாண்டுகள் கடந்துவிட்டன ஆனால், கறுப்பின மக்கள் இன்னமும் விடுதலை பெறவில்லை. நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் இன ஒதுக்குதல், இன வேற்றுமை என்ற பிடியில் சிக்குண்டுள்ள கறுப்பின மக்களின் வாழ்க்கை துயரத்தின் பிடியில் கட்டுண்டு கிடக்கின்றது. நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் மாபெரும் கடல் போன்ற பொருள் வளஞ்செழித்தோங்கும் நாட்டின் கறுப்பின மக்கள் தனிமைப்படுத்தப்பட்டு வறுமையில் வாழ்ந்து வரும் நிலைமை இன்னமும் தொடர்கிறது.

கண்ணியமான, கட்டுப்பாடு மிக்க, மேன்மையான பாதையிலேயே நமது போராட்டம் தொடர வேண்டும். நமது ஆக்கபூர்வமான எதிர்ப்பானது வன்முறை என்பதாகச் சீரழிந்து விட அனுமதிக்கக் கூடாது. ஆன்மீக வலிமையைக் கொண்டு வன்முறையை எதிர்கொள்ளும் கம்பீரமான மேன்மை நமக்கு வேண்டும். எத்தனை முறை வீழ்ந்த போதும் இந்த வலிமையோடு நாம் மீண்டும் எழ வேண்டும்.

விடுதலைக் கீதம் ஒலிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குடிசையிலும் விடுதலைக் கீதம் ஒலிக்கட்டும். மாநிலத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் விடுதலைக் கீதம் ஒலிக்கட்டும்." இவ்வாறு பேசிய மார்டின் லூதர் கிங் கறுப்பின மக்களினதும் வறுமைப்பட்ட மக்களுக்கா கவும் போருக்கெதிராகவும் போராடினார். நாடு முழுவதிலும் போராட்டங்கள் வெடித்த போது 7,80,000 மைல்கள் பயணஞ் செய்து 200க்கும் மேற்பட்ட கூட்டங்களில் உரை யாற்றினார்.

1970ஆம் ஆண்டின் போது வியட்நாம் குழந்தைகள் குருடாகவும் அரைகுறையான இதயங்களுடனும் குச்சி போன்ற கால் களுடனும் பிறந்தார்கள். ஒவ்வொரு வியட்நாம் குடிமகனுக்கும் 3கிலோ என்ற விகிதத்தில் நச்சு இரசாயன குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் இவையனைத்தும் "உன்னத நோக்கத்திற்காகவே" என்று அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி றீகன் குறிப்பிட்டார்.

இந்த அக்கிரமங்களும் அநியாயங்களும் மார்டின் லூதர் கிங்கை உசுப்பியது. அவருடைய மனிதநேய மனச்சாட்சி அந்த யுத்தத்திற்கு வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் அமெரிக்காவின் மூலைமுடுக்கெல்லாம் தீவிரமான யுத்த எதிர்ப்பை முன்னெடுத்து மக்களை அணிதிரட்டவும் செய்தது.

தன்னுடைய போர் எதிர்ப்பு முயற்சிகளை மார்டின் லூதர் கிங் தீவிரப்படுத்தினார். 1968ஆம் ஆண்டு ஏழைக் கறுப்பர்களையும் அறிவுஜீவிகளையும் அணிதிரட்டித் திட்ட மிட்டிருந்த ஏழை மக்களின் பிரசார இயக்க பணிகளில் முழு மூச்சாக ஈடுபட்டார். ஆனால், இந்தப் போராட்டத்தைக் காண அவர் உயிரோடு இருக்கவில்லை.

1964ஆம் ஆண்டில் மார்டின் லூதர் கிங்குக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1968ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி மாலை 6.10 மணி அளவில் டென்ன ஸியிலுள்ள மெம்பிஸ் நகரத்தில் லோரெய்ன் ஹோட்டல் பல்கனியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இப்படிப்பட்ட ஒரு கொலையின் முன்பு என்ன நடந்தது என்ற கேள்வியை விட ஏன் நிகழ்ந்தது என்ற கேள்விதான்

முக்கியமானது. மார்டின் லூதர் கிங் கொலையும் இவ்வகைப்பட்டதுதான்.

கறுப்பின மக்களை முன்னிறுத்தி அமெரிக்காவை முழுமையாக மாற்ற முனைந்த மார்டின் லூதர் கிங் படுகொலையில் பெரிய அரசியல் இராணுவப் பின்னணி இருந்தது.

இறுதியாக மார்டின் லூதர் கிங்கின் வசனங்களில் ஒன்றைக் குறிப்பிட்டு இக்கட்டுரை நிறைவு செய்யப்படுகின்றது. "இன ஒதுக்கல் என்ற இருண்ட பள்ளத்திலிருந்து வீறு கொண்டெழுந்து இனச் சமத்துவம் என்ற சூரிய ஒளி வீசும் பாதையில் நடைபோட வேண்டிய தருணம் இது. இன அநீதி என்ற சேற்றிலிருந்து நாட்டை மீட்டெடுத்து சகோரத்துவம் என்ற உறுதியான அடித்தளத்தில் அதை நிலைநிறுத்த வேண்டிய தருணம் இது. கடவுளின் குழந்தைகள் அனைவருக்கும் நீதியை வழங்குவதற்கு இதுவே உகந்த தருணம். இத்தருணத்தில் நாம் செயல்படவில்லையென்றால் நாடே ஒரு பேரழிவைச் சந்திக்கும்."

**தேடிப்பெற்ற கவிப்படைப்பு**

# விருந்தோம்பல்

தனக்குக் கிடைக்கும் சிறு உணவென்றாலும், கரைந்து தன் சுற்றத்தை அழைத்த பிறகே உண்ணுவது காக்கையின் இயல்பாகும். தனி மனிதனைக் காட்டிலும் சமூகத்திற்கு அதிக முக்கியத்துவம் நமது மரபில், காக்கையின் இந்த இயல்பு விருந்தோம்பலுக்கான ஒரு உதாரணமாக எடுத்தாளப்பட்டு வருகிறது. இதைத் தவிர மற்றொரு நம்பிக்கையும் காக்கை குறித்து நம்மிடையே தொன்றுதொட்டு வழங்கி வருகிறது. அது, இறந்துபட்ட மூதாதையர்கள் தான் காக்கைகளாக மறுபிறப்பு கொள்கிறார்கள் என்பதாகும். சிரார்த்தம், திதிக்குரிய விசேட தினங்களிலும், அமாவாசை போன்ற விரத நாட்களிலும் சமைத்தவுடன் சோறு வைத்துவிட்டு உண்ணும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. இந்நம்பிக்கையைத் தொட்டுப் பேசும் ஆத்மாநாமின் ஒரு கவிதை.....

**அழைப்பு**

இரண்டாம் மாடியில் - உப்பரிக்கையில்
ஒற்றைச் சன்னல் அருகில்
நான் என்னோடு
உணவருந்திக் கொண்டு
அருகில் வேப்பமரக்கிளை
மீதிருந்த காகம் அழைத்தது
பித்ருக்களோ தேவர்களோ
என எண்ணி
ஒரு சிறு கவளச் சாதத்தை
வெளியே வைத்தேன்
சாதம் சாதமாக
காகம் பறந்துவிட்டது
யாருடைய பித்ருக்களோ
நானறியேன்.

மரணத்திற்குப் பிறகான இருட்டை, சூன்யத்தைக் குறித்த அச்சம் மனிதனுக்குள் தொடர்ந்து இருப்பது; அந்த அச்சத்தினை எதிர்க்கொள்ளும் மூலகமாகவே இது போன்ற நம்பிக்கைகள் ஒவ்வொரு சமூகத்திலும் நிலவிவருகின்றன. கடவுளும், மதமும், அறிவியலும் அவை சார்ந்த தத்துவங்களும் சாவு குறித்த இப்புதிரை முழுவதுமாக விளக்க முடிவதில்லை. அறிவின் அந்த அறியமுடியாப் பிரதேசம்தான் இத்தகைய நம்பிக்கைகளின் வினைநிலமாகும்.

**–க. மோகனரங்கள்**

**மீண்டும் நாங்களே!**

"சில தேசங்களையும்
சில ஆட்சிகளையும்
பார்க்கும்போது
மீண்டும் நாங்களே
சிம்மாசனம் ஏறிவிடலாமா
என்று யோசிப்பதுண்டு"

**–மேத்தா**

# தமிழ்மொழிக்காக வழங்கப்படும் சாஹித்திய ரத்னா விருது ஆண்களுக்கு மட்டும்தானா?

வவுனியூர் இரா உதயணன்

**வவுனியூர் இரா. உதயணன் எழுத்தாளர், நிதிப்பணிப்பாளர், இலங்கை மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகத்தின் ஸ்தாபகரும் தலைவரும் வேண்டுவது என்ன?**

தமிழ் சாஹித்திய ரத்னா விருதுக்கு பெண் ஆளுமைகள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

அண்மையில் தி. ஞானசேகரன் எழுதிய 'சரித்திரம் பேசும் சாஹித்திய ரத்னா விருதாளர்கள்' என்ற நூல் என் கைகளுக்கு எட்டியது. மிக அருமையான ஒரு நூல்.

சாஹித்திய ரத்னா விருது இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலக்கியத்திற்கான உயரிய விருது எனவும், 2002ஆம் ஆண்டிலிருந்து இந்த உயரிய விருது வருடா வருடம் வழங்கப்பட்டு வருவது பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இவ்விருதினைப் பெற்றவர்கள் யாவருமே கௌரவத்துக்கும் பெருமைக்கும் பெருமதிப்புக்கும் உரியவர்கள் எனவும் தத்தம் துறைகளில் சாதனைகள் பல புரிந்த ஆளுமைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை பதினேழு ஆளுமைகள் இவ்வுயர் விருதினைப் பெற்றிருக்கின்றனர். இவர்களுள் பதினொருவர் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள். மற்றைய அறுவரும் ஆய்வாளர்கள்.

தி. ஞானசேகரன் அவர்கள் தனது என்னுரை என்ற பகுதியில் சாஹித்திய ரத்னா விருதாளர்கள் தேர்வு பற்றிய வாதப்பிரதிவாதங்கள் அவ்வப் போது இலக்கிய உலகில் நடந்து வந்துள்ளமை பற்றியும், இந்த விருதுக்கு பொருத்தமற்றவர்கள் சிலர் தெரிவு செய்யப்பட்டதாகவும், இந்த விருதுக்கு தகுதியுடைய பலர் நிராகரிக்கப் பட்டள்ளதாகவும் அவர்களில் சிலர் அமரத்துவம் அடைந்து விட்டதாகவும் தகுதியுடையோர் மூப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்படாமல் சிலருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதாகவும் அதனால் சர்ச்சைகள் எழுந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். நூலின் பின் அட்டை சாஹித்திய ரத்னா விருது பெற்ற பதினேழு விருதாளர்களின் படங்களையும் தாங்கி வந்துள்ளது.

அந்தப்பின் அட்டையைப் பார்த்த பின்புதான் எனக்குள் பல கேள்விகள் எழத்தொடங்கின. நான் புலம்பெயர்ந்து இலண்டனில் வாழ்ந்தாலும் இலங்கைக் குடியுரிமை கொண்ட பிரஜை என்ற முறையிலும், எழுத்தாளர் என்ற முறையிலும் பலவற்றை இந்தக் கட்டுரையில் முன்வைக்க விரும்புகின்றேன்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் செ. யோகராசாவோ அல்லது இந்த நூலை எழுதிய மூத்த படைப்பாளி தி. ஞானசேகரன் அவர்களோ எந்தவொரு இடத்திலும் பன்முக ஆளுமை கொண்ட மூத்த பெண் படைப்பாளிகள் பற்றியோ அவர்களுக்கு இதுவரை காலமும் அதாவது பதினேழு வருடங்களாக ஒருவருக்காவது இந்த உயரிய விருது வழங்கப்படாமை பற்றி குறிப்பிடவோ, விவாதிக்கவோ இல்லை என்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

2011 ஆம் ஆண்டு சாஹித்திய ரத்னா உயர் விருதானது விஜிதா பெர்ணான்டோ (VIJITHA FERNANDO) என்ற சிங்களப் பெண் ஆளுமைக்கு வழங்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு ஜீன் அரசநாயகம் (JEAN ARASANAYAGAM) என்ற தமிழ்ப் பெண்மணிக்கு ஆங்கிலத்திற்காக உயர் விருதான சாஹித்திய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இது இப்படியிருக்க கடந்த 17 வருடங்களாக தமிழுக்கு வழங்கப்பட்ட சாஹித்திய ரத்னா விருதானது ஆண் ஆளுமைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்திருக்கிறது. திறமையும்

பன்முக ஆளுமையும் கொண்ட பல தமிழ்ப் பெண் படைப்பாளிகள் இருந்தும் அவர்கள் ஏன் புறக்கணிக்கப்பட்டார்கள் என்ற கேள்வி இங்கே எழுகிறது.

அதற்காகவே இந்தக் கட்டுரையை எழுத நான் முன்வந்துள்ளேன். இனிவரும் காலங்களில் தமிழ் ஆளுமைக்காக வழங்கப்படும் உயரிய விருதான சாஹித்திய ரத்னா விருதுக்கு பெண் ஆளுமைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்பது எனது கட்டுரையின் நோக்கமாகும்.



முக்கியத்துவம் மிக்க ஆளுமைகளில் **திருமதி அன்னலட்சுமி இராசதுரை** குறிப்பிடத்தக்கவர். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளர், விமர்சகர், பேச்சாளர் என பன்முக ஆளுமை கொண்டவர்.

'யாழ் நங்கை' என்னும் புனை பெயரில் எழுதத் தொடங்கிய இவர் 57 வருடங்களுக்கு மேலாக வீரகேசரியில் பணிபுரிந்து வருகிறார். தற்போது வீரகேசரியில் இருந்து வெளிவரும் கலைக்கேசரி ஆசிரியராக 2010ஆம் ஆண்டிலிருந்து பணிபுரிந்து வருகிறார்.

விழிச்சுடர் (குறுநாவல்) உள்ளத்தின் கதவுகள் (புதினம்), நெருப்பு வெளிச்சம் (சிறுகதைத் தொகுப்பு) இருபக்கங்கள் (கவிதைத் தொகுப்பு) நினைவுப் பொருவெளி (பத்திரிகைத் தொழில் சார்ந்த அனுபவ நினைவுகள்) ஆகிய நூல்களை எழுதியுள்ளார். 1958ஆம் ஆண்டில் இவர் தனது முதலாவது சிறுகதையை "யாழ் நங்கை" என்னும் புனைபெயரில் தினகரனில் வெளியானபோது தினகரன் ஆசிரியராகவிருந்தவர் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள். அக்காலத்தில் திரு. சிற்பி சரவணபவனால் வெளியிடப்பட்ட "கலைச்செல்வி" என்னும் கலை இலக்கிய மாத சஞ்சிகையின் முதல் இதழில் இவரது முதலாவது ஆக்கம் அறிமுகமானது.

பின்னாளில் எழுத்தாளர்களாகப் புகழ்பெற்ற மாஸ்டர் சிவலிங்கம், அந்தனி ஜீவா. அன்ரனி இராசையா, அன்ரனி பெர்ணான்டோ மற்றும் பிரபலமாகவிருந்த அமரர் க. நீலகண்டன் ஆகியோர் அக்காலத்தில் வீரகேசரியின் ஒரு பகுதியாகவிருந்த மாணவர் கேசரிக்கு அன்னலட்சுமி இராசதுரை பொறுப்பாகவிருந்த காலத்தில் எழுதத் தொடங்கியவர்கள் என்றால் மிகையாகாது.

1973ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டுவரை மித்திரன் வாரமலர் பத்திரிகையின் பொறுப்பாசிரியராகக் கடமை புரிந்தார். இக்கால கட்டத்தில் செங்கை ஆழியான், ச.முருகானந்தன், காவலூர் ஜெகநாதன், ஆனந்தி, கோகிலா மகேந்திரன் உட்படப்பல எழுத்தாளர்கள் மித்திரன் வாரமலரில் எழுதினார்கள். பெண் எழுத்தாளர்களின் படைப்புக்கள் இதில் வெளிவரவும் இவர் ஊக்கமளித்தார்.

இவரால் எழுதப்பட்ட "உரிமை" என்ற சிறுகதை எழுத்தாளர் மடுளுகிரிய விஜேரத்னா வினால் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, அவர் வெளியிட்ட சிங்கள தொகுப்பு நூலுக்கு "உருமய" என்ற பெயரே தலைப்பாக இடப்பட்டது. கலாசார திணைக்களம் வெளியிட்ட "ஒரு தாய் மக்கள்" என்னும் நூலில் எழுத்தாளர்களின் ஆங்கிலச் சிறுகதைகள் இவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன.

திருமதி அன்னலட்சுமி இராசதுரை அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையிலும் மகளிர் நிகழ்ச்சி, உரைச் சித்திரம் போன்றவற்றில் எழுதி அவற்றில் பங்கு கொண்டவர்.

1994ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை பி.பி.சி நடாத்திய "இலங்கைக் கடிதம்" என்னும் நிகழ்ச்சியில் பங்குபற்றி அதனை மாதாமாதம் எழுதித் தொகுத்து வழங்கிப் பெயர் பெற்றார். இவரால் இயற்றப்பட்ட இரு மெல்லிசைப் பாடல்கள் இசையாக்கம் பெற்று "இயற்கை அன்னை நீயே உன்னை இறைஞ்சுகிறேன் தாயே" என்னும் பாடல் அருமைநாயகம் என்பவராலும் "என் நெஞ்சிலே ஒரு ராகம், என் கண்ணே அனுராகம்" என்னும் பாடல் முத்தழகு அவர்களாலும் பாடப்பெற்று ஒலிபரப்பாகின.

பத்திரிகைத் தொழில் ரீதியாக இவர் 1982ஆம் ஆண்டு எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின்

(OPEC) பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டவர். 1993 ஆம் ஆண்டு சீனப் பயணத்தை மேற்கொண்டு உலகப் பெண்கள் மாநாட்டில் இலங்கை அவதானிகளில் ஒருவராகக் கலந்து கொண்டவர். 2005ஆம் ஆண்டு சென்னைப் பயணம் மேற்கொண்டு கவிஞர் மு. மேத்தா, திரைப்படக் கவிஞர் சினேகன், திரைப்பட இயக்குனர் சேரன், எழுத்தாளர் அனுராதா ரமணன், கவிஞர் வைகைச் செல்வி திரைப்படப்பாடகர் டி. எம். சௌந்தராஜன் ஆகியோரையும் இன்னும் பலரையும் பேட்டி கண்டு வீரகேசரியில் எழுதியவர். 2010ஆம் ஆண்டு கோயம்புத்தூர் உலகத்தமிழ் மாநாட்டில் அவதானியாகக் கலந்து கொண்டு அவ்விடயம் குறித்து வீரகேசரியில் தொடர்கட்டுரைகள் எழுதியவர்.

மேடைப்பேச்சில் வல்லமை கொண்ட இவரது இலக்கியம் பற்றிய உரைகள் இலங்கை ரூபவாகினி, சக்தி, வசந்தம் போன்ற ரி. வி. க்களில் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இவருக்கு பல கௌரவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. 1992ஆம் ஆண்டு "தமிழ்மணி விருது" இந்து கலாசார ராஜாங்க அமைச்சினால் வழங்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு சிறந்த பத்திரிகையாளருக்கான எஸ்மன்ட் விக்கிரமசிங்க விருது ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவினால் வழங்கப்பட்டது. 1996ஆம் ஆண்டு தென்கிழக்கு ஆய்வு மையம், பிரதி அமைச்சர் இஸ்புல்லாஹ் தலைமையில் சம்மாந்துறையில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது. 2002 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகையாளர் சங்கம் நீண்ட கால சிறந்த பத்திரிகைச் சேவைக்காக தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தது. 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது வருடப்பூர்த்தியை முன்னிட்டு பெண் பத்திரிகையாளருக்கு வழங்கப்பட்ட கௌரவ நிகழ்வில் தமிழ்ப் பத்திரிகையாளருக்கான கௌரவம் இவருக்கு வழங்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் தமிழியல் விருது வழங்கி கௌரவித்தது 2015 ஆம் ஆண்டு இலங்கை வானொலி மற்றும் கொடகே சகோதரர்கள் (பிரைவேட்) லிமிட்டெட் இணைந்து நடாத்திய நிகழ்வில் கௌரவிப்பும் வழங்கப்பட்டது. இது தவிர இவருக்கு இன்னும் பல அமைப்புக்களும், சங்கங்களும் கௌரவம் வழங்கியிருப்பது பற்றி பட்டியலிட்டுக் கொண்டு போகலாம். 1939 ஆம் ஆண்டு பிறந்த அன்னலட்சுமி இராசதுரை அவர்கள் பன்முக ஆளுமைமிக்க சிறந்த படைப்பாளி என்பதை அவரைப்பற்றிய விரிவான மேற்குறிப்பிட்ட ஆக்கத்திலிருந்து கலாசார அமைப்பு முதல் மற்றைய அனைத்து அமைப்புக்களும் புரிந்து கொள்ளலாம்.



அடுத்ததாக 1934 ஆம் ஆண்டு பிறந்த **திருமதி பத்மா சோமகாந்தன்** பன் முக ஆளுமைமிக்க ஒரு பெண்மணி. இவரும் கூட எழுத்தாளர் மட்டுமல்லாது, சிறந்த பேச்சாளர், விமர் சகரும், ஆய்வாளரும் கூட.

இவரது பல படைப்புக்கள் நூலுருவம் பெற்றுள்ளன. 'கடவுளின் பூக்கள்' சிறுகதைத் தொகுதி லில்லி தேவசிகாமணி பரிசு பெற்றது. இவர் எழுதிய 'வேள்வி மலர்கள்' சிறுகதைத் தொகுப்பு சென்னை "இந்து" நாளிதழ் பாராட்டைப் பெற்றது. இவர் எழுதிய 'புதிய வார்ப்புக்கள்' சிறுகதைத் தொகுதி சார்க் மகளிர் சங்கப் பரிசு பெற்றதுடன் 'கரும் பலகை காப்பியங்கள்' சிறுகதைத் தொகுப்பும் அதே பரிசைப் பெற்றது. வடகிழக்கு மாகாணம் பண்பாட்டமைச்சின் பரிசு பெற்ற 'இற்றைத் திங்கள்' சிறுகதைத் தொகுப்பு யாழ் இலக்கிய வட்டத்தின் சிறந்த நூலுக்கான பரிசையும் தட்டிக்கொண்டது.

'ஈழத்து மாண்புறு மகளிர்' நூலானது பல்துறைகளிலும் முன்னணி வகித்து வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கை மகளிர் பற்றிய கட்டுரைகள் நிரம்பிய நூலாகும். இந்நூலானது இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசு பெற்றது.

பத்மா சோமகாந்தன் எழுதிய 'ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்' நூலானது மறைந்த முக்கிய பெண் ஆளுமைகள் 15 பேரைப் பற்றியது.

இவரது 'அனுமான் கதை' என்ற படைப்பு சிறுவர்களுக்காக எழுதப்பட்டது. முதன் முத லாக தமிழ்மொழியில் எழுதப்பெற்ற 'சுவாமி

சின்மயானந்தர்' நூல் அவரது வாழ்க்கை பற்றிய வரலாற்று நூலாகும். 'நெஞ்சுக்கு நிம்மதி பதில் தருகிறார் பத்மா' என்ற நூல் இளைஞர்களின் ஐயங்களுக்கும் கேள்விகளுக்குமான பதில்களைக் கொண்ட நூலாகும். இவர் 'பாராமுகங்கள் சில பார்வைகள்' என்ற படைப்பையும் படைத்துள்ளார்.

இவரது கதைகளும் கட்டுரைகளும் சுதந்திரன், கலைச்செல்வி, தாமரை, பெண்ணின் குரல், வீரகேசரி, தமிழன், கல்கி, சொல், ஈழகேசரி, சமூகத்தொண்டன், ஞானம், சங்கத்தமிழ், தினகரன், உதயன், மல்லிகை, ஓலை, புதுமை இலக்கியம், காலைக்கதிர், அகவிழி, தினபதி, ரமணி, அஞ்சலி, இலங்கை விகடன் வரதர் "80", தினக்குரல், கலாஜோதி, நிவேதினி, மங்கை, செங்கதிர். 'VOICE OF CHINMAYA' போன்ற பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

GARLAND OF FIFTY FLOWERS (அ. உ. சின்மயாமிஷன் தலைவர் சுவாமி தேஜோ மாயானந்தரின் கேள்வியும் பதில்களும் கொண்ட தொகுப்பு மொழிபெயர்ப்பு நூலாகும்.

தினகரன் வாரமஞ்சரியில் "வண்ண மலர்" என்ற தலைப்பில் புதுமையான தொடர் கதையை அன்று பிரபலம் பெற்றிருந்த கே. டானியல், பத்மா சோமகாந்தன், காவலூர் இராசதுரை, உதயணன், ஈழத்து சோமு, N.K. ரகுநாதன் ஆகியோர் இணைந்து ஒவ்வொரு அத்தியாயத்தையும் ஒவ்வொருவராக எழுதினார்கள்.

திருமதி பத்மா சோமகாந்தன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் பிறந்தவர். அரச பணியில் உயர் பதவி வகித்த பத்திரிகையாளர், எழுத்தாளர், கட்டுரையாளர், பேச்சாளர், மலராசிரியர், நூலாசிரியர், விமர்சகர், இலக்கியச் செயற்பாட்டாளர் எனப் பன்முகம் கொண்ட பிரம்மஸ்ரீ நாகேந்திர குருக்கள் சோமகாந்தனைத் திருமணம் செய்தார். உதவி ஆசிரியராகப் பதவியேற்று, பகுதித் தலைவராகவும், பின் முதலாம் தர அதிபராகவும் ஓய்வு பெறும் வரை கல்விப் பணியில் ஈடுபட்டார். உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு கிடைத்தும் கணவரின் சுகயீனம் கருதி ஓய்வு பெற்றார்.

திருமதி பத்மா சோமகாந்தன் அவர் கள் கொழும்பு இந்து மாமன்றத்தின் செயற்குழு உறுப்பினராகவும். நூலகச் செயலாளராகவும், கொழும்பு சாரதா சமித்தியின் அகில இலங்கை கட்டுரைப் போட்டி பொறுப்பாளராகவும். கொழும்பு இந்து மகளிர் மன்றத்தின் உப தலைவியாகவும். செயற்குழு உறுப்பினராகவும் கடமையாற்றினார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் கல்விச் செயலாளராகவும், உறுப்புரிமைச் செயலாளராகவும், உப தலைவியாகவும் பதவி வகிப்பவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை மற்றும் நாவலர் நற்பணிமன்றம் ஆகியவற்றின் உதவிச் செயலாளராகவும், பணி புரிந்தார். விழுது மனித மேம்பாட்டுக்கான மையத்தின் ஊடகத்துறையில் பெண்கள் அமைப்பின் தலைவியாகவும், ஔவை இலக்கிய வட்டத்தின் தலைவியாகவும் பணிபுரிந்தார். அகில இலங்கை அரச எழுத்தாளர் மன்றத்தின் உபதலைவியாகவும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவியாகவும் பணிசெய்தவர். அகில உலக சிற்றிதழ் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவியாகவும், இலங்கை சின்மயாமிஷன் நிறுவனத்தின் செயற்குழு உறுப்பினராகவும் செயற்பட்டார்.

2004 ஆம் ஆண்டு கனடா உதயன் பத்திரிகையின் 10வது ஆண்டு விழாவிற்கு திருமதி பத்மா சோமகாந்தனையும் அவரது துணைவரையும் கௌரவ விருந்தினராக அழைத்திருந்ததால் அம்மாபெரும் விழாவில் பேசும் வாய்ப்புக் கிட்டியது.

இது தவிர, திருமதி பத்மா சோமகாந்தன் பல ஆய்வுகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சுவாமி விவேகானந்தரின் "சிக்காக்கோ சொற்பொழிவு" நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது நடாத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் 1ஆம் பரிசாக தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

கொழும்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் தேவைக்காக 'தமிழ்நிலைச் சிந்தனையில் ராஜம் கிருஷ்ணன் நாவல்கள்' என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். 1996ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின்

சார்பில் இடம்பெற்ற இலக்கிய விழாவில் "சிறுவர் இலக்கியம்" பற்றிய ஆய்வுக் கட்டுரையை சமர்ப் பித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு கொழும்பில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடாத்திய இலக்கிய மாநாட்டில் வடமாகாணத்தைச் சேர்ந்த சிறுகதை இலக்கியம் பற்றிய ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் அரைநாள் "மகளிர் அரங்க மங்களம்மாள் அரங்கை" ஒழுங்கு செய்து முழுப் பொறுப்பினையும் ஏற்று சிறுகதை. கவிதை. நாவல், கட்டுரை. விமர்சனம் எனப்பல ஆய்வு முயற்சிக்கு தலைமையேற்று செயற்பட்டவர். இவ்வாறு பத்மா சோமகாந்தன் தமிழ் உலகிற்கு எண்ணிலடங்கா கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

அறிதல், ஆக்குதல், பகிர்தல் - உலகில் இன, மொழி, பாலினம் கடந்து மானிடம் பாடும் பெண் படைப்பாளிகளின் எழுத்துக்களை வரவேற்று கௌரவிக்கும் விழா சென்னை மைலாப்பூர் பாரதி வித்தியாபவனின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் இலங்கையின் மூத்த எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் உட்பட பெண்படைப்பாளிகளான திலகவதி, வைகைச் செல்வி, திலகபாமா ஆகியோருக்கும் கௌரவமும் பாராட்டும் வழங்கப்பட்டது.

**பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ்** யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் 1956 ஆம் ஆண்டு பிறந் தவர். யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் தமிழை சிறப்புபாடமாகப் பயின்று தனது இளங்கலை, முதுகலை. கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். கிழக்குப் பல் கலைக் கழகத்தில் மொழித் துறையில் தமிழ் முதுநிலை விரிவுரையாளராகவும் முது கலைப்பட்ட இணைப்பா ளராகவும் பணியாற்றுகின்றார். சங்க இலக்கியம், நவீன தமிழ் இலக்கியம், பெண்ணிய விமர்சனம், நாடக இலக்கியம், மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றார். இத்துறைசார்ந்த பல கட்டுரைகளை எழுதியுள்ளார். பேராசிரியர் கா.சிவத்தம்பியின் "DRAMA IN ANCIENT TAMIL SOCIETY" என்ற ஆங்கில நூலை "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.



மட்டக்களப்பில் இயங்கும் "சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய" த்தினால் வெளியிடப்படும் சஞ்சிகையான 'பெண்' சஞ்சிகைக்கு இவர் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

இலங்கையிலிருந்து வெளிவரும் 'நிவேதினி' பால் நிலை கற்கைநெறி சஞ்சிகை உட்பட பல சஞ்சிகைகளுக்கு பெண்ணியம் தொடர்பான பல கட்டுரைகளை பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் எழுதியுள்ளார். பேராசிரியர் கா. சிவதம்பியின் "DRAMA IN ANCIENT TAMIL SOCIETY" என்ற ஆங்கில நூலை "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" என்னும் தலைப்பில் மொழிபெயர்ப்பு செய்தமைக்காக பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸிற்கு தமிழ்நாடு மாநில அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் 2005ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களில் பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப் படும் நூல்கள் என்னும் வகையில் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இவர் குமரன் புத்தக வெளியீட்டு நிலையத் தினூடாக வெளியிட்ட "ஈழத்துத் தமிழ் நாடக அரங்கப் பாரம்பரியம்" எனும் நூல் 2007 ஆம் ஆண்டு வெளிவந்தது.

"சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்" எனும் நூல் 2006ஆம் ஆண்டு வெளிவந்தது.

"பண்டைய தமிழ் சமூகத்தில் நாடகம்" எனும் நூல் 2005 ஆம் ஆண்டு வெளிவந்தது.

**பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு** மட்டக் களப்பைச் சேர்ந்த எழுத்தாளர், கவிஞர், ஆய்வாளர். இவரது தந்தை கந்தையா, தாய் மகேஸ்வரி. இவர் கொழும்புப் பல்கலைக்கழ கத்தில் இளமாணி பட்டம் பெற்று யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம், நெதர்லாந் திலுள்ள ஹேக் சமூகக் கற்கை நிறு வனம் முதலியவற்றில் உயர் பட்டங்களைப் பெற்றார். பெண்களும் அபிவிருத்தியும்



தொடர்பான ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

இவர் எழுத்தாளர், கவிஞர், ஆய்வாளர், பேச்சாளர், கல்வியியலாளர், பெண்கள் சஞ்சிகைகளின் ஆசிரியர் குழு உறுப்பினர், நூலாசிரியர், தொகுப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர், பெண்கள் அமைப்புக்களின் நிறுவுனர், சோசலிசப் பெண்ணிலைவாதி, சமூகசேவகி எனப் பன்முகப் பணிகளில் ஈடுபட்டு அவற்றில் தனது ஆளுமை, அறிவை வெளிப்படுத்தி வருகிறார்.

எழுத்துத் துறையில் இலக்கியம், விமர்சனம், பெண்ணிலைவாதம், பண்பாட்டு ஆய்வு, நாட்டார் வழக்காற்றியியல் சார்ந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி வருகின்றார். இவர் சித்ரா, சங்கரி, ரோகினி, பர்வதகுமாரி, மும்தாஜ், காஞ்சனா முதலான புனைபெயர்களில் கவிதைகளையும், பெண்ணிய ஆக்கங்களையும் படைத்து வருகின்றார்.

இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றி இலக்கிய நிகழ்வுகளான படையல், கலைக்கோலம் முதலான நிகழ்ச்சிகளை தொகுத்தளித்துள்ளார். 1976 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் 1993 ஆம் ஆண்டிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். இவர் சிந்தனை, பிரவாதம், பெண்ணின் குரல், பெண் முதலான இதழ்களில் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், பெண்ணிலைச் சிந்தனைகள், இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம், பாரதியும் பெண்களும், காலம் கருத்து இலக்கியம் ஆகிய ஆய்வுத்துறை நூல்களை எழுதியும் சொல்லாதசேதிகள், சிவரமணி கவிதைகள், உயிர்வெளி ஆகிய கவிதை நூல்களைத் தொகுத்தும், இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும் எனும் நூலை தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிட்டுள்ளார்.

**கலாபூஷணம் நயீமா சித்திக்** ஒரு மலையகப் பெண் படைப்பாளி இலங்கையின் தமிழ் இலக்கியப் பரப்பில் சிறுகதைத் துறையில் விசாலமான பங்களிப்பைச் செய்தவர். சமுதாய அவலங்களையும் மூட நம்பிக்கைகளையும் தத்ரூபமாக சித்தரிக்கும் இவரது பாங்கு அலாதியானது மலையகத்தில் சுமார் அறுபது வருடகால இலக்கிய வரலாற்றில் மிகவும் காத்திரமான இலக்கியப் பங்களிப்புச் செய்த ஒரு சில எழுத்தாளர்களில் நயீமா சித்திக்கும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். முன்னணிப் பெண் எழுத்தாளர். முஸ்லிம் பெண் படைப்பாளிகளுக்கிடையே தனக்கென தனி முத்திரையை பதித்துக்கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் மட்டுமல்லாது நூல்கள் பல தந்த நூலாசிரியையும் கூட



பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த எழில் கொஞ்சும் சீதள நகரான ஹப் புத் தளையை பிறப்பிடமாகவும், கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஹப்புத்தளையைச் சேர்ந்த முஹம்மது பஷீர் மரிக்கார்- தாஜ் பிவி தம்பதிகளின் அன்பு மகளாவார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொது கலைமாணிப் பட்டப் படிப்பையும், திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும், ஊடகத்துறை டிப்ளோமா பட்டத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

1960 களில் 7ஆம் வகுப்பில் கற்கும் போது 'கல்வி' என்னும் தலைப்பில் இவர் எழுதிய முதல் ஆக்கத்தை தினகரன் பத்திரிகை பிரசுரித்தது. அதனைத் தொடர்ந்து தொடர் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், உருவகக்கதைகள், குட்டிக்கதைகள், நாவல் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் இவர் முனைப்புடன் ஈடுபட்டார். 1970 ஆம் ஆண்டில் ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சிறுகதைகளை பொதுவாக இலங்கையின் எல்லாத் தமிழ் வெளியீடுகளும் பிரசுரித்தன. கட்டுரைகள் பல நூற்றுக் கணக்காக வெளிவந்தன. அவ்வப்போது கவிதைகளையும் எழுதியுள்ளார்.

இவர் 1975 ஆம் ஆண்டு 'வாழ்க்கைப் பயணம்' என்ற நாவலை எழுதினார். இது வீரகேசரி பிரசுர வெளியீடாக வெளிவந்தது, இவர் எழுதிய 'வாழ்க்கைச் சுவடுகள்' என்ற முதலாவது சிறு கதைத் தொகுதி 1989 ஆம் ஆண்டு கல்வநின்னை தமிழ் மன்ற வெளியீடாக வெளிவந்தது.

2004 ஆம் ஆண்டு 'வாழ்க்கை வண்ணங்கள்' எனும் சிறுகதைத் தொகுதியும், மணிமேகலைப் பிரசுரமாக 'வாழ்க்கை வளைவுகள்' எனும் சிறுகதைத் தொகுதியும் 2005ஆம் ஆண்டு வெளிவந்தது.

இது தவிர 'ஆயிரம் வினாக்களும் விடைகளும்' என்ற தமிழ்ப் பாடநூலையும், 'சீறாப்புராணம் நபி அவதாரப் படலம்' எனும் தமிழ்ப் பாடநூலையும் எழுதியுள்ளார்.

இலக்கியப் பணிகளுக்காக நயீமா சித்திக் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார்.

நஜ்முல் அதீப் (இலக்கியத் தாரகை) எனும் பட்டத்தை 1991ஆம் ஆண்டு முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் வழங்கி கௌரவித்தது.

சிறுகதைச் செம்மணி எனும் பட்டத்தை 2004ஆம் ஆண்டு சிந்தனை வட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இலங்கை அரச விருதான கலாபூஷணம் விருது 2005ஆம் ஆண்டு கலாசார அமைச்சினால் வழங்கப்பட்டது.

2002 இல் அகில உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு கௌரவம் கிடைக்கப் பெற்றது. 2013ஆம் ஆண்டு தெமட்டக்கொட வை.எம். எம்.ஏ பேரவையும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து இலக்கிய ஆளுமை விருதை வழங்கி கௌரவித்தது.

இதே 2013ஆம் ஆண்டு கொடகே விருது கொடகே நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

இது தவிர அவ்வப்போது பல்வேறு சந்தர்ப் பங்களில் பொன்னாடை பொற்கிளி விருது என்பன வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் எழுதிய 'வாழ்க்கைப் பயணம்' என்ற நாவல் அதிகமானோரால் வாசிக்கப்பட்ட பலரா லும் பாராட்டப்பட்ட நாவல் ஆகும். வீரகேசரி வெளியீடாக வெளிவந்த இந்த நாவல் அனைத்துப் பிரதிகளும் விரைவில் விற்பனையாகிவிட்டன.

ஆமாம் மலையகத்தின் மூத்த படைப்பிலக்கிய வாதியான நயீமா சித்திக் அவர்கள் எமது இலக்கிய சொத்தாகும். தனது இறுதி மூச்சு வரை எழுதுவேன் என்று கூறும் நயீமா சித்திக் அவர்கள் இலக்கியத் தாரகை மட்டுமல்ல இலக்கிய உலகின் மின்னும் தாரகை ஆகும். இவர் மேலும் பல ஆண்டுகள் இலக்கிய உலகிற்கு இன்னும் பல நூல்களை பரிசளிக்க வேண்டும் என்பது எமது ஆசை ஆகும்.

**கோகிலா மகேந்திரன்** 1950 இல் பிறந்த யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த எழுத்தாளர். இவரின் தந்தை செல்லையா சிவசுப்பிரமணியம் சமய எழுத்துக்காக சாகித்திய விருது பெற்றவர். கோகிலா மகேந்திரன் பேரா தனைப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி. 1974 இல் யாழ்ப்பாணம் பொலிகண்டித் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒரு விஞ்ஞான ஆசிரியராக வாழக்கையைத் தொடங்கி 1994இல் அதிபராகப் பதவி உயர்வு பெற்று 1999 இல் அதே கல்விப் புலத்தில் பிரதிப் பணிப்பாளராக உயர்ந்து தனது தொழிலில் உச்சநிலையை அடைந்தார்.



கல்வித் துறைக்கு சமாந்தரமாக உளவியல் பற்றியும் உளவளத்துணை பற்றியும் மனவடுவுக்கு அளிக்கப்படும் உள சிகிச்சை பற்றியும் கற்றவர். அரச பணியில் இருந்த காலத்திலேயே எழுத்துப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோடு நாடகத் துறையையும் முறையாகக் கற்று நாடக ஆசிரியர் தரப் பரீட்சையில் தேர்வு பெற்றார்.

1972 இல் குயில் சஞ்சிகையில் வெளியான "அன்பிற்கு முன்னால்" என்பது இவரது முதலாவது சிறுகதையாகும். மொத்தம் 76 சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். இக் கதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவை இவரது ஆறு சிறுகதைத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவற்றுள் "பிரசவங்கள்", "வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்" ஆகிய இரு தொகுதிகளும் தேசிய சாகித்திய விருது பெற்றவை. பின்னைய நூல் வடகிழக்கு மாகாண இலக்கிய விருதினையும் வென்றிருந்தது.

ஈழநாடு பத்திரிகையிலும், சுடர் சஞ்சிகை யிலுமாக இவர் பல குறுநாவல்கள் எழுதியுள்ளார். "துயிலும் ஒரு நாள் கலையும்", "தூவாணம் கவனம்" ஆகிய இரு நாவல்களும் நூலுருப் பெற்றுள்ளன. நாடகங்களில் "குயில்கள்",

"கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு", "அரங்கக் கலையின் ஐம்பதாண்டு" ஆகிய மூன்றும் பனுவல்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர் "விஞ்ஞானக் கதைகள்" என்ற அறிவியல் புனைகதை நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

கோகிலா மகேந்திரன் பெண்ணியம் பற்றிய கருத்தியல் மாற்றத்தை ஏற்படுத்தியவர். பெண்ணியக் கருத்துக்களை தனது சிறுகதைகளிலும் நாவல்களிலும் வெளிப் படுத்துவதில் வெற்றி கண்டவர்.

இலங்கை வானொலியில் பூவும் பொட்டும், இசையும் கதையும், நவசக்தி, கலைக்கோலம், இளவேனில் போன்ற வானொலி சார் நிகழ்வுகள் பலவற்றில் இவர் பங்குபற்றியுள்ளார்.

"கேள்விகளின் முழக்கம்" எனும் இவரது நாடகம் வடஇலங்கை சங்கீத சபையின் "நாடகக் கலாவித்தகர்" என்ற பட்டத்தினை இவருக்கு ஈட்டிக் கொடுத்தது. இது தவிர மேலும் 23 நாடகங்களை இவர் எழுதி இயக்கியும் உள்ளார்.

இவரது பல நூல்கள் புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. "Child Mental Health", உள்ளக் கமலம், எங்கே நிம்மதி, கலைப்பேரரசு ஏ.ரி.பி அரங்கக்கலையில் ஐம்பது ஆண்டு, கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு, குயில்கள், சிறுவர் உளநலம், சின்னச் சின்ன பிள்ளைகள், தங்கத் தலைவிதி, துயிலும் ஒருநாள் கலையும், தூவாணம் கவனம், பாவலர் துரையப்பாப் பிள்ளை, பிரசவங்கள், மகிழ்வுடன் வாழ்தல், மல்லாகத்தின் வரலாறும் அதன் அபிவிருத்தியும், மனக்குறை மாற வழி, மனம் எனும் தோணி, மனச்சோர்வு, முகங்களும் மூடிகளும், சிறுகதைகள், முற்றத்தில் சிந்திய முத்துக்கள், வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம், விஞ்ஞானக் கதைகள், விழிமுத்து ஆகியவை ஆகும். இத்தனை நூல்களையும் சிறுகதைகள், கட்டுரைகள் போன்றவற்றையும் எழுதிய கோகிலா மகேந்திரனை பன்முக ஆளுமை மிக்க பெண்கள் வரிசையில் இருந்து தவிர்த்து விட முடியாது.

**அசோகாம்பிகை யோகராஜா** 1949 ஆம் ஆண்டில் பிறந்தவர். மட்டக்களப்பு மண்டுரைச் சேர்ந்த எழுத்தாளர். 1977 இல் ஆசிரியர் சேவையில் இணைந்து மண்டூர் மகா வித்தியாலயத்தில் பணி தொடங்கினார். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்ற இவர் மட்டக் களப்புப் பிரதேசத்தில் பல பாடசாலைகளில் பணியாற்றி இறுதியாக மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் பணியாற்றி 2009 இல் ஓய்வு பெற்றார்.



1970களில் எழுதத் தொடங்கிய இவர் மண்டூர் அசோகா என்ற புனை பெயரால் நன்கறியப் படுகிறார். ரேவதி, செந்தில், பிரியா ஆகிய புனைபெயர்களிலும் எழுதி வந்துள்ளார்.

வீரகேசரி, தினகரன், தினபதி, மித்திரன், ஜோதி, தென்றல், தாய்நாடு, சுடர், தினக்குரல், ஞானம், இருக்கிறம் போன்ற பல்வேறு இதழ்களில் எழுதியுள்ளார். இலங்கை வானொலிக்கும் ஆக்கங்கள் எழுதியுள்ளார். இவர் வானொலி மெல்லிசை நிகழ்ச்சிகளுக்கு பல பாடல்களையும் எழுதியுள்ளார்.

கொன்றைப் பூக்கள் (சிறுகதைகள் 1976) சிறகொடித்த பறவைகள் (சிறுகதைகள் 1993) உறவைத்தேடி (சிறுகதைகள் 2001)பாதை மாறிய பயணங்கள் (நாவல் 1992) போன்றவை இவரது நூல்களாகும்.

1995 இல் நடைபெற்ற மண்முனை வடக்குக் கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழாவில் பொன்னாடை போர்த்தியும் 1997 இல் மண்டூர் கலை இலக்கிய அவையினரது பாராட்டு விழாவில் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டதுடன் 2001 இல் தஞ்சாவூரில் உதய கீதம் இலக்கியப் பொதுநல இயக்கத்தினர் நடத்திய உலகக் கவிஞர் விழாவில் ' தமிழருவி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்தக் கட்டுரையில் குறிப்பிட்ட ஒரு சில பன்முக ஆளுமை கொண்ட பெண்களைப் பற்றித்தான் என்னால் குறிப்பிட முடிந்தது.

இன்னும் பலர் இலை மறை காயாக தங்கள் பன்முக ஆளுமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் கண்டறிந்து அவர்களது ஆற்றலையும் வெளிக் கொணர்வது முக்கியமானதொன்றாகும். ஆகையால் இந்த ஆக்கத்தை முழுமை பெற்ற ஆக்கமாக கருதிவிட முடியாது.

என்னால் முடிந்தவரை இங்கு விடுபட்ட பெண் பன்முக ஆளுமைகளைக் கண்டறிந்து அடுத்த ஆக்கத்தில் சமர்ப்பிப்பதே எனது நோக்கமாகும். ■

# திருமணங்களும் மறுமணங்களும்

- இணுவை வசந்தன் -

அன்று என்வாழ்நாளில் மிகவும் மகிழ்ச்சியான நாள். எனக்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் தந்தநாள். வேலையில்லாப்பட்டதாரி என்ற நாமத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த நாள். கல்வித் திணைக்களத்திற்கு என்னை அழைத்து நியமனக் கடிதத்தைத் தந்தபோது நான் பட்ட கஷ்டங்களுக்கு விடிவு கிடைத்திருக்கின்றதே என்று எண்ணி உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைப் படிக்க வைக்க வேண்டும் என்ற வைராக்கியத்தில் என் பெற்றோர்கள் பட்ட கஷ்டங்கள் எவ்வளவோ. ஊரிலுள்ளவர்கள் என்தந்தையிடம் "உன்ர பெடியன் படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போறான்" பேசாமல் மறிச்சு தோட்ட வேலையைப் பழக்கு" என்று சொன்ன போதிலும், மௌனமாக இருந்து பட்டினியுடன் வாழ்ந்து என்னைப் படிக்க வைத்தார்கள். அவர்களுடைய பிரார்த்தனை வீண்போகவில்லை. படித்துப் பட்டதாரியாக வந்து இன்று எனக்கு ஆசிரிய உத்தியோகமும் கிடைத்துள்ளது. எனக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த பெற்றோரை எனியும் கஷ்டப்பட விடாமல் அவர்களைச் சந்தோஷமாக வைத்துப் பார்க்க வேண்டும். அது என் கடமையும் கூட என்று எண்ணிக் கொண்டேன்.

யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த எனக்கு கிளிநொச்சியிலுள்ள ஒரு பிரபல பாடசாலையில் கற்பிக்கும் பணி கிடைத்தது. பெற்றோருக்கு ஒரே பிள்ளையாகிய நான் அவர்களைக் கவனித்துக் கொண்டு, தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்தில் கிளிநொச்சிக்கு வந்து எனது கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது எனது மனதிற்குத் திருப்தியைத் தரவில்லை. பிள்ளைகளுக்குக் கல்வியைச் சிறந்த முறையில் ஊட்ட வேண்டும். அவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் எடுக்க வேண்டும். இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் வந்துபோவது உசிதமில்லை என்று எண்ணி, என் பெற்றோரையும் அழைத்து வந்து கிளிநொச்சியில்



ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து இருக்கலாம் என எண்ணியவனாக என் பெற்றோரிடம் இந்த விடயத்தைத் தெரிவித்தேன்.

அம்மா சொன்னா "தம்பி வயதுபோன எங்களுக்கு இங்கிருந்து பழகிப்போச்சு. வீடுவாசல் அயலட்டை சுற்றம் எண்டு இஞ்ச இருக்கேக்க இவற்றையெல்லாம் விட்டுப்போட்டு பழக்கமில்லாத புது இடத்தில் எப்படி வந்து இருக்கிறது."

"இஞ்சருமப்பா எங்களைப் பார்க்க தம்பி தினம் தினம் வந்துபோறதாலே, பிள்ளைகளுக்கு அக்கறையுடன் படிப்பிக்கேலாது. பிள்ளைகளின் கல்வி முக்கியம் தம்பி அங்கிருந்தால்தான் பிள்ளைகளுக்கு வடிவாகப் பாடம் சொல்லிக் கொடுக்க முடியும். தம்பி சொல்லுகிறமாதிரி நாங்களும் கிளிநொச்சியில போய் இருக்கிறது நல்லது தம்பியும் அமைதியாக இருந்து தன்ர கடமைகளைச் செய்ய முடியும்."

என்று ஐயா அம்மாவுக்கு சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு, கல்வியின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்துள்ளவிதம் மெய்சிலிர்க்க வைத்தது.

நான் ஆசிரியராகக் கடமையாற்றும் பாட சாலை அதிபர் பொன்னம்பலம் முல்லைத் தீவைச் சேர்ந்தவர். அவர் கிளிநொச்சியைச் சேர்ந்த ஆசிரியையைத் திருமணம் செய்து கிளிநொச்சியிலேயே வாழ்கின்றார். அவரிடம்...

"எனக்கொரு வீடு வாடகைக்கு வேண்டும்" என்று கேட்டபோது, அவரின் மனைவியார் "தன்ர

தங்கைச்சி கனடாவில் இருப்பதாகவும் அவரின் வீடு பெரியவீடு அதைப் பார்ப்பதற்கு ஒரு பெண்ணை அங்கு குடியமர்த்தியிருப்பதாகவும் கூறி அந்த வீட்டில் நீங்கள் குடியிருக்கலாம். அந்தப் பெண் ஒரு பிள்ளையுடன் வீட்டுக்குப் பின்புறமுள்ள அறையொன்றில் குடியிருப்பதால், உங்களுக்கும் உதவியாகவும் இருப்பார்" என்று சொன்னார்.

அன்று பாடசாலை விட்டதும் அதிபரையும் கூட்டிக்கொண்டு அவர்கள் சொன்ன வீட்டைப் பார்க்கச் சென்றேன். வீடு எனக்குப் பிடித்துக் கொண்டது. தென்னை, மா, பலா, வேம்பு என்று வீட்டுவளவு சோலையாகவே இருந்தது. நல்ல சூழல்.

அதிபர் 'வசந்தி' என்று கூப்பிட்டார். பின்பக்கத்திலிருந்து ஒருவயது மதிக்கத்தக்க பிள்ளையையும் தூக்கிக் கொண்டு ஒரு இளம் பெண் நாங்கள் நிற்கும் இடத்திற்கு வந்தாள். "வசந்தன் மாஸ்டர் இந்தப் பிள்ளை என்ர மனிசிகாரியின் அக்காவின் மகள். கல்யாணம் கட்டி மூன்று வருடத்தில் ஒருபிள்ளை பிறந்ததும் புரிசன்காரன் வீதிவிபத்தில் இறந்து விட்டான். பாவம் இருபத்தொரு வயதில் விதவையாகி மிகுந்த கஷ்டத்தோட இஞ்ச இருக்குது. உங்கட அப்பா அம்மாவுக்கு உதவியாக இருக்கும். அதேவேளை உங்கள் பாதுகாப்பும் அவர்களுக்கு இருக்கும்."

சாந்தமே உருவான அந்தப் பிள்ளையைப் பார்த்ததும் அவர் மீது எனக்கு இனந்தெரியாத ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது உண்மையே. இளமையில் வறுமை மிகவும் கொடுமை என்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால் இளமையில் பிரிவு அதனிலும் கொடுமையாயிற்றே. ஆகவே அந்தப் பிள்ளைக்கு ஏதாவது பயனுள்ளதான வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் என்மனதில் வேரூன்றியிருந்தது.

❄ ❄ ❄

பெற்றோரும் என்னுடன் வந்து இருப்பதாலும், வசந்தி என் பெற்றோரைக் கவனமெடுத்து எல்லா வகையான உதவிகளையும் செய்து வருவதாலும் ஒரு மனநிம்மதியுடன், என் கற்பித்தல் நடவடிக்கையை அக்கறையுடன் சிறப்பாகச் செய்ய முடிந்தது. பாடசாலையில் பாடவிதானக் கற்கைகளுடன் மேலாக மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மேலதிக வகுப்புக்களையும் நடத்தி வந்தேன்.

எனது பாடசாலையில் சித்திரா என்ற ஒரு ரீச்சர் கல்வி கற்பித்து வந்தார். அழகும் சாந்தமும் நிரம்பியவர். அவர் திருமணமானவர் என்றும், அவரைத் திருமணம் செய்தவர் அவருடன் ஒருமாதம் இருந்துவிட்டு, நீர்கொழும்பிலிருந்து தோணியில் களவாக அவுஸ்திரேலியா போகப் புறப்பட்டவர் கடலில் தோணிமூழ்கிக் காணாமல் போய் விட்டதாகவும் தெரிந்து கொண்டேன். சித்திரா ரீச்சர் தமது கவலையை மறக்க அதிபர் ஆசிரியர் உட்பட எல்லோருடனும் கலகலப்பாகப் பேசுவார். தன் கவலையை எச்சந்தர்ப்பத்திலும் வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்.

ஒருநாள் அதிபர் தனிமையில் என்னை அழைத்து....

"வசந்தன் மாஸ்டர் நீங்கள் சித்திரா ரீச்சரைப்பற்றி என்ன நினைக்கிறியள்" என்று கேட்டார்.

"நல்ல வடிவான பண்பான ரீச்சர்" என்றேன்

"அந்த இளம் பிள்ளையின் நிலை உண்மை யிலேயே வேதனைக்குரியது"

"நானும் அப்படித்தான் நினைக்கிறன்."

"என்னுடைய மகன் சம்பத் வங்கியில் வேலை செய்கிறான். அவனிலும் பார்க்க இந்தப்பிள்ளை நாலுவயது கூட." "நான் சித்திரா ரீச்சரைக் காதலிக்கின்றேன். அவவைதான் கல்யாணம் செய்யப்போறன்" என்று மகன் சொல்லுகிறான். மனிசிக்காறி கேட்ட நேரம் தொடக்கம் மகனோட போர்க்கொடி காட்டுகிறா. எனக்கு என்ன செய்கிறதெண்டு தெரியல்ல அதனால் தான் மாஸ்டர் உங்களிடம் யோசனை கேட்டனான்" என்றார்.

"சேர் இதில நான் சொல்லுகிறதற்கு, எனக்கு அனுபவம் போதாது. ஏதோ பெற்றோராகிய நீங்கள் கலந்தாலோசித்து நல்ல தீர்மானத்தை எடுங்கள்" என்றேன்.

அன்று திங்கட்கிழமை சித்திரா ரீச்சர் பாடசாலைக்கு வரவில்லை. எனது பாடவிதான அறிக்கையை வெள்ளிக்கிழமை வாங்கிச் சென்றவர் திங்கள் கொண்டுவந்து தருவதாகச் சொல்லியிருந்தார். அவர் வராதது, அறிக்கையைத் தராதது எனக்குச் சங்கடமாக இருந்தது. வேறு ஒரு ரீச்சரிடம் ஏன் சித்திரா ரீச்சர் இன்று வரவில்லை என்று கேட்டேன்.

"வசந்தன் மாஸ்டர் ஏன் அவவை அக்கறையாக விசாரிக்கிறியள். ஏதாவது....!

"இல்லை ரீச்சர் அவ என்ர பாடவிதான அறிக்கையை வாங்கிக்கொண்டு போனவ.... அதுதான் கேட்டன்"

"உங்களுக்கு விபரம் தெரியாதோ? அவ வுக்கு திடீர் இடமாற்றம் கிடைச்சு வவுனியா வலயத்துக்குப் போய் விட்டார்."

"இது அதிபருக்கு தெரியாதோ?"

"அதிபர்தான் இந்த இடமாற்றத்தை எடுத்துக் கொடுத்தவர் என்று கதைக்கினம்"

"ஏன் அதிபர், நல்ல ஒரு ரீச்சரை இந்தப் பாடசாலையை விட்டு மாற்றினவர் சித்திரா ரீச்சர் பாவம்."

"அதிபரின் மகனுக்கும் சித்திரா ரீச்சருக்கும் காதல். அதிபரின் மனைவிக்கு இதில் விருப்பமில்லை. மகன் கிளிநொச்சியிலிருந்தால் சித்திரா ரீச்சருடனான தொடர்பு கூடும் என்று மகனை வவுனியா வங்கிக்கு மாற்றம் எடுத்துப் போகும்படி வற்புறுத்தி வந்துள்ளார். தாயின்ர அரியண்டம் தாங்காமல் மகன்காரன் போன மாதம் வவுனியா வங்கிக்கு மாற்றம் பெற்றுச் சென்றுவிட்டான். அதிபருக்கு மகனையும் சித்திரா ரீச்சரையும் சேர்த்துவைக்க வேண்டும் என்று ஆசை. அதனால்தான் ரீச்சருக்கு வவுனியாவுக்கு மாற்றம் எடுத்துக் கொடுத்துள்ளார்.

"அப்ப காதலுக்கு அதிபரும் சப்போட் எண்டு சொல்லிறியள்".

"வசந்தன் மாஸ்டர் நீங்கள் யாரையாவது விரும்பினால் அதிபரிடம் சொன்னால் அவர் சேர்த்து வைப்பார். அவரும் காதலிச்சுத்தான் கல்யாணம் பண்ணினவராம்."

"எனக்கு அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அதிபரிட்டைச் சொல்லுறன் ரீச்சர். நீங்களும் வடிவாய்தான் இருக்கிறியள் அப்ப அதிபரிட்டச் சொல்லட்டே"

"சும்மா பகிடிவிடாதேங்கோ மாஸ்டர். நான் மூண்டு பிள்ளைகளுக்குத் தாய், மூத்தமகன் ஓ.எல். படிக்கிறான். அவை எல்லாரும் தகப்ப னோட யாழ்ப்பாணத்தில் இருக்கினம்."

"உண்மையா? ரீச்சர் பொய் சொல்லுறியள். உங்களைப் பார்க்க பதினெட்டு இருபது வயது இளம் பெட்டை மாதிரி வடிவாக இருக்கிறியள். அதுதான் நான் யோசிச்சனான்."

"நீர் விரும்பேக்க நான் என்ன செய்கிறது. அடுத்த கிழமை வீட்டுக்குப் போய் வரேக்க என்ர புருசனிட்ட கேட்டுவந்து முடிவு சொல்லுகிறன்."

"சரி ரீச்சர் பகிடியை விட்டுவிட்டு, உங்கட உதவி ஒன்று தேவையாயிருக்கு செய்வீங்களே?

"வசந்தன் மாஸ்டர் என்ன உதவி வேணும் என்று சொல்லுங்கோவன்"

"அதிபரின் மனைவியின் அக்கா மகள் ஒரு பிள்ளையுடன் விதவையாக இருக்கிறா. இளம்பிள்ளை இருபத்தொரு வயதில் இப்படியாகி விட்டது. அந்தப் பிள்ளை இப்ப நாங்கள் வாடகைக்கு இருக்கின்ற வீட்டின் ஒரு பகுதியில்தான் பிள்ளையுடன் தனியே இருக்குது. என் பெற்றோரையும் கவனமெடுத்துப் பார்த்து சமையலும் செய்து கொடுத்து வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் மேற்கொண்டு வருகுது. ஐயாவுக்கும் அம்மாவுக்கு அந்தக் குழந்தையுடன் பொழுது போகுது. வசந்தி குழந்தையை என் பெற்றோருடன் விட்டுவிட்டு எங்கட வீட்டு அலுவல்கள் முழுவதையும் தானே செய்து வருது. சாந்தமே உருவான அந்த வசந்தியை எனக்குத் துணைவியாக்கிக் கொள்ள விரும்புகிறன் ரீச்சர். தயவுசெய்து அதிபரிடம் சொல்லி இதை ஒப்பேற்றி வைக்கிறீங்களா?"

"இதுக்கு உங்கட ஐயா அம்மா சம்மதிப்பினமோ?"

"அதைத்தான் நானும் யோசிக்கிறன் ரீச்சர். அதிபர் சொன்னால் சிலவேளை சம்மதிப்பினம்"

"சரி உங்களுக்காக நான் அதிபரிடம் கதைக்கிறேன்."

"தாங்ஸ் ரீச்சர்" என்றேன்.

❄ ❄ ❄

"அதிபர் வசந்தன் மாஸ்டரைப் பற்றி என்ன நினைக்கிறியள்"

"கடமை உணர்ச்சி மிக்க நல்ல ஒரு பண்பான ஆசிரியர். ஏன் அவரைப் பற்றி விசாரிக்கிறீர்".

"வயது போன பெற்றோருடன் தனிய இருக் கிறார். அவருக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைத்தால் நல்லது எண்டு நினைக்கிறன்"

"ஏன் ரீச்சர் நீங்கள் ஏதாவது பொம்பிளையைப் பார்த்திருக்கிறியளோ?"

"இல்லை சேர், யாழ்ப்பாணத்தில எங்கட சொந்தத்துக்குள்ள யாரும் இருந்தா கேட்டுப் பாப்பம் எண்டு யோசிச்சன்".

"நிர்மலா ரீச்சர் உங்களுக்குச் சொன்னால் என்ன; எனக்கும் ஒரு மகள் இருக்கிறாளல்லே. அவளுக்கு வசந்தன் மாஸ்டரைக் கேட்கலாம் எண்டு இருக்கிறன்.

"நல்லது சேர். வசந்தன் மாஸ்டர் என்ன நோக்கத்தோடை இருக்கிறார் என்று தெரியல்லே."

"அவரின் பெற்றோரிடம் மகன்ர கல்யாணத்தைப் பற்றிக் கதைச்சுப் பாப்பம். என்ர மனிசிக்காரியைக் கூட்டிப் போகலாம் ஆனால் அவை மறுப்புத் தெரிவிச்சால் மனிசி கௌரவம் இழந்ததாக எண்ணி என்னோட சண்டைக்கு வரும்." அதனால உங்களைக் கூட்டிக் கொண்டு போய்க் கதைக்க யோசிக்கிறன். நிர்மலா ரீச்சர் நாளைக்குப் புதன்கிழமை சோட்லீவு போட்டுவிட்டு வசந்தன் மாஸ்டருக்குத் தெரியாமல் அவரின் பெற்றோரிடம் முதல் போய்க் கதைப்பம். உங்களுக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லைத்தானே?

"இல்லை சேர், கட்டாயம் நாளைக்குப் போய் கதைப்பம்"

"அதிபரும் நிர்மலா ரீச்சரும் காலை பத்துமணியளவில் வசந்தன் மாஸ்டர் வீட்டுக்குச் செல்லுகின்றனர்.

அவர்களை கண்ட வசந்தனின் ஐயா.....

"வாருங்கோ அதிபர் இருங்கோ, பிள்ளை நீங்களும் இருங்கோ"

"ஐயா இவவும் எங்கட பாடசாலையில் படிப்பிக்கிற நிர்மலா ரீச்சர்"

இவ கோண்டாவில் மார்க்கண்டு மாஸ்டரின் மகள் எங்களுக்கு இவையின் குடும்பத்தை நல்லாய் தெரியும். தம்பியும் இவ இஞ்ச படிப்பிப்பதாகச் சொன்னவர்"

"நாங்கள் இஞ்ச பக்கத்தில ஒரு அலுவலாக வந்தனாங்கள் ஐயா கையோட உங்களையும் பாத்துப் போகலாம் என்று வந்தம்"

"நல்லது சந்தோஷம் என்ன ரீயா கோப்பியா குடிப்பீங்கள்."

"உங்களுக்கு ஏன் கஷ்டம்"

"எங்களுக்கு ஒரு கஷ்டமுமில்ல. பிள்ளை வசந்தி இரண்டு பேருக்கும் கோப்பி போட்டுக் கொண்டு வந்து குடுங்கோ."

"ஓம் ஐயா வாறன்" என்று சொல்லி இருவருக்கும் கோப்பி கொண்டுவந்து கொடுத்தாள் வசந்தி. நிர்மலா ரீச்சர் அன்று தான் முதன் முதலாக வசந்தியைப் பார்த்திருக்கிறா. வசந்தன் மாஸ்டர் சொன்ன மாதிரி சாந்தமான பெண்ணாகவே அவருக்கும் காட்சி கொடுத்ததை எண்ணி "இந்தப் பிள்ளை யார்" என்று கேட்டார்.

"இது அதிபரின் பெறாமகள். எங்களோடதான் இந்த வீட்டில இருக்கின்றா, எங்களுக்கும் பெரிய உதவியாகவுள்ளா" இருவரும் கோப்பியை குடித்து முடித்ததும்.......

"ஐயா உங்களிடம் வசந்தன் மாஸ்டரின் கல்யாண விடயமாகக் கதைப்பம் என்று வந்தனாங்கள்" என்றார் அதிபர்.

"நாங்களும் அதற்காகத் தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறம். எனக்கும் மனைவிக்கும் நல்ல விருப்பம். தம்பியை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு மேற்கொண்டு நடவடிக்கையை எடுக்க எண்ணியிருக்கிறம்."

அதிபருக்கு மனதிற்குள் பெரும் திருப்தி முகத்தில் தெரிந்தது. சிரித்துக்கொண்டு நிர்மலா ரீச்சரைப் பார்த்தார்.

"பிள்ளை வசந்தி வெற்றிலைத் தட்டத்தை எடுத்து வந்து அதிபருக்குக் கொடுங்கோ"

வசந்தியும் வெற்றிலைத் தட்டத்தை அதிபரிடம் கொடுத்துவிட்டு உள்ளே போவதைக் கண்ட வசந்தனின் அப்பா

"பிள்ளை இஞ்ச வாங்கோ இந்தக் கதிரையில் இருங்கோ" என்று சொல்லிவிட்டு......

"நிர்மலா ரீச்சர் இவவை உங்களுக்குத் தெரியுமா? இவ அதிபருடைய பெறாமகள். எங்களுடைய ஆசை மருமகள். இவவைத்தான் வசந்தனுக்குக் கட்டிவைக்க இருக்கிறம்." என்றார்.

அதிபரின் முகம் மாறியதை நிர்மலா ரீச்சர் கவனிக்கத் தவறவில்லை. வசந்தனின் விருப்பம் நிறைவேறியுள்ளதே என்று எண்ணியவராய் அதிபருடன் பாடசாலைக்குப் புறப்பட்டார்.

பாடசாலையில் எதுவித சலனமுமன்றி வசந்தன் மாஸ்டர் பாடவகுப்பை நடத்திக் கொண்டிருந்தார்.

# இலக்கியக் கோட்பாடு

பேராசிரியர் கா. சிவத்தம்பி



எம்மைப் பொறுத்தவரையில் இலக்கியக் கோட்பாடு என்பது "குறிப்பிட்ட ஓர் இலக்கியக் கொள்கை காரணமாக இலக்கியத்தின் உருவிலும் பொருளிலும் எற்படும் அமைதி நெறி அல்லது ஓரே சார்பான அமைவு நெறிகளின் தொகுதி" என ஒரு வரைவிலக்கணத்தை வகுத்துக் கொள்ளலாம். அவ்வாறு வகுத்துக் கொண்டபின் கோட்பாடுகள் எவ்வாறு கண்டறிந்து கொள்ளப்படுகின்றன என்பதை நோக்குவோம்.

கோட்பாடுகள் கண்டறியப்படும் முறையில் ஒரு முக்கிய வேறுபாடுண்டு. இலக்கிய ஆய்வாளர்கள் கோட்பாட்டை உய்த்தறிந்து கொள்ளும் முறைமைக்கும் ஆக்க இலக்கியகாரன் கோட்பாடொன்றினை எண்ணித்துணிந்து கொள்ளும் முறைமைக்கும் வேறுபாடு உண்டு. ஆய்வாளர்கள் இருவேறுவழிகளால் உய்த்தறிந்து கொள்வர்.

முதலாவது, ஓர் இலக்கிய அல்லது கலைகளை ஆராய்ந்து அவற்றின் உருவ, பொருள் நிர்மாண முறைமைகளை விளக்குவதாகும். அரிஸ்ரோற்றில் தனது கால இலக்கியங்களை ஆராய்ந்து கவிதைக்கும் நாடகத்திற்கும் வகுத்த பொது நெறிகளை அன்றே தொல்காப்பியம், தனது காலத்திலும் அதற்கு முன்னரும் நிலவிய இலக்கியங்களை வகுத்தறிந்துகொண்ட பொருளியக்கணங்களை, அன்றே பரத முனிவர் தனது காலத்திலும் அதற்கு முன்னரும் நிலவிய, நாடக இசை மரபுகளை வகுத்தறிந்து கொண்ட ரஸ அடிப்படையினை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

இவற்றைவிட ஒப்பியல் இலக்கிய அடிப்படையிற் சொல்லப்படும் ஆய்வுகளினடியாகவும் அமைவு நெறிகள் - கோட்பாடுகள் -இனம்கண்டு கொள்ளப்படலாம். இவை இரண்டும் வரன்முறையான புலைமை நெறிப் பட்டவை கல்வி நெறிசார்ந்தவை. ஆனால், ஒரு மொழியின் ஆக்க இலக்கிய கோட்பாடுகள் தொழிற்படும் முறையை அறிந்து கொள்வதற்கு ஆக்க இலக்கியகாரன் ஒருவன் ஒரு கோட்பாட்டை எவ்வாறு வகுத்துக் கொள்கிறான் என்பது பற்றி அறிவது அத்தியாவசியமாகும்.

ஆக்க இலக்கியகாரன் ஒருவன் அல்லது கலைஞன் ஒருவன் தன் முன்னே நிலவுகின்ற பாரம்பரியத்தையும் தான் எழுத்திற் கொண்டுள்ள கொள்கைப்படி எடுத்து கூறுவதற்கு தனக்கு முன்னுள்ள பாரம்பரியம் முற்றுமுழுதாக உதவாது என்பதை நன்கு அறிந்து, அதாவது அவை தனது நோக்கு நெறிக்கு - கொள்கைக்கு, முற்றிலும் பொருத்தமானவையல்லவென மனமிழந்து, புதியதொரு தரிசனத்தை - நோக்கு நெறியையும் அமைதிநெறியையும் - அமைத்து அதன்படி கலைஇலக்கிய ஆக்கத்தில் இறங்கும் பொழுது ஒரு புதிய கோட்பாடு தோன்றுகிறது.

அவ்வாறு புதிய கோட்பாடுகளை நிறுவியோர்களாகக் கருதப்படும் மேல்நாட்டு ஆக்க இலக்கியகாரர்களுக்கு உதாரணமாக எமிலிஸோலோ, டி. எஸ். எலியட் ஆகியோரைச் சொல்லலாம். தமிழ் பாரம்பரியத்தில் இவ்வாறு கருதப்படத்தக்கவர்களாக இளங்கோ, பாரதியார் போன்றோரைக் குறிப்பிடலாம். இந்தியப் பின்னணியில் இத்தகைய ஒரு புதிய இலக்கிய கோட்பாட்டை நிறைவுடன் செய்தவர்களாக ரவீந்திரநாத் தாகூரையும், இக்பாலையும் கொள்ளலாம். சுப்பிரமணிய பாரதியார் புதிய ஆக்கங்களைத் தந்தாராயினும், அப்புதிய ஆக்கங்களின் அடிப்படையாக விளங்கிய கொள்கையையும் அக்கொள்கை முகிழ்ந்த புதிய ஆக்கங்களின் அமைவு இயல்புகளையும் பூரணமாக எடுத்து விளக்கவில்லை. அவ்வாறு எடுத்துவிளக்குவதற்கான ஆயுள் நீட்சி அவருக்கு இருக்கவில்லை.

ஆக்க இலக்கியகாரன் இலக்கிய கோட்பாடொன்றினைத் தான் மேற்கொள்வதற்கான காரணங்களை விளக்கும் போது இலக்கிய கோட்பாடுகளுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்குமுள்ள உறவு துல்லியமாகத் தெரியவரும். ஏனெனில் ஆக்க இலக்கியகாரன் இலக்கிய கோட்பாட்டை நோக்கும் முறைமைக்கும், இலக்கிய விமர்சகர்கள் நோக்குவதற்கும் வேறுபாடுண்டு. ஆக்க இலக்கியகாரன். இலக்கியக் கோட்பாட்டைப் பற்றி எண்ணும் பொழுதும் விளக்கும் பொழுதும் அவன் அதனைத் தனது ஆக்கத்தின் உந்துசக்தியாகவும் நிர்மாண முறைமையாகவும் தான் காண்கின்றான்.

இலக்கியத்துக்கும் சமூகத்திற்கும் பிரிக்கப்பட முடியாத உறவு உள்ளது. உண்மையே ஆனால், இலக்கியக் கோட்பாட்டுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்குமுள்ள உறவை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நடைமுறையில் இருக்கும் ஓர் இலக்கியக் கோட்பாடு புதிதாகத் தோன்றும் சமூகப் பிரச்சினைகளை நன்கு ஆராய்வதற்கு இடமளிக்குமா என்பது பிரச்சினையாகின்றது. நாம் இதுவரை பார்த்த அளவில் இலக்கியக் கோட்பாடு என்பது ஆசிரியரின் வாழ்க்கை பற்றிய தரிசனத்தின் படியாகத் தோன்றுவது என்பது புலனாகிறது. குறிப்பிட்ட ஓர் உலக நோக்கத்தினடியாகத்தான் ஆக்க இலக்கியம் அமையும். இப்பண்பினைப் பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு இலக்கியத்தின் சில அடிப்படைத் தன்மைகளையும் இலக்கியக் கோட்பாடு ஆக்க இலக்கியம் மூலம் முகிழ்க்கும் முறையினையும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

இலக்கியம், இலக்கிய ஆக்கம் பற்றிய வரன்முறை விதிகள் மரபுகள் என்பன சமூக இயக்கத்தின் உயர்தளத்தில் உள்ளவை. நீண்ட காலச் சமூக இயக்கம் காரணமாகக் கோட்பாடுகளாக நிறைபேறுடைமை மாற்றப்படும் முறைமை பற்றியறிவதற்கு இலக்கியம் பற்றிய சில அடிப்படை உண்மைகளை உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஆக்க இலக்கியக்காரன் ஒருவன் இலக்கியக் கோட்பாடு ஒன்றினைத் தோற்றுவிக்கும்போது, அவ்வாக்கத்தில் என்ன நிகழ்ந்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

எழுத்தாளன் தனது அனுபவங்களை, அதாவது தன் சுற்றறிவினாலும். பட்டறிவினாலும் அறிந்துகொண்ட உலக உண்மைகளை இலக்கிய நிலைப்படுத்திக் கொள்வதற்கு அவன் மேற்கொள்ளும் இலக்கியப் பொருளும் அமைவு நெறியும் உதவுகின்றன. எனவே, குறிப்பிட்ட இலக்கிய ஆக்கத்தில், ஆசிரியனது அனுபவம், உணர்வு ஆகிய சொல் ஊடாகப் பல்வேறு அமைப்புகளுடன் வெளிவருகின்றன. இங்கே அனுபவம், உணர்வு எனப்படுபவை அவனைப்பாதித்த சமூகப் பிரச்சினைகளின் பாற்பட்டனவே.

எழுத்தாளர்கள் சமூகப் பிரச்சினையை அணுகும் முறையிலே, இலக்கியக் கோட்பாட்டின் தன்மைகள் தீர்மானிக்கப் படுகின்றன என்ற உண்மையை வலியுறுத்தியும் அதே வேளையில், சமூகப் பிரச்சினையினை எழுத்தாளன் தன் உணர்விற் பதித்துக் கொள்கின்றான் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

எனவே ஆக்க இலக்கியகர்த்தனுக்குச் சமூகப் பிரச்சினைபற்றிய தெளிவும் அதனை இலக்கிய நிலைப்படுத்தும் முறைமைபற்றிய தெளிவும் திறனும் இருத்தல் வேண்டும். இத்திறன்களிருக்கும் பொழுதுதான் கோட்பாட்டினை எடுத்துணர்த்தும் ஆக்கங்கள் தோன்ற முடியும், ஆக்க இலக்கிய கர்த்தனின் இலக்கியக் கோட்பாடு அவன் மனிதவாழ்க்கையை விளங்கிக் கொள்ளும் முறைமையையும் வாழ்க்கை விளக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கான அணுகு முறையையும் எடுத்துக்காட்டி நிற்கும்.

இலக்கியக் கோட்பாடு வெறுமனே கருத்து நிலைபட்ட ஒரு பிரகடனமாக மாத்திரம் நில்லாது, அது சமூகத்தில் மனிதன் இயங்குகின்ற முறைமையைத் தெளிவுபடுத்துவதோடு, மனித வாழ்க்கை பற்றிய ஒரு கண்ணோட்டத்தைத் தருவதாகவும் அமைதல் வேண்டும்.

# இதுவும் புதுவரவுதான்

## வவுனியூர் இரா. உதயணன்

முன்வாசற்படிகளில் அமர்ந்திருந்த சாரதா வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். இரவின் ஆதிக்கம் மறைந்து இனிய கதிரவன் மெல்ல கதிர்களை வெளிநீட்டத் தொடங்கியிருந்தான். நேரம் ஆறு மணியை எட்டிக் கொண்டிருந்தது. மழைக்காலம் ஆதலால் கதிரவன் மலைப் பாறைகளைத் தாண்டி வெளியே எட்டிப் பார்க்க சற்றுத் தாமதமாகும்.

சேவல்கள் கூவும் சத்தமும் ஆட்டோக்காரர்கள் ஆட்டோக்களை வேகமாக ஓட்டும் சத்தங்களும் விடிவதற்கு முன்பு நான்கு மணிக்கே ஆரம்பித்து விட்டன.

மெல்லியதாய் வயிற்றைத் தடவிக் கொண்டு வீட்டின் முன்னே பரந்து வளர்ந்து நிழல் கொடுக்கும் மாமரத்தை நிமிர்ந்து பார்த்தாள். சிரியான் குரங்கொன்று தனது குட்டியை அணைத்தபடி தலையைத் தடவிக் கொடுத்தபடியே சாரதாவைப் பார்த்து முழித்துக் கொண்டிருந்தது.

இந்த குரங்கு கூட குட்டியை அணைத்து தடவிக் கொடுத்து தனது பாசத்தைக் காட்டுகிறதே. எனக்கு மாத்திரம் ஏன் இப்படி ஒரு நிலை.... நினைத்த வண்ணம் மெல்ல எழும்பி படுக்கையறைக்குள் சென்றாள்.

சேரன் விடும் குறட்டைச் சத்தம் ஒருவாத்தியம் போன்று இசைக்க அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். இந்த உலகையே மறந்து இதமாகத் தூங்கும் சேரனைப் பார்க்க சாரதாவுக்கு ஒரு புறம் சோகமும் மறுபுறம் கோபமும் வந்தது.

"குறைபாடுகள் ஒன்றும் ஒருவனுக்கு இழிவானதல்ல" என்று சேரனின் நண்பன் நகுலன் கூறியது சாரதாவிற்கு ஞாபகத்திற்கு வந்தது.

மெல்லச் சென்று சேரன் அருகில் கட்டிலில் அமர்ந்து கொண்டாள். இடது கையை எடுத்து அவனது தலையை வருடிவிட்டாள்.

வாழ்க்கை என்பது எதிர்பார்ப்புக்களைச் சுமந்து செல்கிறது. ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகிவிட்டால்......



சேரனோ ஒரு கவலையும் இல்லாதவன் போல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். நான் யோசித்து கவலைப்படும் அளவுக்கு சேரன் யோசிக்கவில்லையே என்ற கவலை சாரதாவின் மனதில் எப்பவும் இருந்து கொண்டேயிருந்தது.

ஆனால் சேரன் அப்படியானவன் இல்லை. சந்தோஷமோ கவலையோ மனதிற்குள் பூட்டி வைத்து வெளிக்காட்டாதவன். வாழ்க்கையில் மறக்க முடியாதவை இதயத்திற்குள்தான் பூட்டப்பட்டிருக்கும்.

சேரனின் தலையைத் தடவிக் கொண்டிருந்தவள் இடது கையை எடுத்து அவனது வலது கையை இறுகப்பிடித்தாள்.

மெல்லத் திரும்பிப்படுத்தான் சேரன். சாரதாவின் தலையின் வருடலுடன் தூக்கம் கலைந்து கண்களை மூடியபடியே படுத்திருந்த சேரனுக்கு சாரதா என்ன கேட்பாள் என்று நன்றாகவே தெரியும்.

அதனால் என்னவோ கண்களை திறக்காத வனாய் அவள் கட்டிலை விட்டு எழும்பிப் போகும்வரை காத்திருந்தான் சேரன்.

அவன் மனதிலிருந்த தாழ்வு மனப்பான்மை அவனை குடைந்தெடுத்துக் கொண்டிருந்தது.

மனவலிமை உடையவன் எந்த விடயத்திலும் வைராக்கியமாக இருந்துவிட முடியும் என்று ஒரு நண்பன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

ஆனால் சாரதாவின் முன் அவன் தன் மனவலிமையைக் காட்டிவிட முடியாது. அதற்குக் காரணம் அவனேதான்.

சாரதாவிற்கும் சேரனுக்கும் திருமணம் முடிந்து பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன. ஓடி மறைந்த அந்த பத்து ஆண்டுகளில் உற்றார் உறவினர்களிடமிருந்து எத்தனை கேள்விகள் ஏவு கணைகள் இருவருமே பதில் சொல்ல முடியாதவர்களாய் தவித்தார்கள்.

சில திருமணங்களில் பூப்புனித நீராட்டு விழாக்களில் சாரதாவை முன்னுக்கு நிற்க விடாமல் ஒதுக்கினவர்கள்."இவள் சாரதா ஒரு மலடி அவளை எப்படி முன்னுக்கு நிற்க விடுகிறது" இப்படி சில உறவினர்கள் பேசியது சாரதாவின் காதிற்கு எட்டினாலும், அதைக் கேட்டு கண்கள் கலங்கினாலும் மௌனமாகவே அழுதாள் சாரதா.

சேரனுக்கும் இது தெரியாமல் இல்லை. அவனும் கூட மனதிற்குள் அழுதான்..... சாரதாவிற்குத் தெரியாமல். "அத்தான் என்ர கர்ப்பப்பையில் பிள்ளை தங்காதா" என்று கேட்டு சாரதா ஒரு முறை அழுத போது தான் சேரனுக்கும் மகப்பேற்று வைத்திய நிபுணரைப் போய்ச் சந்தித்தால் என்ன என்ற கேள்வி மனதில் எழுந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு வைத்திய நிபுணரை போய் சந்தித்த போதுதான் அவர் பல பரிசோதனைகள் செய்ய வேண்டும். அந்தப் பரிசோதனைகளின் முடிவிலிருந்துதான் குழந்தைப் பாக்கியம் இருக்கா இல்லையா என்று தெரியவரும் என்று திடமாகச் சொல்லிவிட்டார்.

மருத்துவர் குறித்த திகதியில் இருவரும் பரிசோதனைக்காகச் சென்றனர். சேரனதும் சாரதாவினதும் தலைவிதியைத் தீர்மானிக்கும் முடிவுகள் வர இரண்டு வாரங்கள் எடுத்தன.

இருவரையும் தனது அறைக்குள் கூப்பிட்ட மகப்பேற்று வைத்திய நிபுணருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். சாரதா கண்கள் கலங்கிய நிலையில் தனது அழகான முகத்தால் மருத்துவரைப் பார்த்தாள்.

சேரனோ மருத்துவரையும் சாரதாவையும் மாறி மாறிப் பார்த்தான். சாரதாவிற்கு குழந்தை பெற்றெடுக்கும் தகுதியில்லையோ என சேரனின் மனம் துடித்தது.

மருத்துவர் மெல்லிய குரலில் சாரதாவைப் பார்த்து "உங்களிடத்தில் ஒரு பிரச்சினையும் இல்லை" என்று சொல்ல அப்படியெண்டால்....., சேரன் இழுத்தான்.

"தம்பி பிரச்சினை உம்மிடத்தில் தான் இருக்குது. எப்படிச் சொல்லுறது என்றுதான் தெரியேல்ல"...... மருத்துவ நிபுணர் இழுத்தார்.

சேரன் சாரதாவை திரும்பிப் பார்த்தான். "தம்பி" மீண்டும் டாக்டர் கூப்பிட்டார்.

கண்கள் கலங்கிய நிலையில் சேரன் டாக்டரையே பார்த்தான்.

"உமக்கு ஆண்மைத் தன்மை குறைவு. விந்தணுவை உற்பத்தி செய்ய விதைப்பை களுக்கு ஆணையிடும் மூளையின் ஒரு ஹார்மோன்தான் நுண்ணுயிர் ஊக்குவிக்கும் ஹார்மோன் (ஃஎப்எஸ்வெருச்). இந்த ஹார்மோன் ஒழுங்காகச் சுரக்கவுமில்லை. நுண்ணுயிர்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டில் பின்தங்கியே இருக்கிறது. இதற்கு மூளையும் ஒரு வகையில் ஒரு காரணம். மலட்டுத்தன்மை என்பது வெறுமனே பெண்களைச் சார்ந்த பிரச்சினையல்ல. இனப்பெருக்கம் என்பது ஆண், பெண் இருபாலாரின் செயற்பாடு. உமக்கு இந்தக் குறைபாடு இருப்பதால் குழந்தைப் பாக்கியம் கிடையாது."

சேரன் விக்கி விக்கி அழுதான். சாரதா சேரனின் வலது கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்."வேறு வழியே இல்லையா டாக்டர்" அழுதபடியே டாக்டரிடம் கேட்டான் சேரன்.

"வழிகள் உண்டு. ஆனால் நான் சொல்லும் வழியை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று தெரியாது" சொல்லிவிட்டு டாக்டர், சேரனையும் சாரதாவையும் மாறி மாறிப் பார்த்தார்.

சேரனுக்கும் சாரதாவுக்கும் டாக்டர் சொன்னது புரியவில்லை.

"என்ன டாக்டர் இழுத்தான்"...... சேரன்.

"மருத்துவ விஞ்ஞான முறையில் நீங்கள் குழந்தை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கு"

"டாக்டர் எங்களுக்கு ஒரு வாரிசு வேணும். அதற்கு நீங்கள் தான் உதவி செய்ய வேண்டும்." கெஞ்சினாள் சாரதா.

டாக்டர் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார். பிறகு....

"நான் சொல்லும் விடயத்தை நீங்கள் கவனமாகக் கேட்க வேணும்: அதன் பின்பு இருவரும் நேரமெடுத்து கதைத்துப் பேசி ஒரு முடிவுக்கு வர வேணும்"

சேரனும் சாரதாவும் தலையைத் தலையை ஆட்டினார்கள்.

"உங்கள் மனைவிக்கு எந்தவொரு குறைபாடும் இல்ல. குறைபாடு உங்கள் இடத்தில் தான் இருக்கு. உங்கள் இருவருக்கும் ஒரு வாரிசு வேணும் என்றால் நான் சொல்லுற முறைப்படி நீங்கள் நடக்க வேணும்.

இருவரும் ஆவலுடன் மகப்பேற்று டாக்டரைப் பார்த்தார்கள்.

"எங்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு ஆணுடைய விந்தை உங்கள் மனைவியின் கருப்பைக்குள் செலுத்தி கருத்தரிக்க வைக்க வேணும். அதற்காக sperm donors என்று பல பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். இந்த முறை வைத்தியத்தை இந்தியாவில் எனது டாக்டர் நண்பர் ஒருவர் செய்து வருகிறார். அதாவது உங்கள் மனைவியின் கருப்பையில் இன்னொரு ஆணின் விந்துவைச் செலுத்தி தக்கவைத்து கருத்தரிக்க வைக்க வேணும். நான் ஏன் இதைத் திரும்பவும் வலியுறுத்தி சொல்கிறேன் என்றால் எதிர்காலத்தில் உங்கள் இருவருக்குமிடையிலோ அல்லது பிறந்து வளரும் பிள்ளைக்கோ ஒரு பாதிப்பும் வரக்கூடாது என்பதற்காகத்தான்."

சேரனும் சாரதாவும் ஒருவரை ஒருவர் மாறி மாறிப் பார்த்தார்கள்.

"இந்த முறைக்கும் உடல் உறவுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது" டாக்டர் மீண்டும் வலியுறுத்திச் சொன்னார்.

இரண்டு பேரும் நேரமெடுத்து கலந்து ஆலோசித்துவிட்டு என்னை வந்து காணுங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார் டாக்டர்.

வீடு வந்தடைந்த சேரனும் சாரதாவும் இதுபற்றி அன்று முழுவதும் பேசவில்லை. இருவரும் யோசனையில் ஆழ்ந்திருந்தார்கள். அன்றைய இரவு இருவரும் படுத்திருக்கும் போது சேரன் மெல்ல பேச்சைத் தொடங்கினான்.

"சாரதா டாக்டர் சொன்னது பற்றி உன்ர கருத்து என்ன?"

சாரதா சேரனின் பக்கம் திரும்பிப்படுத்தாள்.

"எங்களுக்கு வாரிசு வேணும்தான். அதற்காக எப்படி இன்னொரு ஆணின்ர உயிரணுவ என்ர கருப்பப் பைக்குள்ள செலுத்தி.... இதைவிட தத்து எடுத்து விட்டுப் போகலாமே."

சேரன் சாரதாவின் தலையைத் தடவிக் கொடுத்த வண்ணம்......

"கற்பு என்ற வரைவிலக்கணத்துக்கும் இதற்கும் ஒரு சம்மந்தமும் இல்லை சாரதா. அதை நீ முதலில் புரிந்து கொள்ள வேணும். ஒரு பிள்ளையை தத்தெடுத்து வளர்ப்பதை விட, டாக்டர் சொன்ன இந்த முறையில் போனால் பிறக்கும் குழந்தையில் உனது குணாதிசயங்கள் (DNA) இருக்கும் வாய்ப்புக் கூட இருக்கும்தானே."

சாரதா ஒரு பதிலும் சொல்லாமல் மறுபக்கம் புரண்டு படுத்தாள். சேரனும் மௌனமாகவே படுத்துத் தூங்கினான்.

அடுத்தநாள் முழுவதும் சாரதா சமையல் கூடச் செய்யாமல் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். சேரனும் கடையிலிருந்து சாப்பாடு வாங்கி வந்தான்.

இரண்டு நாட்கள் அப்படியே ஓடிவிட்டன.

"என்ன சாரதா உன்னிடமிருந்து ஒரு பதிலும் இல்லையே" சேரன் கேட்டான்.

"நீங்கள் என்ன நினைக்கிறியள்" சாரதா பதிலுக்கு சேரனிடம் கேட்டாள்.

"எனக்குப் பூரண சம்மதம்" சிரித்த முகத்துடன் பதில் சொன்னான் சேரன்.

"எதிர்காலத்தில் என்ர பிள்ளை இல்ல என்று குழப்பம் செய்ய மாட்டியளே"

சில கணங்கள் சேரன் சாரதாவைப் பார்த்தான்.

"ஏன் சாரதா அப்படிச் சொல்லுறாய். உன்ர ரத்தம் தானே பிறக்கும் பிள்ளையிலையும் ஓடப் போகுது"

சாரதாவிற்கு சேரனின் விளக்கமும் புன்முறுவலும் சந்தோஷத்தை ஏற்படுத்த ஒரு வாரம் கழித்து இருவரும் மீண்டும் டாக்டரைச் சந்திக்கப் போனார்கள்.

அங்கே கலந்து பேசி முடிவுகள் எடுக்கப்பட்டன.

சேரனும் தான் வேலை செய்யுமிடத்தில் ஒரு வருட சம்பளம் இல்லாத லீவிற்கு காரணம் சொல்லி விண்ணப்பிக்க அவர்களும் அனுமதித்து விட்டார்கள். டாக்டர் இந்தியாவிலிருக்கும் தனது நண்பரான மகப்பேற்று டாக்டருடன் கலந்து பேசி திகதியைக் குறிக்க சேரனும் சாரதாவும் இந்தியாவிற்குப் புறப்பட்டார்கள்.

அங்கு பல பரிசோதனைகளின் பின்பு ஒரு ஆண்மகனின் விந்து சாரதாவின் கருப்பையிற்குள் செலுத்தப்பட்டு தங்கவைக்கப்பட்டது. சில வாரங்களிலேயே அவள் கர்ப்பிணி ஆனாள்.

சேரனுக்கு அளவுக்கதிகமான பூரிப்பு. இனி எவரும் என்ர மனைவியை மலடி என்று சொல்லமட்டார்கள் என்ற ஆர்வம் கலந்த மௌனம்.

கர்ப்பிணியான சாரதா பத்து மாதங்களில் ஒரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். பதினைந்து மாதங்களிற்குப் பின்பு மூவரும் இலங்கை வந்து சேர்ந்தார்கள்.

ஆண்குழந்தைக்கு அகிலன் என்று பெயர் வைத்தார்கள்.

மூடியில்லாத முகத்திற்குள்தான் வாழ்க்கையில் போலியில்லாத புன்னகை இருக்கும் என்பது போல சேரனதும் சாரதாவினதும் முகத்தில் புதுத்தெளிவும் புத்துணர்ச்சியும் தெரியத் தொடங்கியது.

அவர்கள் வீட்டிற்கு வந்து போன உறவினர்களும், நண்பர்களும் "தம்பி சேரா உன்னைப்போல் அச்சாக உன்ர மகன் பிறந்திருக்கின்றான் என்று சொல்லும் போதெல்லாம் ஒரு கணம் அவன் தனது உயிரணுக்களின் பாதிப்பைப் பற்றி நினைத்துக் கொள்வான். ஆனால் உன்னைப்போல அச்சாக மகன் பிறந்திருக்கின்றான் என்று சொல்லும் போது பெருமைப்படுவான்.

சாரதாவும் இப்ப மலடியில்லை. சாஸ்திரங் களையும், சம்பிரதாயங்களையும் நம்பியிருக்கும் நமது சமுதாயத்திற்கு இதுவும் ஒரு புதுவரவுதான்.

■

**உங்கள் விருந்து**

## 'தாயக'மே!

'தம்பு சிவா' வின்
தமிழ் ஏடு பெற்றேன்!
தும்பி பூத் தேனைத்
துய்ப்பது போன்றே......

சுவைத்தேன் எல்லாத்
தொடர் கட்டுரையும்!
எவையும் நன்றாய்
எழுதியே உள்ளார்!

இன்னும் இருந்து
எழுபத்தைந்தையும்
நன்னூறா க்குக,
நலம் தர வரைக!

வாழ்த்துகிறோம் நாம்,
வாணி அருளால்
வீழ்த்துக துயர்கள்,
வெல்க 'தாயக'மே'

**"தாமரைத் தீவான்"**
(ஈச்சந்தீவு - கிண்ணியா

# சத்திய தரிசனமாகும் ஒரு சாட்சி புருஷன்

-ஆனந்தி-

கொஞ்சும் மொழிதனிலே கூடும் உயிர் தஞ்சம் இறை என்றே. சாதிக்கும் உண்மை துஞ்சும் நிலை மறக்கும், இவர் தூய நல் இருப்பில் சாய்ந்திடும் நிழல் போகச் சகாப்தம் எனவே நிற்கும்.

இறை ஞானம் பற்றி, இது வரை பெரிதாக எவரைப் பற்றியும் நான் எழுதியதில்லை. மாறாக இன்று எவரும் அறியாத புத்தம் புது யுகமே கண் திறந்து காட்சிக்கு நிற்பது போல், மேலான ஆன்மீக ஞானத்திலும் ஒரு புத்தி கூர்மை மிக்க அறிவு மேதையாகவும் புடம் போடப்பட்டு ஒளிர்ந்து பிரகாசிக்கிற ஒரு மகோன்னதமான மகா ஞானியைப் பற்றி எழுத நேர்ந்த, என் ஈடு இணையற்ற தவப் பேறு குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன்.

பாரத நாடு ஒரு புண்ணிய பூமி மகா ஞானிகளும் சித்தர்களும் ரிஷிகளும் வாழ்ந்து கழித்த தெய்வீக மண் அது இன்றும் அவர்கள் வாழ்கிறார்கள். ஆன்மீக ஞானிகளாகத் தெய்வீக மண்ணின் சுயத்தோன்றல்களாய், சுத்த வெளியில் சுடர் விட்டெரியும் ஜோதி மயமான உண்மையான அவர்களின் இந்தக் காட்சி தரிசனத்திலும், தெய்வீகக் களையிலும் சுட்டெரிக்கின்ற நம் பாவங்களே கரைந்து காணாமல் போய்விடும் என்பது ஒரு யாதர்த்த உண்மை. அப்படியொரு கலங்கரை விளக்கமாக அருள் நிலைக் காட்சி புருஷனாக, என் கண்களில் களைகட்டித் தோன்றி நிற்கும் ஓர் அவதார நாயகன் உயர்திரு ச. பழனிச்செல்வம் அவர்கள் பற்றி நான் சொல்லப் போகும் கதை தான் இது. நீங்களெல்லாம் படித்துச் சுவைப்பதற்கும் வாழ்க்கை நலமான சுகம் பெறுவதற்குமான, வெறும் கதையல்ல இது. இவரின் இந்தப் புண்ணிய கதையைப் படித்தால் கடவுளையே நேரில் காண்பது போல ஆனந்தமயமான ஒரு தரிசன நிலை உங்களுக்குக் கிட்டும் என்பதை. ஒரு சத்திய வேதமாகவே இங்கு நான் கூறுவேன். சிறுவனாக இருந்த போதே தந்தையை இழந்து கஷ்டப்பட்ட நிலையிலும், வீட்டிலே நிலவிய



தெய்வீக சூழ்நிலையால் சிறுவயதிலேயே பக்தி மார்க்கம் ஒரு தவமாகவே இவரை வந்தடைந்தது பின்னர் மிக இளவயதிலேயே. சுமார் மூன்று வருடங்கள் வரை இமயமலையில், ஒரு அகோரியாக ஒரு குருவின் கீழ் குருகுல வாசம் செய்து தீக்ஷை பெற்று, நிர்கவில்ப சமாதிநிலை கைவரப் பெற்ற ஒரு மெய்ஞ்ஞானி இவர். இவர் குருவின் திருநாமம் ருத்ரம் மகராஜ் என்பது அவர் வீடு தேடி வந்தே இவரைத் தன் சீடனாகவே ஏற்றுக் கொண்டவர். அவருடன் இமயமலைக்குச் சென்று, அவரையே தனது குருவாக ஏற்று அவர் வழிகாட்டலில், ஒரு அகோரியாகவே தன்னை அர்ப்பணித்துத் தன் உடலை வருத்தி மேலான தவம் செய்து, இறைநிலையில் புடம் கொண்டு தேறிய மிகப் பெரிய ஆன்மீக ஞானி இவர். இவர் ஒரு ஞானி மட்டுமல்ல, சட்டம் பயின்ற ஒரு வழக்கறிஞருமாவார். அதைப் படித்துத் தேறிய பிறகே, இவரின் இந்தத் துறவு வாழ்க்கை. அகோரி என்றால் யார் என்று வாசகர் மனதில் ஒரு கேள்வி எழக் கூடும். ஆத்மா என்றாலே மாயையின் பிடியில் சிக்கித் தவித்து, துன்பத்திலேயே உழன்று மடிந்து போகும் சராசரி மனிதர்களைப் பொறுத்த வரை, விளங்காத புதிர் தான். இதையும் தாண்டி இன்னும் விளங்காத புதிராக இருக்கும், அகோரிகளை விளங்குவதென்பது மிகக் கடினமேயென்றால் அதைப் பற்றி விளக்கிச் சொல்ல வேண்டிய தார்மீகக் கடமை எனக்குண்டு.

அகோரி என்பவர் உடலையே அடியோடு மறந்து போன, உள்ளார்ந்த ஒளி வியாபகமாய்,

தன்னை வெளிப்படுத்திக் கொண்டு, வெளிப் பார்வைக்கு ஒரு சித்தராகவே உலாக் கொண்டு உன்னத தவ நிலையில் வாழும் ஞானி. மதுரையில் அவதரித்த திரு. பழனிச்செல்வம் அவர்களும், அதே நிலையில் பூரண ஞான நிஸ்டை கைகூடிய ஒரு தவயோகியாகவே வாழ்ந்து கொண்டிருப்பவர்.

சத்திய தரிசனமான அழிவற்ற பிரம்மத்தின் ஒரு சாட்சி புருஷனாகவே அவரை இனம் காண்பவர்களுக்கு, அவர் என்றும் கடவுள் தான். ஏகம் சத் என்பதே அவருக்குக் குரு உபதேசமாகக் கிடைத்த உன்னத மகாவாக்கியம். இதன் பொருள் பிரம்மம் ஒன்று தான். அதுவே ஏகமாகப் பலவாக எல்லாமாகி நிற்கின்ற பரம்பொருள் மொத்த பிரபஞ்சமும் அவரே. அவரைத் தவிரத் தனியொரு உயிரில்லை. எல்லா இயக்கமும் அவரே, மேலும் சொல்வதானால் ஆன்ம சைதன்ய இருப்பு நிலையும் அவரே. திருமூலர் நாயனாரின் திருமந்திரங்களின் வாயிலாகவே இந்த அரிய தத்துவத்தைப் பொருள் விளங்க, உணர்ந்து கொள்ளலாம். ஓர் அகோரியாக வாழ்ந்து நிர்விகல்ப சமாதி நிலை கை வரப் பெற்று, இன்றும் தீனர்களுக்கெல்லாம், அவர்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரத் தீர்வு கூறி, வழி நடத்தக் கூடிய மிகச் சிறந்த சக்தி வாய்ந்த, ஒரு மகா ஞானியே இவர். இவரைச் சுவாமி என்றே பலரும் அழைப்பார்கள். சிலர் ஆச்சாரியார் என்றும் சொல்வதுண்டு. மானசீகமாக இவரைத் தரிசனம் கண்டு வணங்க எவ்வளவோ கொடுத்து வைத்திருக்க வேண்டும். இவர் ஒரு ஞானி மட்டுமல்ல, ஆன்ம ஞானத்தில் புடம் போடப்பட்டு மிளிரும், தன்வயமாகி விட்ட பேறறிவினால், சொற்திறன் படைத்த ஒரு ஆன்மிக சொற்பொழிவாளராகவும் இவரின் இறை நிலை தரிசனம் களை கட்டி நிற்கும் சராசரி மனிதர்களை விடவும் இவரின் சைதன்யமான இருப்பு நிலை ஒளி பிரவாகமாகக் கண்களையே கூச வைத்து ஆட்கொள்ளும், துல்லியமான பரத்துவ நிலை கண்ட தெய்வீக தரிசனமேயாகும். இதைத் தரிசனம் காண்பது கூடப் பூர்வ புண்ணிய தவத்தின் பலனாகவே நடந்தேறும். அவரை நேரில் தரிசித்துப் பலன் பெற முடியாமல் போனாலும் அவர் பற்றிய எனது இந்த ஆன்மீகக் கட்டுரையை அனைவரும் படித்துணர்ந்து பயன் பெற இறையருள் துணை நிற்க வேண்டி இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

■

**மனித நேயத்தின் உச்சம்**

# நாட்டின் அமைதிக்காகக் கால்களை முத்தமிட்ட பாப்பரசர்

**- தேடலோன் -**



2013 ஆண்டிலிருந்து உள்நாட்டுப் போரால் பாதிப்படைந்துள்ள தெற்கு சூடானில் சுமார் நான்கு இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டதுடன் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் உலக வாழ் கத்தோலிக்கர்களின் தலைவராகவும், கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தையாக வும் போற்றப்படும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தென் சூடானுக்குச் சமாதானத் தூதுவராக விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோரின் கால்களை முத்தமிட்டதோடு அவர்களின் கரங்களைப் பற்றி ***“எனது இதயத்தால் நான் உங்களிடம் கேட்கிறேன் அமைதியை நிலைநாட்டுங்கள்”*** என்று கோரிக்கை விடுத்தார். சமாதானத்துக்காகவும் அமைதிக்காகவும் மேற்கொண்டுள்ள முயற்சி களின் உச்சமாக இச்செயல் நோக்கப் படுகின்றது. இந்த நெகிழ்ச்சியான சம்பவம் உலகவாழ் மக்கள் அனைவரையும் ஈர்த் துள்ளது. என்னே! இப் பெருந்தகையின் மனிதாபிமானம், இன, மத, குல பேதங்களுக்கு அப்பால் இமயமென உயர்ந்து நிற்கின்றார் பாப்பரசர். உண்மையிலேயே பரிசுத்த பாப்பரசர் பரிசுத்தமானவர் தான்.

# இது ஒரு இலுப்பை மரத்தின் கதை

-சிவசிவா-

சின்னையரின் வீட்டு வளவுக்குள் தெற்குப் பக்கம் எல்லையை அண்டி என் அடர்ந்த தோற்றம் மிகவும் உயர்ந்து நிற்கிறது. நான் எப்படி உருவானேன் என்று எனக்குத் தெரியாது. என்னை விரும்பி வளர்த்திருப்பார்கள் என்று நம்பவில்லை. தற்செயலாக நான் உருவாகினேன்; வீட்டாரும் எனக்குத் தொந்தரவு தராமல் வளரவிட்டுவிட்டார்கள். நான் வளர்ந்து கிளை பரப்பி அடுத்த வீட்டு கந்தையருக்கும் பயன் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

கந்தையர் வீட்டு வளவில் ஒரு பெரிய புளியமரம் அடர்ந்து படர்ந்து இருந்தது. அதன் தோற்றத்தைப் பார்க்கும் போது என் வயதிலும் இருமடங்கு வயது இருக்கும் என்று பார்ப்பவர்கள் சொல்லுவார்கள். அந்தப் புளியமரத்தில் காகங்கள் கூடுகட்டி குஞ்சுகள் பொரித்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தன. என்னில் காகமோ அல்லது வேறெந்தப் பறவைகளோ நிரந்தரமாகக் கூடுகட்டித் தங்குவதில்லை. காகங்கள் வந்து சற்று நேரம் இருந்து கா...கா என்று கத்தி தனது இனபந்துக்களை அழைத்துக் கொண்டு நிரந்தரமாகச் சென்றுவிடுங்கள். குயில்கள் வந்திருந்து கூவிவிட்டுச் சென்றுவிடும் மைனா, கிளி, மரங்கொத்தி, கருக்குருவி ஆகிய பறவைகள் வந்து இருந்து போனாலும் நிரந்தர மாக அவை தங்குவதில்லை. அணில்கள் என்னில் ஊந்து திரிந்து விட்டு சென்றுவிடும். இந்தக் காட்சிகளை அன்றாடம் பார்த்து மகிழ்ந்தாலும் நிரந்தரமாக என்னில் கூடுகட்டி ஒரு பறவைகளும் இருக்கவில்லையே என்று என்மனதில் ஒரு ஆதங்கம் இருக்கத்தான் செய்தது.

என் இலைகள் உதிர்ந்து பூப்பூக்கத் தொடங் கியதும் நான் பருவம் அடைந்து விட்டதாக எண்ணிக் கொண்டேன். என் பூக்களை ருசித்து மகிழ சில பறவைகளும் அணில்பிள்ளையும் வந்து போயின. எனது வீட்டுக்காரர் நிலத்தில் பாய்விரித்து நான் கொட்டும் பூக்களைச் சேர்ப்பார்கள். அடுத்த கந்தையர் வீட்டுக்காரரும் பெரிய பந்திப்பாயை நிலத்தில் விரித்து விட்டு எனது பூக்களைச் சேகரிப்பார்கள். என் பூக்களை காயவைத்து உரலில் போட்டு பனங்கட்டியும் சேர்த்து இடித்து வீட்டிலுள்ளவர்கள் மகிழ்ச்சியுடன் சாப்பிடுவார்கள். நான் பூக்கும் காலத்தில் மட்டும்தான் ஒரு சில மாதங்கள் இந்த நடைமுறை இருக்கும் காயாகி முற்றிப் பழமாகும் பருவத்தில் பழங்களைத் தின்ன என்னைப் பலர் தேடிவருவார்கள். முக்கியமாக வௌவால்கள் கூட்டமாக வந்து என் பழங்களை உண்பதை அவதானித்துள்ளேன். மேலும் கிளிகள், அணில்கள், வேறும் குருவி வகைகளும் என் பழத்தை உண்ண அவ்வப்போது வந்துசெல்லும் பழத்தைச் சாப்பிடும்போது கொட்டைகள் கீழே விழும். மேலும் நன்றாகப் பழுத்த பழங்களும் தாமாகவே என்னைவிட்டுப் பிரிந்து கீழே விழுந்துவிடும்.

சின்னையர் வீட்டுக்காரரும் கந்தையர் வீட்டுக்காரரும் நிலத்தில் விழுந்த எனது பழக் கொட்டைகளைப் பொறுக்கி எடுத்து வெயிலில் காயவைத்துச் சேர்த்துக் கொள்வார்கள். எனது பழம் முடியும் காலம்வரை என்னை நாடிவந்த வௌவால்களும் குருவிகளும் வருவதை தவிர்த்துக் கொண்டன. அது எனக்குச் சற்று மனத்தாக்கத்தை ஏற்படுத்தியது உண்மைதான்.

என்னால் பயன் பெறும் இருவீட்டாரும் தாங்கள் சேகரித்த கொட்டைகளை செக்கிலே கொண்டு சென்று கொடுத்து எண்ணையாக்கி தமது உணவுத்தேவைக்குப் பாவிப்பதுடன் அதன் சக்கையாகிய அரப்பை குடும்பத்தவர்கள் எல்லோரும் தலைக்குத் தேய்த்து முழுகுவார்கள். எனது பூவும் விதையும் பொதுமக்களுக்குப் பயன்படுகிறதே என்று எண்ணும் போது மகிழ்ச்சியாக இருக்கும்.

இப்படியாக இருந்து வரும் காலத்தில், பக்கத்து வீட்டுக் கந்தையர் வீடுகட்டுவதற்கு எனது கொப்புகள் இடைஞ்சலாக இருக்கிறதே என்று எண்ணி தங்கள் வளவுக்குள் போயிருந்த எனது கொப்புக்கள் முழுவதையும் வெட்டிவிட்டார்.


நான் விட்ட கண்ணீர் வெள்ளைப் பாலாக வடிந்து கொண்டிருந்தது. உண்மையிலேயே பொலிவிழந்து நான் வேதனைப் பட்டேன்.

நான் நிற்கும் வளவுக்காரர் சின்னையாவும் என் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு, என்னால் நினைத்தே பார்க்க முடியாத முடிவொன்றை எடுத்துக் கொண்டார். என்னை ஆனைக்கோட்டை நல்லெண்ணை உற்பத்தியாளர் ஒருவருக்கு விற்றுவிட்டார். அவர் என்னை முழுமையாக வெட்டி எடுத்து என் கொப்புக்களை விறகுக்கும் என் அடிப்பகுதியை வெட்டிக் குடைந்து செக்குச் செய்து அதை தன் நல்லெண்ணை உற்பத்திச் சாதனமாகப் பயன்படுத்தி வருகின்றார். என் உடம்பில் இன்று மிஞ்சியிருப்பது அந்தச் செக்கு மட்டும்தான். மக்களுக்காகப் பல ஆண்டுகள் நல்லதையே செய்து வந்த எனக்கு இந்த நிலையா? ஆறு அறிவு படைத்த மனிதா நீ உன் நன்மைக்காக எதையும் செய்யத் தயங்க மாட்டாய் என்பதை காலங்கடந்தும் எனக்கு உணர்த்தி விட்டாய்!

வாழ்த்துப்பா

# தூயவனே பல்லாண்டு வாழ்க

## பவளவிழா நாயகன் தம்பு சிவாவுக்கு வாழ்த்து




எழில் ஏழு ஆண்டுகளின் படியைத் தாண்டிப்
பயணிக்கும் தாயகஒலியின் நறுமண வாசம்
மதிமயங்கச் செய்கிறது மிகையா யின்று
மிகப் பெரிய பணியன்றோ! மலைப்பே யாகும்
எதிர்தோன்றும் எழுபத்தைந்தாண்டு எளிமையோடு
எளிதாகக் கடந்துவந்து ஏற்றம் பெற்றீர்
முதிர்மையைக் கொண்டாடும் முழக்கத்தோடு
மூவகை விழாக்காணும் ஐயா வாழ்க!

தாயக ஒலியில் சிறப்பான ஆக்கம் கண்டு
சிந்தையிலே மகிழ்வுற்றுச் சரசம் கொண்டேன்
சங்கத்தின் தமிழெடுத்து சளைத்தி டாமல்
சமதர்மக் கொள்கையதன் சீர்மை எல்லாம்
பொங்கியெழும் நிலவொளி போல் மலர்ந்து நிற்கும்
பூப்போலும் வார்த்தைகளால் பொழியும் நல்ல
மங்காதநீ தமிழுக்குப் பெருமை சேர்த்து
முரசறைந்துநீ முளங்குகின்றீர் மனங்கள் பொங்க!

பவளவிழாவைக் காண்கின்ற மன்னா உம்மை
மனசறிய வாழ்த்துகிறேன் மாலை யிட்டு
துணிவோடு இதழ்நடத்தித் தமிழ் வளர்க்கும்
தூயனேநீ பல்லாண்டு வாழ வேண்டும்
பிணியின்றி நலத்தோடு புகழைச் சேர்த்துப்
பாராட்டு, பரிவட்டம் கட்டிக் கொண்டு
அணில் போன்றுநீ தமிழுக்கு அன்னம் இட்டு
ஆண்டவனின் அருள்பெற்று ஆல்போல் வாழ்க!

**அன்பன்**
**கவி ஜனார்த்தனன்**
**தமிழ்நாடு**

கட்டுரை

# தாய்மையின் தளர்வால் தடுமாறும் உலகம்

ஆர். எஸ். நடராசா - ஓய்வுநிலை அதிபர் - பலாலி ஆசிரிய கலாசாலை

இறைவனின் பண்புகளைக் குறிப்பிடுவது இறைமை. தாயின் பண்புகளைக் குறிப்பிடுவது தாய்மை. இறைவனை 'அன்பு வடிவமானவன்', 'அருள் மயமானவன்' 'கருணைக்கடல்' என மெய்யுருகப் பாராட்டி அமைதி காண்பர். அவ்வாறே தாயையும் 'கண்கண்ட தெய்வம்' 'மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்', 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை', 'தாயில்லாமல் சேயில்லை' என அன்புபாராட்டி அகமகிழ்வது பொதுவாக எல்லாச் சமூகங்களிலும் காணப்படுகின்றது. தாயே சமூகக் கட்டமைப்பின் மையமாக உள்ளார். தாயிடம் அன்பும், அரவணைப்பும், பற்றும் பாசமும், இரக்கமும், தியாகமும் இயல்பாகக் காணப்படுவன. தாயின் அறிவாற்றல் அதிகரிக்கும் பொழுது இவ் இயல்பான உணர்வுகள் மேம்பட்டு மக்கள் வாழ்வு மாண்புறுகின்றது. சமூகத்தின் பண்பு நிலைமட்டம் தாய்மையின் தரத்தினைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும். எனவே தாய்மையின் தரம் குன்றின் மனித வாழ்வு மாசுற்று மண்ணாவது திண்ணம்.

"மனிதன் இன்று அறிவுப் பாதையில் செல்லாது அழிவுப் பாதையில் விரைகின்றான்" என்பதே அறிஞர்களின் அபாய அறிவிப்பு. இக்கருத்துச் சரியா? தவறா? என்று அறிய ஆய்வு வேண்டியதில்லை. இன்று எந்த வேறுபாடுகளும் இன்றி எல்லா மக்களுமே அச்சுறுத்தலுக்கு ஆளாகி அவலப்படுவது வெளிப்படை. மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து இன்புற வளங்கள் பல இருந்தும் அவன் வகுத்துக் கொண்டுள்ள அதர்ம வாழ்க்கைச் செல்நெறி அவனைக் "கண்ணிருந்தும் குருடனாய்" "வெள்ளத்தில் நாவற்றி வெதும்புவோனாய்" "இருட்டிலே குருட்டாட்டம் ஆடி" இன்னலுற வைத்துள்ளது வேதனைக்குரியது.

மனிதன் மாண்புடன் வாழப் பெரிதும் உதவக்கூடிய அன்பு, இரக்கம், நட்பு, ஒப்புரவு, ஈகை, ஒற்றுமை, உண்மை, நேர்மை, பணிவு, நயப்பு, சகிப்பு முதலிய விழுமியங்கள் இன்று "ஏட்டில் உண்டு நாட்டில் இல்லை" என்பதை மறுக்க முடியுமா? வியத்தகு விஞ்ஞான விருத்தியும் போற்றத்தக்க பொருளுற்பத்திச் சாதனைகளும்



மனிதனுக்கு மகிழ்ச்சி வாழ்வைத் தரத் தவறிய மர்மம் என்ன? மனிதனின் தாழ்வுக்குக் காரணம் அவன் வாழ்வின் தவறான நோக்கும் போக்குமே, அவன் தன் வாழ்வை அறம், பொருள், இன்பம், வீடு என்ற அடிப்படையில் அமைத்துக் கொள்ளத் தவறியதே அவனது அவலத்துக்குக் காரணம். அறவழியில் பொருளை ஈட்டி, அப்பொருளைப் பிறருக்கும் ஈந்து, இன்புறுவதே ஈடில்லா இன்பம் என்பதை எண்ணிச் செயல்படத் தவறியதால் செய்ய வேண்டியதைச் செய்யாத குற்றமும் செய்யக் கூடாததைச் செய்த குற்றமும் அவனைச் சார்ந்தன.

மனிதன் தனது குற்றச் செயல்களின் திரள்விளைவை அனுபவிப்பதில் விசனப்பட இடமில்லையாயினும் அவன் தப்பிப்பிழைக்க வழிகாட்டுவது அவசியமான ஒரு சமூகக் கடமையாகும். அவன் தனது இழப்பை ஈடு செய்து இன்புற்று வாழ அவனுக்கு அருமருந்தாக அமையக்கூடியது தாய்மையே. தாய்மையின் உயிர்ப்பே தடுமாறும் உலகுக்கு வழிகாட்டி வாழ்வளிக்க வல்லதாகும் என்பதை வலியுறுத்துவது அவசியமாகிறது.

தாய்மைப் பண்புகளே மனிதரிடையே எழும் முரண்பாடுகளுக்குச் சுமுகமான தீர்வுகாண உதவும் திறன் மிக்கவை என்பது வரலாற்று உண்மையாகும். இரண்டு உலகப்போர்களால் உருக்குலைந்த உலகம் மூன்றாவது உலகப்போர் மூளாதிருக்கப் பற்பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "சர்வதேச பெண்கள் தினம்", "சர்வதேச அன்னையர் தினம்" எனப் பெண்ணின் பெருமையைப்

பேணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோமாயினும் இத்தினங்களை அனுட்டிப்பதால் மனித நடத்தையில் குறிப்பிடதக்க மாற்றம் ஏற்பட்டதாகக் கொள்ள முடியாது. பெண்களின் உரிமைகளை உறுதி செய்யும் புரட்சி உருவாக வேண்டும். பெண்கள் உரிமை பெற்றால் தாய்மை தலை நிமிரும். தாய்மையின் தன்னலமற்ற பண்பாலும் பணியாலும் மானிடம் மாசகற்றித் தேறும் மகிழ்ச்சி நிலை உருவாகும். தாயை வீட்டிலும் சமூகத்திலும் ஆண்களுக்குச் சமமான உரிமை உடையவராக அங்கீகரித்தல் திரிகரண சுத்தியோடு மேற்கொள்ளப்பட வேண்டும். உலகப் போர் மனித மனத்தில் தான் தோன்றுகின்றது. மனிதமனத்தைச் சமாதானத்தின் அரணாக்கும் அரிய சாதனம் தாய்மையே இக்கருத்தை மகாகவி சுப்பிரமணிய பாரதியார்:

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ"

எனப்பாடி நம்மைச் சிந்திக்கத்தூண்டுவதைக் காணலாம்.

தாய்மை தழைக்கப் பெண்களின் அறிவாற்றலைப் பெருக்க முயல வேண்டும். பெண்கள் எவ்விதத் தடையுமின்றிக் கல்வி பெறும் வாய்ப்பும் வசதியும் பெருக்கப்பட வேண்டும். அறிவினால் ஆகாதது இல்லை. அறிவாற்றல் பெருகின் "பெண்ணில் பெருந்தக்கயாவுள" என வியந்து போற்றும் நிலை உருவாகும். இந்நிலையில் தாய்மையின் தண்ணளியால் உலகில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு மானிடத்தின் மாட்சி மறுமலர்ச்சி சாத்தியமாகும்.

எதிர்காலத்தில் உலக நாடுகள் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கும் பொழுது பொருள் உற்பத்திக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்கும் நோக்கிலும் போக்கிலும் செயற்படாது. மனிதனை மாண்புறுத்தும் செயல் திட்டங்களில் முதலீடு செய்வதற்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். மகாத்மா காந்தி அடிகள் நடைமுறைப்படுத்திய கைகளும், மூளையும், உள்ளமும், உச்சவிருத்தி பெற்று மக்கள் ஒன்றிணைந்த ஆளுமை உடையவராக உருவாக உதவும் கல்வி அமைப்பில் இனிக்கவனம் செலுத்துவதும் அக்கல்வியினை எல்லோருக்கும் கட்டாயமாகவும் இலவசமாகவும் வழங்குவதும் சிறந்த தேசிய முதலீடாகக் கொள்வது பொருந்தும். அப்பொழுது பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பாடு உருவாகும். அத்தோடு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனித நேய வாழ்க்கை முறை மறுமலர்ச்சியடையும். அன்னை சாரதாதேவி, அன்னை தெரேசா, அன்னை தங்கம்மா அப்பாகுட்டி போன்ற அன்னையர் பலரும் ஆற்றிய அரும்பணிகள் தாய்மையின் தண்ணளியை விளக்குவனவாகும். இப்பண்பாளரின் தன்னலம் மறுத்த தாய்மையே தளர்வுற்ற நிலையில் தவிக்கும் உலகுக்குத் தஞ்சமாகும். இதனைக் கருத்திற்கொண்டு வாழ்வதே "வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி" என உறுதி பூண்டு வாழ்வதும் வாழ வழி செய்வதும் எம் கடன் என ஏற்றுச் செயல்படுவோமாக.

**தேடிப்பெற்ற கவிப்படைப்புகள்**

## போற்றி உரைத்தல்

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூர்தல் தையால் நின்னை"

**இளங்கோவடிகள் – 'சிலப்பதிகாரம்'**

## தமிழால் முடியுமா?

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை - அவை
செல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்!

**– பாரதியார்**

கட்டுரை

# தமிழ் சினிமாவின் வரலாறு – 2

கதிரவேலு மகாதேவா

T.K. சண்முகம் அவர்களின் "மேனகா" திரைப்படத்திற்கு M. கந்தசுவாமி முதலியார் வசனம் எழுதினார். T.K. முத்துசாமி பாடல்களுக்கு இசையமைத்தார். பிரண்ட் ராமசாமி, K.R ராமசாமி, T.N சிவதாணு போன்ற நடிகர்களும் முதன் முதலாகத் தோன்றினர். M.S விஜயாள் மேனகாவாக நடித்தார். ராஜா சாண்டோ படத்தினை இயக்கினார். தமிழில் முதலில் வெளிவந்த சமூகப்படம் மேனகாவாகும். பெண்கள் ஆண் வேடம் ஏற்று நடிப்பதும் ஆண்கள் பெண் வேடம் ஏற்று நடிப்பதும் அன்று சாதாரணமாக விளங்கின. காதலர்களும், தம்பதிகளும் இரண்டு அடி தள்ளி நின்றே நடிப்பார்கள். தொட்டுப் பேசுவது மேனகா படத்தில் தொடங்கியது. முதல் தடவையாக வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி! என்ற பாரதியார் பாடல் படத்தில் சேர்க்கப்பட்டது. ராஜா சாண்டோ நடிகர் நடிகைளின் பெயர்களையும் தலைப்பில் முதன்முதலாக இடம்பெறச் செய்தார்.

புராண படங்களில் கடவுள்களாக பார்த்த நடிகர்களை, சமூகப் பாத்திரங்களில் ரசிகர்கள் இலகுவாக ஏற்றுக் கொள்ளவில்லை. சாமண்ணா அய்யர் 11 வேடங்களில் "டப்பாக்காலி" என்ற சமூகப்படத்தில் நடித்திருந்தும் படம் வரவேற்பினை பெறவில்லை. 1935 இல் ராஜாம்பாள் என்ற சமூகப்படத்தில் (துப்பறியும் படம்) எஸ். சீனிவாச ராவும், T.P. ராஜலட்சுமியும் நடித்திருந்தனர். ஏ. நாராயணன் இயக்கியிருந்தார். மொத்தமாக 31 தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்டன. பட்டினத்தார் படத்தில் M.S. தண்டபாணி தேசிகர் நடித்துப் புகழ் பெற்றார். முதன்முதலில் 25 வாரங்கள் ஓடிய படம் அதுவாகும். "பக்த ராமதாஸ்" என்ற நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகம் திரைப்படமானபோது அதில் அத்தனை வேடங்களிலும் ஆண்களே நடித்தனர். இசைத் தட்டுக்கள் தயாரித்து விற்பனை செய்யும் காரைக்குடி ஏவி அன் சன்ஸ் உரிமையாளர் ஆவிக்கி செட்டியாரின் மகன்தான் பின்னாளில் பிரபல்யம் பெற்ற ஏ.வி மெய்யப்பச் செட்டியார் ஆவார். (A.V.M) ரத்னாவளி அவரது முதற்படமாகும்.

சங்கீத மேடைப் பாடல்களின் மூலம் புகழ் பெற்ற கே.பி. சுந்தராம்பாள் 'நந்தனார்' படத்தில் நந்தனாராக (ஆண்வேடம்) நடித்தார். ஒரு இலட்சம் ரூபா ஊதியம் பெற்ற முதல் தமிழகக் கலைஞர் இவராகும். ஆண்வேடம் தாங்கிய முதற் பெண்மணி இவர். பிற்காலத்தில் M.S.சுப்புலட்சுமி நாரதராக நடித்தார். K.சுப்பிரமணியத்தின் "பக்த குசேலா" படத்தில் இவர் கிருஷ்ணன் வேடத்திலும் பாபநாசசிவன் (பாடலாசிரியர்) குசேலனாகவும் தோன்றி நடித்தனர். குசேலரின் மனைவி சுசீலையாகவும் M.S சுப்புலட்சுமியே நடித்தார். எழுத்தாளர் கல்கி இவரைப் பாராட்டியிருந்தார். ஆங்கிலப் படங்களுடனும், ஆங்கிலத் தலைப்புக்களுடனும் வெளிவந்த இந்தி மொழிப் படங்களுடனும், போட்டியிடும் எண்ணமாக, இரண்டு கதைகளைக் கொண்ட ஒரே தமிழ்ப்படமாக S.S வாசன் அவர்கள் எழுதிய "சதி லீலாவதி 1936 இல் படமாக்கப்பட்டது. எல்லீஸ். ஆர். டங்கன் என்ற அமெரிக்கன் படத்தினை இயக்கியிருந்தார். கிருஷ்ணன் - பஞ்சுவும் முதன்முதலாகப் பங்கெடுத்துக் கொண்டார்கள். முதன்முதலாக கிளப் டான்ஸ் (CLUB DANCE) தமிழில் அறிமுகம் செய்யப்பட்டது. கந்தசாமி முதலியாரின் மகனான M.K. ராதா நாயகனாக நடித்த படத்தில் நாயகியாகத் தோன்றிய ஞானாம்பாள், அவரது வாழ்விலும் இணைந்தார். மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரனும் (MGR) இந்தப்படத்தில் அறிமுகமானவர். T.S. பாலையா வில்லன் வேடத்தில் நடித்தார். அந்தத் திரைப்படம் வெற்றியடையவே இந்தக் கலைஞர்களுக்கும் நல்ல எதிர்காலம் ஏற்பட்டது.

N.S. கிருஷ்ணனும் T.A. மதுரமும் பரோபகார சிந்தனை கொண்டவர்கள். ஒத்த கருத்தினைக் கொண்ட கலைஞர்களாக பின்னர் இருவரும் மணந்து கொண்டனர். தமிழ் மொழியில் 100வது திரைப்படம் "வசந்த சேனாவில்" ராஜா சாண்டோவும் S.P.L தனலட்சுமியும் கதாநாயகர்களாகத் தோன்றினர். 1936 பெருமைமிக்க ஆண்டாக, ஒரு பெண் T.P ராஜலட்சுமி முதன்முதலில் இயக்கிய மிஸ். கமலா (அவரது சொந்தப் படம்) வெளியாகியது. இயற்கைக்கு மாறான நடை - உடை பாவனை வேஷங்கள் அப்பொழுது இருக்கவில்லை.

# தமிழரின் தனிப்பெருஞ்செல்வம் சிலப்பதிகாரம்

-இலக்கியதாசன் -

செந்தமிழ் மொழியிலுள்ள பழைய பெருங்காப்பியங்களுள் 'சிலப்பதிகாரம்' என்னும் நூல், மிக்க மாட்சிமை வாய்ந்தது நூல் நலங்கள் பலவற்றானுஞ் சிறந்து விழுமியதாய்த் திகழ்வ தொன்றதாகும். இது பண்டைகாலச் செந்தமிழ் வழக்குகட்கும் பிற்றைக் காலப் பைந்தமிழ் வழக்குகட்கும் நடுவன் நின்றும், தமிழின் கலங்கரை விளக்கமாய் இருமருங்கும் பேரொளி வீசி நலம் புலப்படுத்தும் இயல்புடையது. தொன்று தொட்ட வழக்காய் வழங்கி வருகின்ற நந்தமிழ் வரலாற்றின் திருப்பு மையம் சிலப்பதிகாரமேயாகும். ஆதலாற், பழந்தமிழ்க் காலத்தின் இறுதி யெல்லையால் இந்நூல் நிலவா நிற்கும் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக ஆய்வாளர்கள் செப்புவர்.

"சிலப்பதிகாரம் என்று ஓர் ஆரம்படைத்த தமிழ் நாடு" இதனால் என்றும் இறவாத புகழுடையதாயிற்று. பழைய செந்தமிழ் பெரு நூல்களில் விழுமிய முழு நூல்களாக நமக்கு கிடைத்தவற்றுள், தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்னும் மூன்றும் முதன்மையாகக் குறிப்பிடற்பாலன. இலக்கணமும் அறநூலுங் காப்பியமுமாக அமைந்துள்ள இவை, ஞாயிறுந் தீயுந் திங்களுமான உலக வொளிகளாய் என்றும் விளங்குகின்றன எனலாம். இவை மூன்றும் தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள், எனத் தூயோர் மூவரால் அருளிச் செய்யப்பட்ட அருட்டிறம் வாய்ந்தனவாகும். மேலும், இப்பேராசியன்மார் மூவரும், தமிழகத்தே, தமிழ்குடியிற் தோன்றிய தமிழ்ப் பெரியோராய்த் தமிழ் வழக்குகளிடையே வளர்ந்து தமிழ்ச் சுவையூறித் தமிழ் வரலாறுகள் கருவியாகத் தமிழிலேயே முதன்முதல் இப்பெருநூல்களை இயற்றியோராவர்.

நலஞ்சிறந்த இத்தகைய தனிச் செந் தமிழ் முதனூல்கள் மூன்றுள்ளும், தொல்காப்பியங்கூறும் இலக்கணமும் திருக் குறள் நுவலும் அறமும் தன்கட்கொண்டு ஏனைய காப்பிய நலங்களும் ஒருங்கு வாய்ந்து தனக்கு முற்பட்ட தமிழ் நாகரிக ஒழுகலாறுகளின் பிழிவாய்ச் 'சிலப்பதிகாரம்' அமைந்திருக்கின்றது. அல்லாமலும், இயற்றமிழேயன்றி இசை நாடகத் தமிழ்களுந் தன்னுட் பொருந்தி முத்தமிழ்க் காப்பியமாய் விளங்குகின்றது.

"சிலம்பு, தமிழரின் தனிப் பெருஞ் செல்வம். நெஞ்சை அள்ளும் சுவையுடைது. தேனிலே சேர்த்திழைத்த தீஞ்சொல்லால் சீர்மையுடன் அமைந்தது. தமிழகத்தின் எம்மருங்கும் யாவராலும் அறிந்து போற்றிக் கொள்ளப்பட்ட ஒப்பற்ற காப்பியம். சிலம்பிலேயே உள்ளத்தைத் தன் வயப்படுத்தும் கதையமைப்பு உளது; உள்ளத்தோடு ஒன்றிக் கலந்துவிடும் காதாபாத்திரங்கள் உலவுகின்றனர். இசை இனிதாக இயங்குகிறது; கூத்துக்கள் நிகழ்கின்றன; குரவைகள் ஒலிக்கின்றன; பண்கள் பயின்று வருகின்றன; அரசியல் நெறி அமைந்துள்ளது; அறவொழுக்கங்கள் பேசப்படுகின்றன; மக்களின் பல்வேறு தரத்தினரையும் நிலையினரையும் கொள்கையினரையும் இனத்தினரையும் காண் கின்றோம்; தமிழகத்தின் வளம், தமிழரின் ஒன்று கலந்து வாழும் பண்பு, தமிழனத்தின் மிகவுயர்ந்த நாகரிக வாழ்வு; தமிழரின் போராண்மை; கொடைப் பண்பு எல்லாம் மிளிர்கின்றன.

வரலாற்றுச் செய்திகள்; தத்துவ உண்மைகள்; வாழ்க்கைப் பிரச்சினைகள் ஆகிய பலவும் வளஞ்செறிந்த தமிழிலே நயமுடன் ஒளிர்கின்றன. மூவேந்தர் நாட்டின் சிறப்பையும், முத்தமிழ் இனிமையின் தொகுப்பையும், காவிய அமைப்பின் கனிவையும், தமிழிசையின் தன்னிகரற்ற உயர்வையும், தமிழகத்துக் கூத்தும் குரவையும் விளங்கிய பாங்கையும் சிலம்பிலே நாம் கண்டு மகிழலாம்". என்கிறார் புலியூர்க் கேசிகன்.

இனிச், சிலப்பதிகாரத்திற் கூறப்படுங் கோவலன் கண்ணகி வரலாறு, இல்லாது புனைதலாய் வருங்கட்டு கதையன்று; எங்கோ ஒரு மூலையில் எல்லார்க்குந் தெரியாததொன்றாய் என்றோ நிகழ்ந்து விட்டதோர் எளிய வரலாறுமன்று. காப்பிய மியற்றிய தவக் காட்சியினரான ஆசிரியர் இளங்கோவடிகள் தங்காலத்திலேயே, பெருங்குடி மரபிற்றோன்றிய சிறந்தோரது நிகழ்ச்சியாய் தமிழகத்திற் சோழ பாண்டிய சேர நாடுகளென்னும் மூன்றோடும் அவற்றின் தலைநகர்களோடும் அரசர்களோடுந் தொடர்புற்று, தமிழகமேயன்றி நாவலந்தீவு முழுமையும் அரிய பெரிய நிகழ்ச்சிகள் பற்பல தொடர்ந்து நிகழுறுதற் கேதுவாய் உண்மையாய் நிகழ்ந்ததோர் உள்ளமுருக்கும் வரலாறாகும்.

இயல்பாகவே கனிவு நிறைந்த இவ்வரலாற்றை ஆசிரியர் இளங்கோவடிகள், தாம் விரும்பிய நற்பொருள்களெல்லாம் ஒருங்கு பெய்து விழுமிய சொற்சுவை பொருட்சுவைகள் சிறக்க வல்லவாறெல்லாம் மாட்சிமைப்படுத்தி அளித்திருக்கின்றனர். தமிழ்நாட்டின் பண்டைக் கால வரலாறுகள், சமயங்கள், கலைகள், முதலியன அறிய விரும்பும் ஆராச்சியாளர்க்கு இந்நூல் ஒரு பெரிய களஞ்சியமாய் நின்றுதவுகின்றது.

புலவர்கள் புலமை நுணுக்கம் செறிந்த இலக்கியம் என்பர். வரலாற்று ஆய்வாளர் வரலாற்று உண்மைகளை வண்ணமுறக் காட்டும் பொன்னேடு என்பர். தமிழர் பண்பினை ஆய்வோர் பண்பின் படப்பிடிப்பு என்பர். அரசியலறிஞர் அரசியல் நெறியின் விளக்கம் என்பர். தத்துவவாதிகள் தத்துவச் செழுமையின் சின்னம் என்பர். இசையோர் இசை கண்டு மகிழ்வர். கூத்தர் கூத்தினைக் கண்டு குதூகலிப்பர். பத்தினியின் சக்தியிலே பரவசப்படுவோர் பலர். செங்குட்டுவன் வடவரை வென்று கல்சுமக்க வைத்த வயணத்தை வாய்குளிர உரைப்பர் பலர். காதலின் செவ்வியைப் பாண்டியன் மனைவிபால் கண்டு இன்புறுவர் பலர் இன்னும், இவைபோற் பலரும் பல பல நிலையில் சிலம்பினைக் கொண்டு மகிழ்வர். இவையே அதன் ஒப்பற்ற சிறப்புகளாகின்றன.

சிலப்பதிகாரம் தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களிலொன்று; காவிரிப்பூம் பட்டினத்திலே பெருங்குடி வாணிகர் மரபிலுதித்த கற்பிற் சிறந்த கண்ணகி அவள் கணவனாகிய கோவலன் என்பவர்களுடைய வரலாற்றை உரைப்பது; முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவித்திறனும் வாய்ந்த சேர முனியாகிய இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றது; கற்பவர் நெஞ்சினைக் கவரும் சொற்சுவை பொருட்சுவை சான்றது; 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' எனப்படும் தமிழகத்தின் பகுதிகளாகிய புகார் மதுரை வஞ்சி என்பவற்றின் பெருமைகளையும் அவற்றிடையிருந்து செங்கோலோச்சிய சோழ பாண்டிய சேர மன்னர்களின் அறன் மறன் ஆற்றல் ஆனை முறைமை என்பவற்றையும், அவர்களாற் புரக்கப் பெற்ற குடிகளின் ஒழுக்கம் ஊக்கம் ஒப்புரவாண்மை முதலியவற்றையும் நன்கு புலப்படுவது; மற்றும் அக்காலத்தில் உழவு வாணிகங்களின் மேம்பாடு, தொழிற்பெருக்கம், மன்பதைகளின் கூட்டுறவியல், அரசியல், கல்விநிலை, சமய நிலை, என்பவற்றை அறிதற்குக் கருவியாவது; திணைவளங்களை நனி விளக்குவது; அணியும் விரையும் விழவும் கூத்தும் பாட்டும் முதலிய இன்ப நுகர்ச்சித் திறன்களை இனிதியம்புவது.

"அரசியலின் வழுவிய வேந்தரை அறக்கடவுள் கூற்றாய் நின்று கொல்லு மென்பதும், புகழமைந்த பத்தினியை வானோரும் ஏத்துவரென்பதும், இருவினையும் செய்சோனை நாடி வந்து தம் பயனை நுகர்விக்குமென்பதும் ஆகிய மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகத் தோன்றினமையின் அவற்றை முதன்மையான உள்ளுறையாகக் கொண்டு இக்காப்பியம் 'சிலப்பதிகாரம்' என்னும் பெயரால் இயற்றி நிறுவப்பெற்றது." என்கிறார் உரையாசிரியர் ந.மு. வேங்கடசாமி.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கதையை மூன்று காண்டங்களாகப் பிரித்துச் சொல்லியுள்ளார். முறையே புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம், என்று நிறுவப்பட்டுள்ளது.

முதலாவது புகார் காண்டம் - "பெருவாணிகர் குடியிலே பிறந்தான். பெரு வாணிகர் குலமகளை மணந்தான். பேரழகியும் கலாவல்லியுமான மாதவியுடன் மகிழ்ந்தான். அனைத்தும் இழந்து புகாரை விட்டே தன் மனைவியுடன் வெளியேறினான். சோழ நாட்டிலே நிகழ்ந்த கதைவரையுங் கூறும் பகுதி இது."

இரண்டாவது மதுரைக்காண்டம் - "வாழ்விலே மலர்ச்சியை எதிர்பார்த்து மதுரை சேர்ந்த கோவலன் கண்ணகியர் முடிவும் மதுரை மாநகரின் அழிவும், ஊழ்வினையாவது எவ்வாறு வந்து பழி தீர்த்துக் கொள்கிறது என்ற நிலையும் கூறுகிறது."

மூன்றாவது வஞ்சிக் காண்டம் - "செங்குட்டுவனின் வடநாட்டுச் செலவும், வடவாரியரை வென்று கனகவிசயர் தலைமேற் கல்லேற்றி வந்ததும், கண்ணகிக்குக் கோயில் அமைத்ததும், பிறவும் கூறுகின்றது."

இலங்கையுடனான வணிகம் பற்றியும், கடல்சூழ் இலங்கை கஜபாகு மன்னன் சேரநாடு சென்று கண்ணகி விழாவில் பங்கு கொண்டு இலங்கையில் பத்தினித் தெய்வ வழிபாட்டுக்கு கால்கோள் இட்ட செய்தியும் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.

"வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி,
உலக மன்னவன் நின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்,
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்,
குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும்,
கட சூழ் இலங்கைக் கயவாகு வேந்தரும்,
'எந்நாட்டு ஆங்கண் இமைய வரம்பனின்
நன்னாள் செய்த நாளணி வேள்வியில்
வந்து ஈக' என்றே வணங்கினர் வேண்டத்"

பொதுமக்களை முன்னிலைப்படுத்தி எழுந்த, மாட்சிமை வாய்ந்த முதல் பெருங்காப்பிய நூலாகிய சிலப்பதிகாரத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் கற்றுக் கருத்தறிந்து இன்புறுதல் இன்றியமையாததாகும்.

# வாசகப் பெருமக்களுக்கு அன்பான வேண்டுகோள்

## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா : ரூபா *1000*(அஞ்சல் செலவுடன்)

வெளிநாடு : \$30(U.S), £20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

***சந்தாப் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு உதவுங்கள்.***

***சந்தா அனுப்ப வேண்டிய***
**வங்கிக் கணக்கு விபரம்**
T.Sivasupramaniam
A/C No : 8100086490
Commercial Bank
Wellawatte, Sri Lanka

# நாடகமே உலகம்

-குமாரசாமி சோமசுந்தரம் -



சலுகைகள், உரிமைகள் என்பவற்றைப் போராடிப் பெறுவதிலும், அவற்றைப் பெற்று அனுபவிப்பதிலும் இன்றைய மனிதர்களுக்கு இருக்கின்ற ஆர்வமும் தன்முனைப்பும் கூட்டு முயற்சியும்; தத்தம் கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றைச் சரிவர ஆற்றுவதிலும் இருக்குமே யானால், இவ்வுலகில் என்ன குறைதான் இருக்க முடியும்?

ஆனால் இவ்வுலகின் எந்தப் பாகத்திலும் பிரத்தியட்சமாகக் காணப்படுபவை, கேட்கப் படுபவை, உணரப்படுபவை யாவும் குறையும், குறைபாடுகளும் ஆகவே தென்படுகின்றன. குறைகளும், குறைபாடுகளும் மனிதர்களின் சிருஷ்டிகளேயாகும். உலகில் அமைதியும், சமாதானமும், நிம்மதியும், மகிழ்ச்சியான வாழ்வும் மறைந்து வருவதற்கு பாடுபட்டு உழைப்பவர்கள் மனிதர்களே. அதே மனிதர்கள் தான், உலகில் அமைதியையும், சமாதானத்தையும், சாந்தத்தையும் வளர்ப்பவர்களாகத் தோற்றம் கொள்கின்றார்கள்.

அப்படியானால் மனிதர்களின் உண்மைநிலை என்ன? அவர்களின் எச்செயற்பாடு உண்மை? எச்செயற்பாடு நடிப்பு? இந்த ஆராய்ச்சி, முடிவுறா ஆராய்ச்சியாகவே முன்னரும் இருந்து வந்திருக்கிறது; இன்னமும் இருக்கப்போகிறது. ஓர் அனுபவ உண்மை என்ன வெனில், மனிதர்கள் யாவரும் சிறந்த நடிகர்கள்; நடிப்பாற்றல் மிக்கவர்கள் என்பதாகும். கண்கட்டி வித்தை செய்யும் கலையில் கைந்தேர்ந்தவர்கள்.

**"உலகமே ஒரு நாடக மேடை**
**அதில் நாமெல்லோரும் நடிக, நடிகைகள்"**
என்கிறார் மஹாகவி சேக்ஸ்பியர்.

**'நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து"**
என்கிறார் ஓர் அருளாலர்.

இன்றும் ஆன்மிகவாதிகள் போல் நடிக் கின்றார்கள்; உலகியல் சார்ந்தோர் போல் வாழ்கின்றார்கள். இது பெரும் ஆபத்ததைத் தோற்றுவிக்கும் செயல்.

விட்டில் பூச்சி, விளக்குச் சுடரை, மலர் என்று மயங்கித் தேனுண்ணச் செல்கின்றது. மலர் போல் காட்சி அளித்தது நெருப்புச் சுடர் என்று விட்டில் பூச்சியால் தெரிந்து கொள்ள முடியவில்லை. பல தடவைகள் போய்ப் போய் திரும்புகின்றது. சுற்றிச் சுற்றிப் பறக்கிறது. இன்னமும் அது மலர்தான் என்ற நினைப்பு அந்த விட்டில் பூச்சிக்கு. கடைசியில் விளக்குச் சுடரில் வீழ்ந்து எரிந்து அழிந்து விடுகிறது. இப்பொழுது நாம் என்ன சொல்கிறோம்? நெருப்புச்சுடரை மலர் என்று எண்ணிய விட்டில் பூச்சி ஏமாந்து விட்டது. அதனால் தனக்கு அழிவைத் தேடிக் கொண்டது என்று தானே சொல்கின்றோம். இப்படி மற்றொரு விட்டில் பூச்சி வருகின்றது; ஒளிச்சுடரை அணுகுகின்றது; எரிந்து விடுகின்றது. இவ்வாறு இன்னும் பல விட்டில் பூச்சிகள், நம்பி மோசம் போகின்ற காட்சியைப் பார்க்கின்றோம்.

மனிதர்கள் நல்லவர்கள் போல் நடிக்கின் றார்கள்; சமூகத் தலைவர்கள் போல் தோன்று கின்றார்கள்; சமய வழிகாட்டிகள் போன்று வேடம் தாங்குகின்றார்கள், இந்த உலகம் எனும் நாடக அரங்கில் ஏமாற்றங்கள், மயக்கங்கள் என்பன ஏற்படுவதெல்லாம் இந்த நடிப்புக்களினால்த் தான். தற்காலத்தில் மனிதர்கள் நடிகர்களாக வருவதுடன் அமையாது; ஒவ்வொருவரும் மிகச் சிறந்த நடிகர்களாகப் பரிணமிக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் முயற்சிக்கிறார்கள். இதன் விளைவு விழுமியங்கள் மறைகின்றன; அதிகுதிகள் அதிகரிக்கின்றன. எங்கும் நம்பிக்கையீனங்கள், ஏமாற்றங்கள், குழப்பங்கள் தலைவிரித்தாடுகின்றன. சாந்தி மறைந்து விடு கின்றது.

"பிள்ளையையும் நுள்ளித் தொட்டிலையும் ஆட்டுதல்" என்றொரு பழமொழி உள்ளது. அதுபோன்றே, கலகத்தையும் தூண்டிவிட்டு, சமாதானத்தையும் பேசும் பிரக்கிருதிகள் சமுதாயத்தில் மலிந்து விட்டனர். மனித

விழுமியங்களை மலினப் படுத்துவதாகவே இத்தகைய கைங்கரியங்கள் அமைகின்றன. இத்தகைய இருமைத்தன்மை கொண்ட நடிப்பு வாழ்வு; போலிவாழ்க்கை; மனிதர்களில் இடம் பெற்றிருக்கும் வரை, உண்மையான அமைதியோ, சமாதனமோ ஏற்பட முடியாது. இன்றைய மனிதனின் அகச் சூழலிலும் சரி, புறச் சூழலிலும் சரி அமைதியின்மைக்குக் காரணம் இந்த நடிப்பு வாழ்க்கைதான். நடிப்பே வாழ்க்கை வாழ்க்கையே நடிப்பு என்ற நிலை மனிதர்களின் அவலத்திற்கு இட்டுச் செல்கின்றது.

மனிதன் மனிதனாக வாழ்வது இயல்பு; மனிதன் வேறொன்றாக வாழ்வது நடிப்பு, அதுவே மனித நடத்தையாகியும் விட்டது. ஆண், பெண் வேடம் தரிப்பது; பெண், ஆண் வேடம் தரிப்பது நாடகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பார்த்து ரஸிக்கிறார்கள்; கேலி செய்வதில்லை. நடிப்பு என்று எல்லோருக்கும் தெரியும். நாடகம் முடிந்ததும் வேஷத்தைக் கலைத்து விடுகிறார்கள். இயல்பு நிலைக்கே திரும்பி விடுகிறார்கள் நாடகத்திற்காகப் போட்ட வேஷங்களுடன் நிஜ வாழ்வில் வாழ முடியாது; அப்படி வாழவும் முயல்வதில்லை.

ஆனால் உலகத்தை என்றுமே நாடக அரங்காகவே வைத்திருக்க மனிதர்கள் விரும்புகிறார்கள். தாம் போட்ட வேடத்தைக் கலைத்து விட்டு, இயல்புநிலைக்குத் திரும்ப விரும்புகிறார்களில்லை. என்றும் நடித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதுவும் தாம் நடிப்பது, பிறருக்கு அது நடிப்பென்று தோன்றாதபடி கனகச்சிதமாக நடிக்கிறார்கள். நடிப்பு முடியும் வரை, வேஷமும் கூட இருக்கத்தான் செய்யும். "எந்தப் புற்றுக்கை எந்தப் பாம்பு இருக்கும்", என்று யாராலும் சொல்ல முடியாது. எல்லாமே பாம்புகள், அதனால் எந்தப் புற்றுக்கை எந்தப் பாம்பு இருந்தால் எமக்கென்ன என்று எண்ணியோ, என்னவோ, அந்த ஆராய்ச்சியையும் கைவிட்டுவிட்டார்கள்.

மனிதன் மற்றொன்றாக நடித்துக் கொண்டிருக்கும் வரை, அவன் மனிதனாக வாழமுடியாது. உலகை ஏமாற்றிக் கொண்டே இருப்பான். பல்வேறு உணர்ச்சிகளையும் பாத்திரத்திற்கேற்ப வெளிப்படுத்திய வண்ணமே காணப்படுவான். ஒவ்வொரு மனிதனும் இயன்ற மட்டில் நன்றாக நடிக்கவே ஆசைப்படுகின்றான். மனிதன் நல்ல மனிதனாக நடிக்கத் தெரிந்து கொண்டதும்; அவ்வாறு முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி நடிப்பதும் தான்; மனிதகுலத்திற்கு அம்மனிதன் இழைக்கின்ற மாபெரும் தீங்கு என்பதை மனதிற் கொள்ள வேண்டும். இதை உணர்ந்து கொண்டால், மனிதன் மனிதனாக நடிப்பதை நிறுத்திக் கொண்டு, இயல்புநிலைக்குத் திரும்பி விடுவான். அதாவது, மனிதன் மனிதனாகி விடுகின்றான். இப்பொழுது அவன் மனிதன்; நடிகன் அல்ல. எப்பொழுது மனிதன் தன் நடிப்பை நிறுத்தி, மனித இயல்பினன் ஆகின்றானோ, அப்பொழுதுதான் உலகில் நல்ல காரியங்கள் நடைபெறும். நல்ல காரியங்களின் விளைச்சலையே சாந்தி, சமாதானம், நிம்மதி, மகிழ்ச்சியாக அறுவடை செய்கின்றோம்.

இன்று வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள் எனப் பொதுவாக எண்ணப்படுபவர்கள் நடிகர்கள் ஆகவே உள்ளனர். அதனாலே வாழ்க்கையில் எல்லோரும் நடிக்கிறார்கள் போலும். நடிப்பு என்பது வெறும் ஏமாற்றும் பம்மாத்தும் தானே. "யதார்த்த வாதி வெகுஜன விரோதி" என்ற கூற்றும், இதனை நிரூபிப்பதோடு, பகைமையற்று இருப்பதற்கு, நடிக்கத் தெரிய வேண்டும் என்று கூறுவது போலும் தெரிகிறது.

யதார்த்தம் என்றால் உண்மை என்று பொருள் கொள்வர். உண்மை பேசினால் மனிதர்களின் குரோதத்திற்கும் விரோதத்திற்கும் ஆளாக வேண்டியுள்ளது என்பது "யதார்த்த வாதி வெகுஜன விரோதி" என்னும் கூற்றின் கருத்து ஆகும். அப்படியானால், இன்று இவ்வுலகில் மக்களிடையே குரோதங்களும் விரோதங்களும்; குழப்பங்களும் கொந்தளிப்புகளும் தாராளமாக உள்ளனவே, எல்லோரும் யதார்த்த வாதிகளாக மாறிவிட்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. எல்லோரும் உண்மை பேசுகின்றனரோ என்று நினைக்க வேண்டியுள்ளது. உண்மையில் அப்படியான நிலைமை இல்லை. உண்மை உயர்வைத் தரும் என்பது உறுதி. பொய்யும் வழுவும்; ஊழலும் நடிப்பும் நிறைந்துள்ள உலகில் வாழ்க்கையில் வெற்றி தோல்வி எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை

அறிந்துகொண்டால் உண்மை விளங்கும். இந்தப் பொய் வெற்றியை, வெற்றியாகக் கொள்பவர்கள், சமூகத்தில் நடித்துத்தான் வெற்றியடைகிறார்கள். ஆனால் நடிப்பு எப்பொழுதும் தொடர்வதில்லை. என்றோ ஒருநாள் வேஷம் கலைந்துவிடும். சுயஉருவம் வெளித்தோன்றும். பொய், களவு, ஊழல் எல்லாம் வெளிப்படும். இதுவரை வெற்றி என்று கருதப்பட்ட வாழ்க்கை, எண்ணி நகையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். எல்லோருடைய ஏளனத்திற்கும்,பகைமைக்கும், விரோதத்திற்கும் பொய் வாழ்க்கை வாழ்ந்து குறுகிய காலத்தில் வெற்றி பெற்றவனாகக் கொள்ளப்பட்டவனே; உள்ளாக்கப்படுகின்றான். உண்மைவாதி வாழ்க்கையில் என்றுமே தோல்வியடைவதில்லை, என்பதை உறுதியாகக் கொள்ளலாம்.

வாழ்வில் வெற்றி பெறுவதற்குக் குறுக்கு வழிகளை நாடினால், ஈற்றில் தீரா இடும்பை தரும். துன்பங்களை வலிந்து அணைத்துக் கொண்டவர்கள் ஆவோம். வாழ்க்கையில் ஒரு போதும் போலிவேடங்கள் தாங்கக் கூடாது. பொய்மையைப் போற்றுதல் ஆகாது: சூதும் வாதும் வேதனை செய்யும்; பொய்யும் புரட்டும் வாழ்வினைக் கெடுக்கும். நேர்மை வழியே வெற்றிக்கு நிதான வழி. இக்கூற்று முழுவதும் உண்மை என்பதை உணர்ந்து கொள்வோம்.

ஆபத்தை விலைக்கு வாங்கலமா

# தொலைபேசி பாவனையால் உடலில் மாற்றம்

தொலைபேசியை அதிக நேரம் பயன்படுத்துவதால் நமது நடத்தையில் மட்டுமன்றி உடலமைப்பிலும் மாற்றம் ஏற்படுவதாக ஆய்வொன்றினூடாக அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய நாட்டின் குயின்ஸ்லாந்தி லுள்ள சன்ஷைன் கடற்கரை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அதிக நேரம் தொலைபேசி பயன்படுத்துவதால் உடலமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்துள்ளனர்.

இந்த ஆய்வில் தொலைபேசிகளை அதிக நேரம் நேரம் பயன்படுத்துவதால் இளைஞர்களின் தலையின் பின்புறம் மண்டைக்குள் கொம்பு போன்ற கூர்மையான எலும்பு வளர்வதை கண்டறிந்துள்ளனர்.

தொலைபேசியைப் பயன்படுத்தும் போது அதன் தொடு திரையைப் பார்க்க நீண்ட நேரம் தலையை குனிந்து கொள்வதனால் தலையின் முழு எடையும் முதுகெலும்பிலிருந்து தலையின் பின்புறம் உள்ள தசைகளுக்கு மாறுகின்றது. அதனால் எலும்பு தசை நாண்கள், தசை நார்கள் வளர்கின்றன.

இது மண்டையோட்டுக்குப் பிற்புறத்தின் உட்பகுதியில் கொம்பு போன்ற தூண்டுதல் ஏற்படுகின்றது என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஆய்வில் தகவல்**



இதை உறுதி செய்வதற்கு அதிக நேரம் தொலைபேசி பயன்படுத்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களின் தலைகளை படம் பிடித்து ஆய்வுக்குட்படுத்திய வேளை அதிகமான இளைஞர்களின் மண்டைக்குள் பின்புறம் கூர்மையான எலும்பு வளர்வது ஆய்வில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும், அதிக நேரம் தொலைபேசி பயன்படுத்தும் இளைஞர்கள் தங்கள் தலையின் பின்புறம் கையை வைத்து கவனமாக ஆய்வு செய்தால் உள்ளுக்குள் கொம்பு போன்ற கூர்மையான எலும்பு வளர்வதை உணர முடியும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மக்கள் இது பற்றிச் சிந்தித்துச் செயற்படுவார்களா?

கட்டுரை

# கவியரசு கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களின் ஊற்றுக் கண்கள்



அகளங்கன்

**சென்ற இதழ் தொடர்ச்சி.......................**

மிகுந்த போராட்டத்தின் பின் கிடைத்த அந்தப் பொன்னான வாய்ப்பைக் கவியரசர் மிக அருமையாகப் பயன்படுத்தினார். அவருக்கு மகாகவி பாரதியாரும், திருவள்ளுவரும் கை கொடுத்தனர். தனது பழந்தமிழ்க் கவிதை இலக்கியப் பயிற்சி தனக்குக் கைகொடுக்கும் என்று நம்பி பாட்டெழுதினார்.

மகாகவி பாரதியாரின் பாடலொன்றை அப்படியே மாற்றி, திருவள்ளுவரின் திருக்குறள் ஒன்றை அதனுள் புகுத்தி தன் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு அற்புதமான பாடலொன்றை எழுதினார் கவியரசர்.

அப்பாடல் அருமையான இசையில் அற்புதமாக ஒலித்தது. அப்பாடலை அம்பிகாபதி திரைப்படத்தில் இரண்டு தடவைகள் ஒலிக்கச் செய்தார். அப்படத்தின் நெறியாளுநர் அந்தப் பாடல்தான் இந்தப் பாடல்.

கண்ணிலே இருப்பதென்ன கன்னிஇள மானே!
காவியமோ ஓவியமோ கன்னிஇள மானே!
வண்ணமுக வெண்ணிலவில் கன்னிஇள மானே!
வண்டுவந்த தெப்படியோ கன்னிஇள மானே!
(கண்ணிலே....)
அன்னநடை மின்னுவதேன் கன்னிஇள மானே!
ஆர்விழிகள் பட்டனவோ கன்னிஇள மானே!
சின்னஇடை மின்னலெல்லாம் கன்னிஇள மானே!
தென்றல்தந்த சீதனமோ கன்னிஇள மானே!
(கண்ணிலே....)
கார்குழலை ஏன்வளர்த்தாய் கன்னிஇள மானே!
காளையரைக் கட்டுதற்கோ கன்னிஇள மானே!
பார்வையிலே நோய்கொடுத்தாய் கன்னிஇள மானே!
பக்கம் வந்து தீர்த்து வைப்பாய் கன்னிஇள மானே!
(கண்ணிலே....)
பல்வரிசை முல்லை என்றால் கன்னிஇள மானே!
பாடும்வண்டாம் நான் வரவா கன்னிஇள மானே!
பானுமதி மாறிவிடும் வானகத்து மீனே!
பார்க்க வுன்னைத் தேடுதடி கன்னிஇள மானே!
(கண்ணிலே....)

கண்ணிலே இருப்பது காவியமோ? ஓவியமோ? என்று அம்பிகாபதி அமராவதியைப் பார்த்துக் கேட்பதாகத் தொடங்குகிறது. இப்பாடல் கவியரசர் பிற்காலத்தில் "கலை எல்லாம் கண்கள் சொல்லும் கலையாகுமா" என்று காவியம், ஓவியம் என்பவற்றோடு கண்ணிலே கலையும் இருப்பதாகப் பாடியதை இரசிக்காதார் இல்லை.

பெண்களின் கண்களை வர்ணிக்காத புலவனே இல்லை என்று சொல்லுமளவுக்குத் தமிழ்ப் புலவர்கள் கண்களை வர்ணித்திருக் கிறார்கள். வேல்விழி, சேல்விழி, கடல்விழி, மான்விழி, மலர்விழி என்றெல்லாம் வர்ணித்திருக் கின்றார்கள் தவிர கண்ணிலே காவியம் இருக்கின்றது. ஓவியம் இருக்கின்றது என வர்ணிக்கவில்லை. கல்லிலே கலை வண்ணங் கண்டார்களே தவிர கண்ணிலே கலை வண்ணம் காணவில்லை. கண்ணதாசனின் பல பாடல்களில் இத்தகைய வித்தியாசமான கற்பனைகளைக் காணலாம்.

முகத்தை வெண்ணிலவாக்கி கண்களை வண்டுகளாக்கி, வெண்ணிலவிலே வண்டு வந்தது எப்படி என்று கேள்வியாக்கிப் பாடும் கற்பனை கவியரசருக்குக் கைவந்தக்கலை.

அமராவதியின் இயல்பான நடை அன்ன நடை. அந்த அன்ன நடை நடக்க முடியாமல் அவளது கால்கள் பின்னுகின்றனவாம். தடுமாறு கின்றனவாம். அதற்குக் காரணம் அமராவதியின் நடையின் மேல் யாருடைய விழிகளோ பட்டு விட்டனவாம். அமராவதியின் நடை அழகில் இரசித்த தன்னுடைய விழிகள்தான் அவளுடைய நடை அழகில் பட்டு நடை தடுமாறுவதற்குக் காரணம் என்று தெரிந்தும் அதை அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பவது போல யார் விழிகள் பட்டனவோ?" என்று தெரியாதது போலக் கேட்கும் அம்பிகாவதியின் உள்ளத்து உணர்வை எவ்வளவு அற்புதமாகக் காட்டுகிறார் கவியரசர்.

சின்ன இடை மின்னல் போன்ற பிரகாசம் இவைஎல்லாம்உனக்குத்தென்றல்தந்தசீதனமோ எனக்கேட்டு, தென்றலை அமராவதிக்குத் தாயாக்கி மகிழ்கிறார் கவியரசர். கார்குழலை வளர்த்தது காளையரைக் கட்டுவதற்காகத் தானோ என்றும் பாரம்பரியமான கற்பனைக்குள் உலாவிய கவியரசர் தனக்குப் பிடித்தமான, தனக்கு நன்கு பரிச்சயமான திருக்குறள் ஒன்றை அற்புதமாகப் பொருத்திவிடுகிறார் அடுத்த அடிகளில்.

நீயே உன் பார்வையாலே எனக்கு நோயைக் கொடுத்தாய் - துன்பத்தைக் கொடுத் தாய் நீ தந்த நோய்க்கு மருந்து வேறெங்கும் இல்லை உன்னிடமேதான் உள்ளது. நீயே பக்கம் வந்து 'முள்ளை முள்ளாய் எடுப்பது போல' நீ உன் பார்வையினால் தந்த நோயை நீ உன் பார்வையினால் மாற்றிக் குணப்படுத்திவிடு என்று அம்பிகாபதி அமராவதியைக் கேட்பதாகக் கவியரசர் பாடியது திருவள்ளுவரின் அற்புதமான கற்பனைப்படியே.

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து.

(குறள் 1091)

"இவளுடைய மைதீட்டிய கண்களில் உள்ளது இருவகைப்பட்ட நோக்கமாகும். அவற்றுள் ஒரு நோக்கும் நோய் செய்யும் நோக்கமாகும். மற்றொன்று அந்நோய்க்கு மருந்தாகும்." என இக்குறளுக்குச் சுருக்கமான பொருள் தருகிறார். டாக்டர்.மு.வரதராசன்.

ஆண்களுடைய உள்ளத்தில் நோயை ஏற்படுத்துகின்ற ஒருவகைப் பார்வையும், அந் நோயைத் தீர்க்கின்ற ஒருவகைப் பார்வையுமாக இரண்டுவகைப் பார்வைகள் பெண்களின் கண்களில் உள்ளன என்ற திருவள்ளுவரின் கருத்தை அம்பிகாபதி அமராவதி காதலிலே பொருத்திக் கற்பனை செய்தார் கவியரசர்.

திருவள்ளுவரின் கருத்தை அப்படியே நினைவூட்டினாலும் அக்கருத்தில் ஒரு மாற்றத்தை யும் செய்து தனது கற்பனையாக்கினார் கவியரசர்.

பார்வையினால் நீ தந்த நோயை உன் பார்வையினாலும் இனி மாற்ற முடியாது. நீ பக்கத்தில் வந்தால் தான் அந்நோய் மாறும் என அமராவதியை அருகே அழைப்பதாக அம்பிகாபதி பாடுகிறான் எனக் கவியரசர் பாடிய கற்பனை அடுத்த கட்டத்திற்குச் செல்கிறதல்லவா.

பார்வையிலே நோய்கொடுத்தாய் கன்னிஇள மானே!
பக்கம்வந்து தீர்த்துவைப்பாய் கன்னிஇள மானே!

காதலியை முத்தமிட விரும்புகின்ற காதலனின் விருப்பத்தை கவியரசர் மிகமிக நாகரிகமான நயமான இலக்கியக் கற்பனையாகப் பின்வருமாறு பாடுகிறார்.

பல்வரிசை முல்லை என்றால் கன்னிஇள மானே!
பாடும்வண்டாய் நான்வரவா கன்னிஇள மானே!

பெண்களின் பற்களைப் பல்வேறு உவமைகளால் வர்ணித்திருக்கின்றார்கள் புல வர்கள், முத்துப்பல் மாதுளை முத்துக்கள், முல்லைப்பூக்கள் என்று பழங்காலக் கவிஞர் களும், 'முளை விடும் செந்நெற் கோலம்', எனக் கவியரசரும் 'ஐ.ஆர்.எட்டுப் பல்லு' என வைரமுத்துவும், எங்கள் நாட்டுக் காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் தனது தீரன் திப்பு சுல்தான் காவியத்தில் "வெண்பிஞ்சுச் சோளத்தின் வரிசைப் பற்கள்" என்றும் உவமித்து வர்ணித்துள்ளார்கள்.

அம்பிகாபதி அமராவதியைப் பார்த்து 'பல் வரிசை முல்லை' என்றார் என யாரோ உவமித்ததைத் தான் ஒப்புக்கொண்டு, முல்லை மலரிலே வந்தமர்ந்து தேன் குடிக்க ரீங்காரமிட்டு வந்தமரும் வண்டைப் போல நான் வரட்டுமா? என்று கேட்பது போலப்பாடும் கவியரசரின் கற்பனை அற்புதமல்லவா.

"உன்வாய் இதழ்களில் முத்தமிட நான் வரட்டுமா" என்ற கருத்தை எவ்வளவு நளினமாக நாகரிகமாக நயத்தோடு விரசமில்லாமல் கவிதை யாக்கிய கவியரசரின் கற்பனையை இரசிக்காமல் விடமுடியுமா.

பல்வரிசை முல்லை என்பது உண்மை யானால், பாடும் வண்டாய் நான் வரலாமா என்ற இந்தக் கற்பனையோடு இன்னொரு புதுமை யையும் இப்பாடலிலே செய்திருக்கிறார் கவியரசர்.

இப்பாடலைப் பாடும் அமராவதியாக, அம்பிகாபதி திரைப்படத்தில் நடித்தவர் பானுமதி. அவரது பெயரையும் இப்பாடலில் பொருத்தமாகக் கருத்தோடு இணைத்துப் பாடினார் கவியரசர்

பானுமதி மாறிவிடும் வானகத்து மீனே!
பார்க்க உன்னைத் தேடுதடி கன்னிஇள மானே!

பானு என்றால் சூரியன். மதி என்றால் சந்திரன். பானுமதி என்பது பானுமதியையும் சூரியசந்திரர்களையும் குறிக்கக்கூடிய சொல், பானுமதி ஒரு சிறந்த நடிகை.

நடிகர்களை 'நட்சத்திரம்' என்று சொல்லும் வழக்கம் தமிழில் உண்டு. நட்சத்திரத்தை விண்மீன் என்று சொல்வது இலக்கிய வழக்கு. இதனை மனத்தில் கொண்டு அமராவதியை வானகத்துமீனே! என அழைத்து, சூரியசந்திரர்கள் மாறிமாறி வருவார்கள். அதாவது பகலும் இரவும் மாறிமாறி வரும் என்ற நியதியைச் சுவைபடச் சொல்கிறார் கவியரசர்.

"வானகத்து மீன்" சினிமா நட்சத்திரமான பானுமதிக்கும் பொருந்தும் அமராவதிக்கும் பொருந்தும். அரச குமாரி, சோழன் குலக்கொடி அமராவதி ஆகாயத்து நட்சத்திரம் கம்பனின் மகனான அம்பிகாபதி தரையில் இருந்து கொண்டு, எட்டாத உயரத்தில் இருக்கும் அமராவதிக்குக் காதல் தூண்டில் போடுகிறான் என்பதையும், இரவு பகல் மாறுவது போல அரசகுமாரியைப் புலவனின் மகன் விரும்புவதும் ஒரு மாற்றமே, உலக நியதியே எனவும் பல உட்பொருள்களை வைத்துக் கவியரசர் சாதனை படைத்துள்ளார் என்றே சொல்லலாம்

இப்பொழுது இந்தப் பாடலை முழுமையாக அம்பிகாபதி அமராவதி காதலோடு சேர்த்துச் சிந்தித்து இரசியுங்கள். இந்தப் பாடலைக் கவியரசு கண்ணதாசன் மகாகவி பாரதியாரின் பாடலொன்றின் அடிப்படையிலேதான் எழுதினார். அந்தப் பாடலின் ஊற்றுக்கண்ணாக விளங்கிய பாரதியாரின் இந்தப் பாடலை பார்ப்போம்.

காயிலே புளிப்பதென்னே?
கண்ண பெருமானே!- நீ
கனியிலே இனிப்பதென்னே?
கண்ண பெருமானே!
நோயிலே படுப்பதென்னே?
கண்ண பெருமானே!-நீ
நோன்பிலே உயிர்ப்பதென்னே!
கண்ண பெருமானே!

காற்றிலே குளிர்ந்ததென்னே?
கண்ண பெருமானே!- நீ
கனலிலே சுடுவதென்னே?
கண்ண பெருமானே!
சேற்றிலே குழம்பலென்னே?
கண்ண பெருமானே!-நீ
திக்கிலே தெளிந்ததென்னே?
கண்ண பெருமானே!

ஏற்றி நின்னைத்தொழுவதென்னே?
கண்ண பெருமானே!- நீ
எளியர் தம்மைக் காப்பதென்னே?
கண்ண பெருமானே!
போற்றினோரைக் காப்பதென்னே?
கண்ண பெருமானே!- நீ
பொய்யர்தம்மை மாய்ப்பதென்னே?
கண்ண பெருமானே!

(வேறு)
போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
கண்ணபெருமானே! நின்
பொன்னடி போற்றி நின்றேன்
கண்ண பெருமானே!

தெய்வப் பாடல்கள் என்ற பகுதிக்குள் இருந்த பாரதி பாடலைக் கவியரசர் காதல் பாடலுக்குள் கொண்டு வந்தார். "காயிலே புளிப்பதென்ன கனியால் இனிப்பதென்ன?" என்று கவியரசர் வேறு ஒரு பாடலிலும் பாரதியின் இந்தப் பாடலைப் பயன்படுத்தியிருந்தாலும் "கண்ணிலே இருப்பதென்னே? கன்னிஇள மானே" என்ற பாடலின் சிறப்பை அப்பாடலில் காணமுடியவில்லை.

கவியரசரின் திரைஇசைப் பாடல்களின் ஊற்றுக் கண்கள் பல இடங்களில் இருக்கின்றன. இப்பாடலின் ஊற்றுக் கண்கள் பாரதி பாடலிலும் திருக்குறளிலும் இருப்பதைக் காணமுடிகின்றது.

அம்பிகாபதி, அமராவதியை நினைத்து எழுதியதாகக் கவியரசர் புனைந்த இந்தப் பாடலை அமராவதியாக நடித்த பானுமதி தன் சொந்தக் குரலில் அருமையாகப் பாடிச் சுவை சேர்த்துள்ளார். இனி ஒரு முறை இப்பாடலைக் கேட்கும்போது என் விளக்கத்தையும் நினைத்து இரசியுங்கள்.

# "தாயக ஒலி" 39ஆவது ஏடு ஒரு கண்ணோட்டம்



**திரு.ச.கணேசமூர்த்தி (சரவணன்)**

"தாயக ஒலி" 39ஆவது ஏடு பொங்கல் சிறப்பிதழாக முன்கூட்டியே வெளிவந்து பெருமகிழ்வு தந்திருக்கின்றது. "புதிய தை பிறக்கப் போகின்றது புதுவாழ்வு தரப்போகிறது" என்பதை கட்டியம் கூறியும் "உழவன் சேற்றிலே கால் வைத்தால்த்தான் உலகோர் சோற்றிலே கைவைக்க முடியும்" என்பதைத் தெளிவுபடுத்தியும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் காட்சிகளுடன் உழவையும் தொழிலையும் மதிக்கும் மாண்புடனான காட்சிகளையும் கண்ணுக்குக் குளிர்ச்சியாக்கும் அழகிய முன் அட்டைப்படத்துடன் இது வெளிவந்திருப்பதானது மேலும் இரட்டிப்பு சந்தோசத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" எனும் மகுட வாக்கியத்தின் கீழ் இரு திங்கள் ஏடாக முற்போக்கு இலக்கியவாதியும் தூரநோக்குச் செயற்பாட்டாளரும் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கு தன்னாலியன்ற பெரும்பணி ஆற்றி வருபவருமான தம்பு சிவா அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டுள்ளமை இவ்வேட்டுக்கு மிகவும் காத்திரமான பெறுமானத்தைக் கொடுத்து நிற்கின்றது.

இவ்வேடு நிலைத்து நீடித்து சேவையாற்று வதற்கு விளம்பரதாரர்களது அனுசரணையும் ஆதரவும் அவசியமானதே என்பதால் முன் அட்டையின் உள்பக்கங்கள் மூன்றும் ஏட்டின் நடுப்பக்கங்கள் நான்கும் வெளி அட்டையும் அதற்கணித்தான பக்கங்கள் மூன்றும் என பதினொரு பக்கங்களில் காணப்படும் விளம்பரங்கள் தவிர நாற்பத்தெட்டுப் பக்கங்களிலே தனது முத்து முத்தான படைப்புக்களை எமக்கீந்துள்ளது இவ்வேடு.

இவ்வேட்டினுள்ளே ஒலித்துஜொலிப்பவையாக பிரதம ஆசிரியரின் பேனாமுனையிலிருந்து, கட்டுரை, கவிதை, சிறுகதை, நகைச்சுவைக்கதை, நடந்ததும் கேட்டதும், நிஜம், உங்கள் விருந்து, நூல் அறிமுகம், தரிசனம், நிகழ்வு, இலக்கியம், வள்ளுவம், உலகவிவகாரம், மருத்துவம், நிதர்சனம், விளையாட்டு, தெரிந்ததை சொல்ல வந்தோம் மற்றும் ஏனையவை என்ற பல்வேறு கூறுகளை சுமந்து கண்ணுக்கும் கருத்துக்கும் மனத்துக்கும் அறிவுக்கும் தீனிபோட்டு கனதியோடு காத்திரம் பெற்று நிற்கிறது இது.

ஆயிரம் சொற்களால் விளக்க முடியாததை ஒரு படத்தினூடாக இலகுவாக விளக்கி விடலாம் என்பார்கள். அதற்கொப்ப வேண்டிய இடங்களில் துல்லியமானதும் அழகானதும் மிகமிகப் பொருத்தமானதுமான படங்களை இட்டு சொற்களினூடாக சொல்ல வந்த சங்கதிக்கு ஊக்குவிசை வழங்கியுள்ளது இத் "தாயக ஒலி".

இவ்வேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளவை தரம் மிக்க தாள்கள். அத்தாள்களில் இடம், வலம், மேல், கீழ் என விடப்பட்டுள்ள இடைவெளிகள், தலைப்புகளும் அவற்றின் கீழ்வரும் எழுத்துக் களும் அவ்வவற்றுக்கு பொருத்தமான எழுத்துப் பருமனைக் கொண்டுள்ளமை மற்றும் தெளி வான எழுத்துக்கள் என்பனவும் எழுத்து, சொல், வசனப்பிழைகள் மிகமிகக் குறைவாக இருப்பதும் வாசகன் இவ்வேட்டை ஒரே தடவை யில் மனச்சலிப்பின்றி வாசித்து முடிக்க ஊக்கமூட்டுபவையாக உள்ளன.

இதில் கட்டுரைகள் ஐந்து உள்ளீர்க்கப் பட்டுள்ளன. அவை அரைப்பக்கம் முதல் இரண்டரைப் பக்கங்கள் மட்டுமே அமைந்து

மிக நிறைவான தகவல்களை உட்பொதித்து வாசகனுக்கு வளமூட்டியுள்ளன.

இவ்வேட்டின் 3ம் மற்றும் 4ம் பக்கங்களில் அமைந்துள்ள முன்னாள் வடக்கு முதலமைச்சர், நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களின் "முயற்சியாண்மை" தலைப்பிலான கட்டுரை முயற்சியாண்மை பற்றிய விளக்கத்தையும் முயற்சியாண்மை செயற்றிட்ட நோக்கத்தையும் தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்பு முயற்சி யாண்மைக்கூடாக பிராந்திய சுயாட்சியே என்பதையும் ஒன்றரைப் பக்கங்களில் மிகப் பவ்வியமாக தோலுரித்து நிற்பதை உதாரணமாகக் காணமுடிகிறது.

அவ்விதமே 12,25,28,47 ஆகிய பக்கங்களில் பதினொரு கவிதைகள் இடம்பெற்று இவ்வேட்டின் முத்தாய்ப்பாய் உள்ளன. அதில் 25ம் பக்கத்தி லுள்ள ஷெல்லிதாசனின் "முக்காலமும் வென்ற மூக்குத்திப் புன்னகை" என்ற கவிதை தாயின் பெருமையையும் அவளின் தியாகத்தையும் பிள்ளையின் நல்வாழ்விற்காக அவள் கொண்டுள்ள ஈடுபாட்டையும் அழகுற எடுத்தியம்பி கண்ணீரை கண்ணோரமாக வரவழைப்பதாயுள்ளது.

"தன் வயிற்றுப் பசி அனலை
வெறும்
தண்ணீரால் அணைத்து
எம் வயிற்றுக்கு ஈன்றாள்
எம்மை ஈன்றவள்"... என்று 22 வரிகளில் தாயன்பை படம்பிடித்துக் காட்டியுள்ளது இப்புதுக் கவிதை.

வாழ்வளித்த காதல் விழிகள், மனிதநேயம் எங்கே இருக்கிறது ஆகிய தலைப்பிலான இரு சிறுகதைகளும் இவ்வேடு பொலிவு பெற உதவியுள்ளன என்றால் அது மிகையில்லை. ராஜனின் ஓவியங்களில் மனதை பறிகொடுத்த சறோஜினி அவனையே காதலித்ததை கொண்டு பின்னப்பட்ட இக்கதை வடகோவை பூ.க.இராசரத்தினத்துடையதாக வாசகனின் மனிதாபிமானத்தை தட்டிக் கொடுப்பதாக புனையப்பட்டுள்ளது வரவேற்கக் கூடியது.

இவ்வேட்டினிலே இடம்பெற்றுள்ள ஒரேயொரு நகைச்சுவைக் கதையான "பிள்ளையார் பிடிக்கப்போய்...." எனும் தலைப்பில் "இணுவை இரகு" தந்துள்ள கதை புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பிள்ளையாருக்கு கும்பாபிஷேகம் வெறும் தண்ணீரபிஷேகமாக மட்டும் நடைபெற்று ஏமாற்றமளித்ததை கருப்பொருளாக கொண்டு சிரிப்பூட்டி சிந்திக்க வைத்துள்ளது.

நிஜமாக நடைபெற்ற சம்பவமொன்று "சினிமாவில் காண முடியாததை..." என்ற தலைப்பில் இவ்வேட்டின் 26ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இந்திய பீகார் மானிலத்தில் நடந்த உண்மைச் சம்பவம் அது. மணமகன் தான் காதலித்த பெண்ணுடன் ஓடி விடவே, தன் மகளை; காதலியுடன் ஓடிவிட்ட மணமகனின் தந்தைக்கே திருமணம் செய்து கொடுத்த விசித்திரத்தையும் அதேவேளை பெண்கள் எதிர்கொள்ளும் கொடுமையையும் அது வெளிச்சமிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மேலும் நூலாசிரியர் தம்பு சிவா அவர்கள் "மக்கள் எதிர்கொள்ளும் அவலங்கள்" என்ற தலைப்பிட்டு தன் பேனாமுனையிலிருந்து உமிழ்ந்துள்ள யானைகளால் மக்கள் அடையும் துன்பதுயரங்கள் உயரதிகாரிகளின் அசமந்தப் போக்குகள், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் அவலங்கள், ஒட்டு மொத்த நாட்டு மக்கள் எதிர்நோக்குகின்ற பொதுவான நெருக்கடிகள், பாதிப்புகள் இவற்றிலிருந்து விடுபட ஏங்கும் ஏக்கங்களை தன்மன ஆதங்கமாக சுட்டியுரைத்துள்ளமை அவரது ஏக்கம் எப்போது நிறைவேறும் என்பதை வாசகர்களின் எதிர்பார்க்கையாகவும் விட்டுச் சென்றுள்ளது.

மொத்தத்தில் இந்த 39ஆவது ஏடு குறைவெதுவுமின்றி நிறைகளையே நிறைவாகக் கொண்டு மிளிர்கின்றது என்பதை மட்டில்லா மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துவதோடு விரல் விட்டு எண்ணக்கூடிய விதத்திலே ஆங்காங்கு இடம்பெற்றுள்ள ஒரு சில எழுத்துப்பிழைகளும் எதிர்காலத்தில் சீராக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையும் கொள்ள முடியும்.

வாழ்க! வளர்க!!.



ஈழத்து இலக்கிய வானில் துருவ நட்சத்திரமாகப் பிரகாசித்து, தமது வாழ்நாளின் பெரும்பகுதியை இலக்கிய மேம்பாட்டுக்கு அர்ப்பணித்து வாழ்ந்த பெரியார் இராமலிங்கம் சிவலிங்கம் (உதயணன்) தமது 85வது வயதில் கனடாவில் காலமான செய்தி அறிந்து உலகத் தமிழர் அனைவருமே அதிர்ச்சியடைந்துள்ளனர். இலங்கை, பின்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் எல்லாம் இலக்கிய ஆளுமைமிக்கவர் என்று முத்திரை பதித்த உதயணனின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

1934இல் இராமலிங்கம் - செல்லாச்சி தம்பதியினரின் மகனாக உடுவிலில் பிறந்த இவர், தமது 24ஆவது வயதில் இணுவிலைச் சேர்ந்த பரமேஸ்வரி என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். மூன்று ஆண்கள் மூன்று பெண்கள் என்று ஆறுபிள்ளைகளுக்குச் சொந்தக் காரனுமாவார்.

1955இல் வீரகேசரிப் பத்திரிகைக்கு ஒரு கவிதை எழுதியதன் மூலம் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தவர். சிறுகதை எழுதுவதையே தனது வாழ்க்கை நெறியாக்கி ஈழத்தின் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அத்தனையிலுமே எழுதித் தள்ளினார். தமிழகச் சஞ்சிகைகளான கல்கி மற்றும் குமுதமும் அவரது எழுத்தின் தரம் உணர்ந்து வாய்ப்புக் கொடுத்தன. சிற்பி சிவ சரவணபவனின் 'கலைச்செல்வி' 1958இல் வெளிவரத் தொடங்கிய காலம் முதல் அவருடன் உதயணனுக்கு இருந்த தொடர்பு அந்யோன்னியமானது. உதயணன் எழுதிய 46 சிறுகதைகளை படித்த சிற்பி 36 சிறுகதைகளைத் தெரிவுசெய்து அவற்றை நூலாக்கம் செய்யும்படியும் அதற்கான அணிந்துரையையும் எழுதிக் கொடுத்திருந்ததாகவும் அறியமுடிகிறது.

1957இல் இருந்து 1961வரை வெளிவந்த 18 கவிதைகள் **"உங்கள் தீர்ப்பு என்ன?"** என்ற தொகுதியிலும், 1964 இல் இருந்து 1980 வரை வெளிவந்த 18 கதைகள் "பிரிந்தவர் பேசினால்" என்னும் தொகுதியிலும் இடம்பெற்றுள்ளன. சிற்பியின் அணிந்துரை "பிரிந்தவர் பேசினால்" என்னும் சிறுகதைத்தொகுதியில் வெளிவந்துள்ளது. சிற்பியுடன் கொண்டிருந்த நட்பு உதயணனின் இலக்கியப் பாதையை மேம்படுத்தியது எனலாம்.

இலங்கையில் அரசாங்க எழுதுவினைஞராகக் கடமையேற்ற சிவலிங்கம் (உதயணன்) அவர்கள் கொழும்பு, புத்தளம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடமையாற்றினார். இனக் கலவரம் காரணமாக புலம் பெயர்ந்து பின்லாந்து நாட்டுக்குச் சென்றார். பின்லாந்து நாட்டுக்குச் சென்ற முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமையையும் பெற்றார்.

"ஒரு வரலாற்று திருப்பம் அது! வழி தெரியாத ஒரு நாட்டில், பெயர் தெரியாத ஓர் ஊரில், திசை தெரியாத ஒரு தெருவில், இனம் தெரியாத எவரோடோ முகம் தெரியாத யாரோடோ வாழப் போகிறோமே என்ற குழப்பங்களை நெஞ்சில் சுமந்து கொண்டு இறுக்கமான இதயத்துடன் இருந்த எனக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டில் பின்லாந்து விழுந்தது. ஆயிரமாயிரம் ஏரிகளடர்ந்த அழகான பூமி. குன்றுகள் குவிந்த குளிர்ப் பிரதேசம். பாரிய காடுகள் மேவிய நாடு. அங்கு காகித ஆலைகள் ஓயாமல் ஓடும். மனித மனங்களை மதிக்கும் மரியாதை தெரிந்த மரபுடைய மக்கள். உள்ளத்தில் குடி புகுந்தால் உயிரையே தருவார்கள். வசிப்பதற்கு வீடும் விலாசமும் தந்தார்கள். தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்கவும் கற்பிக்கவும் வாய்ப்பும் வசதியும் தந்தார்கள். இது இரண்டாவது தாயகம் என்ற தைரியத்தை உள்ளத்தில் தெளிவாக எழுதி வைத்தார்கள். ஹெல்சிங்கி பல்கலைக் கழகத்திலே 19ஆண்டுகள் தமிழ்மொழியைக் கற்பித்ததோடு ஆய்வு உதவியாளராகவும் கடமையாற்றியுள்ளேன்.

பின்லாந்தின் தேசிய காவியமான "கலேவலா"வின் எனது இரண்டு தமிழாக்கங்களையும் பின்லாந்தின் கல்வி கலாசார அமைச்சு மற்றும்

பின்லாந்து இலக்கிய மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஹெல்சிங்கி பல்கலைக்கழகம் வெளியிட்டது" என்று 'உங்கள் தீர்ப்பு என்ன? என்ற நூலில் நூலாசிரியர் உதயணன் 'என்னுரை'யில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பின்லாந்து நாட்டில் வாழ்ந்த காலை உதயணன் பின்னிஷ் மொழியினை நன்கு கற்று அவர்களது தேசிய காவியமான "கலேவலா" வைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அந்தக் காவியத்தை செய்யுள் நடையிலும் உரைநடையிலும் தனித்தனியே தமிழுக்குக் கொண்டுவந்த பெருமை அவரையே சாரும். பின்லாந்தில் 25 வருடகாலம் வாழ்ந்த உதயணன் தமது குடும்பத்தாருடன் கனடாவுக்குச் சென்று அங்கு வாழ்ந்து வரலானார். அங்கு வெளிவரும் 'தாய்வீடு' என்னும் பத்திரிகையில் தமது ஆக்கங்களை வெளியீட்டு வந்தார்.

எல்லா வகையிலும் பெருமைபெற்றுத் திகழ்ந்த இலக்கியச் செம்மலின் மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர் நண்பர்கள் மற்றும் இலக்கிய நெஞ்சங்களுக்கும் 'தாயகஒலி' அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.





"அதிநலப் பண்பும் அடக்கமும் வாய்ந்த
புதுமையர் வாசகர் புகழெழுத்தாளர்
உதயணன் என்னும் சிவலிங்க உத்தமர்
மதிவலர் கற்பனை மாண்பினில் விற்பனர்
சிறுகதை யன்றிச் சீரிய கவிகளும்
அறுசுவை நாவலும் ஆக்கிய ஆற்றலர்
எழிலுறக் கட்டுரை எழுதுங் கலையிலும்
மொழிபெயர்ப் பதிலும் முன்னணி அறிஞர்!"

-வி. கந்தவனம்


சிங்கள, தமிழ் நல்லிணக்கத்திற்கு தனது பேனா முனையில் பணியாற்றி அமரத்துவம் எய்திய

உபாலி லீலாரத்னவிற்கு

ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்


අපගේ බලවත් ශෝකය

OUR DEEPEST SYMPATHIES

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
LONDON TAMILLITERARY ASSOCIATION

No. 09-2/1 Nelson Place, Colombo 06. Sri Lanka.
Tp. 011 236 4124, Mob : 071 867 6482, 0771 877 999
editorthayakaoli@gmail.com

அறிந்ததும் தெரிந்ததும்

## என்றும் பொருந்தும் நாற்காலிப் போராட்டம்

"சரித்திரத்திலே புதுப்புது அத்தியாயங்கள் எழுதப்படுகிறதா என்று எனக்குத் தெரியலே. ஒரே அத்தியாயம்தான் விதம் விதமா வெவ்வேறு பாஷைகளில் எழுதப்பட்டுண்டு வருதுங்கிறது என் அபிப்பிராயம். அந்த ஒரு அத்தியாயத்தையும் ஒரு வரியிலே சுருங்கச் சொல்லிவிடலாம். 'நாற்காலி எனக்குத்தான்' ங்கிறதுதான் அந்த வரி. அது அரசியல் நாற்காலியோ, சமயநாற்காலியோ, கலையுலக நாற்காலியோ, ஆன்மீக நாற்காலியோ எது வேணுமானாலும் இருக்கலாம். மனித நாகரீகத்தின் வரலாறே இந்த நாற்காலிப் போராட்டம்தான். மனித சுபாவத்தின் மையப்புள்ளி அதிகார ஆசை. இது மாறவே மாறாது."

-இந்திரா பார்த்தசாரதியின்
'அஸ்வத்தாமா' சிறுகதையில் இடம்பெற்ற
சொல்லாடல்.

நகைச்சுவைக் கதை

## "ஜோடி வாய்க்கவில்லை"

- இனுவை இரகு -



பணக்காரத் தம்பதிகள். அழகான திருமண ஜோடி. திருமண மண்டபம் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாய் நிரம்பி வழிந்தது.

"விடுப்பு" விஜயரத்தினமும் "அறுவை" அருணாசலமும் திருமணத்திற்கு வந்திருந்தார்கள்.

வழமையான சம்பிரதாயங்கள் முடிந்து தாலியும் கட்டியாயிற்று.

புதுமணத் தம்பதிகளை வாழ்த்த கூட்டம் முண்டியடித்து வரிசையில் நின்றது.

'விடுப்பு' விஜயரத்தினமும் 'அறுவை' அருணாசலமும் வரிசையில் அடுத்தடுத்து நிற்கவேண்டி வந்தது.




விஜயரத்தினத்தால்தான் தன் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியாதே.

முன்பின் அறியாத அருணாசலத்திடம் "திருமணம் பிரமாதம் - சரியான சனம்- சாப்பாடுதான் எப்படியிருக்குமோ தெரியவில்லை!" என்றார்.

பதிலுக்கு அருணாசலம், "ஓமோம், எல்லாம் நல்லாயிருக்கு! சாப்பாடும் பிரமாதமாகத்தானிருக்கும்; இரண்டு பகுதியும் பணக்கார வீடெல்லே!" என்றார்.

விட்டாரா விஜயரத்தினம்? " ஜோடி பிரமாதம்! என்ன பாருங்கோ? என்றார்.

அதற்கு அருணாசலமோ, சரியான ஜோடி கிடைக்கவில்லை; கிடைத்ததைக் காலில் மாட்டிக்கொண்டு வந்துவிட்டேன் !" என்றாரே பார்க்கலாம்.




# Easan & Co.

## Chartered Management Accountants

***SPECIALIST IN ARRANGING COMMERCIAL LOANS***

- **Self Assessment Tax Return**
- **CIS Refunds**
- **Accounts & Book Keeping**
- **VAT Returns**
- **PAYE**
- **Management Accounting**

## S. Eswaranathan ACMA
## (Easan)

196, Merton High Street
South Wimbledon,
London SW19 1AX

Tel : 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 078 0122 7017

18 ஆவது ஆண்டில்...

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடவைகளையும்
தெரிவு செய்து கொள்ளுங்கள்

பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக் கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்



கூறைப் புடவைகள்
பட்டுப் புடவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும்
30% விலைக்கழிவில் !

எமது 17 ஆவது ஆண்டு நிறைவை
முன்னிட்டு சித்திரைப் புத்தாண்டு,
தீபாவளி ஆகிய பண்டிகைக்
காலத்தில் விஷேட விலைக்கழிவு
வழங்கப்படும்.

# SELVARAJA
## Gold House & Textiles

Exclusive Designer Jewellery & Sarees

*You are the best*
*For you we are the best*

**162B, Mitcham Road, London SW17 9NJ**
**Tel: 020 8767 3795 | 07825 005 269**


Western Jewellers
Jewellers & Gem Merchants
வகை வகையான வடிவங்களில்
தரமான தங்க நகைகளை
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள் உங்கள்
வெஸ்டன் ஜுவல்லர்ஸ்க்கு
First Tamil Jewellery Shop in UK
Specialise in 22ct. Gold, White Gold, Platinum & Diamond Jewellery
TOOTING BRANCH
230, UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW
UNITED KINGDOM
TEL: 020 8767 3445
WEMBLEY BRANCH
5, PLAZA PARADE
EALING ROAD, WEMBLEY
HA0 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909
SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS
SILK EMPORIUM SAREES
SILK
EMPORIUM
122, Upper Tooting Road,
London SW 17 7EN, United Kingdom,
Tel: 020 8672 1900
Opening Hours : Monday-Saturday (10.30 am. 6.30 pm.) Sunday (11.30 am. - 6.30 pm.)

# Luckyland

## BISCUIT MANUFACTURERS




**NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA**

TEL: +94 081 2420574, 2420217 FAX : +94 081 2420740

E-mail: luckyland@sltnet.lk